Registered as a News Paper

விலை: 12.00

# ஈழநாதம்

பக்கம் – 16


வெள்ளிநாதம் Weekly

நாதம்—14 | வெள்ளி—08 | 18–24 ஏப்பிரல் 2003



## பேச்சுவார்த்தை உறுதிமொழிகள் கடைப்பிடிக்கப்படவில்லை.

## பரஸ்பர நம்பிக்கையை இழக்கச்செய்யும்...



## ஈராக்கைத் தோற்கடித்தவர்கள்?...

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 18.04.2003

# எமது சிறுவர்களின் எதிர்காலம் சில அதிர்வுகளும் பதிவுகளும்

வடக்கு கிழக்கில் போரினால் பாதிக் கப்பட்ட சிறுவர்களின் உரிமைகளைக் கண் காணிப்பதற்கு ஐ.நா சிறுவர்பாதுகாப்பு நிதியத் தால் நிர்வகிக்கப்படும் கண்காணிப்பு செயற்பாட்டு அமைப்பு ஒன்று பேணப்படும் என்று தெரிகிறது.

கிளிநொச்சியில் இருநாட்கள் நடை பெற்று முடிந்த சிறுவர் நலன் பேணுதல் தொடர் பான ஆய்வுப் பட்டறையின் முடிவில் இத்தீர் மானம் எடுக்கப்பட்டிருப்பதாகக்கூறப்படுகிறது.

இப்பட்டறையில் சிறுவர்களின் புனர் வாழ்வு தொடர்பான பல்வேறு பிரச்சி னைகள் ஆராயப்பட்டதாகவும் அதன் பிரகாரமே இந்த சிறுவர் நலன் பேணல் தொடர்பான பிரகடனம் விடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

வரவேற்கப்பட வேண்டியவிடயம் தான்.

எமது தாயகப் பகுதியில் போரின் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எதிர்காலம் என்பது மிகவும் நுணுக்கமாக, பன்முகப்பட்ட நோக்கில் ஆராயப்படவேண்டிய விடயமாகும்.

போர் எம்மக்கள் மீது சிங்கள பேரின வாத அரசுகளால் வேண்டு மென்றே மூர்க்கத் தனமாகத் திணிக்கப்பட்டவேளையில், அந்த போர் எமது எதிர்காலத் தலைமுறையை மிகவும் திட்டமிட்ட முறையில் நாசம் செய்வதையே இலக்காகக் கொண்டிருந்தது.

போரின் முன்னோடி மூலகாரணமாக அமைந்த இன ஒடுக்கு முறையின் மிகவும் மோசமான அம்சமாக எமது சிறுவர்களின் அறிவு வளர்ச்சியை கட்டுப்படுத்தி அவர்களின் ஆளுமையை சிதைத்து, மந்தபுத்தியுள்ள தலைமுறையாக அவர்களை உருவாக்க நடைமுறைப்படுத்தப்பட்ட தரப்படுத்தல் என்ற கல்விசார் கொள்கையே இருந்தது.

அதுவே எமது இளைய தலை முறையினர் தமது சுயத்தைச் சிதைக்கும் கொடு மையை எதிர்த்து எழுச்சி கொள்ளவும் வைத் தது.

அவ்வாறு உணர்வு எழுச்சி கொண்டு தமது வாழ்வியல் உரிமைகளுக்காக போராட முனைந்தவர்களை சிங்கள அரசுகள் பயங்கர வாதிகள் எனப்பட்டம் சூட்டின.

பயங்கரவாதம் என்று பிரசாரம் செய் யப்பட்ட எமது இளைய தலைமுறையினரின் விழிப்புணர்வை அடக்க இராணுவ அணுகு முறை கட்டவிழ்த்துவிட்ட கொடூரத்தையும் சிங்கள அரசே மேற்கொண்டது.

கடந்த நான்கு தசாப்தகால போர் பொதுவாக தமிழ்மக்களுக்கெதிரானதாக இருந் தாலும் அது குறிப்பாக வடக்கு கிழக்கு வாழ் தமிழ் சிறுவர்களின் எதிர்காலத்தை உளவியல் மற்றும் உடலியல் ரீதியில் நிர்மூலமாக்கு வதையே இலக்காக் கொண்டிருந்த தென்பதே உண்மையாகும்

இராணுவம் பாடசாலை மாணவர் களையும், சிறுவர்களையும் இலக்குவைத்தே தனது போர்ரீதியான, உளவியல் ரீதியிலான தனது சகல மிருகத்தனமான நடவடிக்கை களையும் மேற்கொண்டது.

இறந்த சிறுவர்கள்

ஊனமுற்ற சிறுவர்கள்

உளவியல் குறைபாடுகளுகக்குள் ளான சிறுவர்கள்.

பாதுகாப்பை இழந்த சிறுவர்கள்.

அநாதைகளான சிறுவர்கள்.

கல்வியை இழந்த சிறுவர்கள்.

சிறுவயதிலேயே உழைத்து குடும் பத்தை காப்பாற்றுமளவுக்கு வறுமை நிலைக் குத்தள்ளப்பட்ட சிறுவர்கள்.

பிச்சை எடுக்கும் சிறுவர்கள், தெரு வோர வியாபாரிகளாகமாறிவிட்ட சிறுவர்கள்.

கைது செய்யப்பட்டு பாலியல் கொடு மைகளுக்குள்ளான சிறுவர்கள்... என இப்பட் டியல் மிக நீளமானது.

இவர்களின் நிலைகுறித்து உலக சமூகம் இதுவரை எவ்வித அக்கறையும் காட்டி யதில்லை.


ஆனால், தமது இருப்பைக் காப்பாற்ற எதிரிகளின் கொடுமைகளில் இருந்து தப்ப தம்மை வேறுவழியின்றி போராளிகளாக மாற்றிக் கொண்ட சிறுவர்கள் குறித்து மட்டும் மனிதநேய அமைப்புகள் பெருமளவில் அறிக்கை வெளி யிட்டு ஆர்ப்பரித்து வந்துள்ளனர்.

நாகர்கோவிலில் சிறுவர்களை துரத்தித் துரத்திக் குண்டுகளை வீசி அழித்த சந்திரிகா அரசு. ஆலோசகர் கதிர்காமர் சிறுவர்கள் போராளிகளாக உருவாகவேண்டிய சூழலை உருவாக்கிய கொடியவர்களை தலைவியாகத் தூக்கி கூத்தாடிக்கொண்டு அந்தச் சிறுவர் களுக்காக முதலைக் கண்ணீர் வடித்த கோமாளித்தனமும் இங்குதான் நடந்துள்ளது.

இப்படிச் சொல்வதன் மூலம் சிறுவர் கள் ஆயுதபாணிகளை மாறுவதை நாம் நியாயப் படுத்துகிறோம் என்று கருதவேண்டியதில்லை. அத்தகைய தோர் நிலை சிறுவர்களுக்கு ஏற்படு வதை எவரும் விரும்பவுமில்லை.

ஆனால் சிறுவர்கள் குறித்து பிரக டனம் வெளியிடும் போது இவையெல்லா வற்றையும் நினைவூட்ட வேண்டிய அவசியம் ஏற்படவே செய்கிறது.

பாடசாலைகளை இராணுவ முகாம் களாக்கும் அரசுகளும் அதனை அப்புறப்படுத்த முடியாது உயர்பாதுகாப்பு வலயம் என்று இராணுவபாதுகாப்பு குறித்து ஆராயும் சர்வதேச சமூகமும் சிறுவர் நலன் தொடர்பான பட்டறை ஆய்வு பிரகடன வாசகங்களை எவ்வாறு நடை முறைப்படுத்தப் போகிறது என்பது தான் பலகோடி டொலர் பெறுமதியான கேள்வி....



## தூரனின் பார்வை

# சந்திரிகாவின் இந்திய விஜயமும் சந்தேகத்தை ஏற்படுத்தும் பேச்சுகளும்...

**அண்மையில** இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்ட சிறிலங்காவின் சனாதிபதி அங்கு ஜெயலலிதாவில் தொடங்கி, பிரதமர் வாஜ்பாய் சனாதிபதி அப்துல்கலாம் ஆகியோர்வரை பல தலைவர்களையும் சந்தித்துப் பேசியுள்ளார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சந்திரிகாவின் இந்த பயணத்தின் பிரதான நோக்கம் எது வென்பது சந்திரிகாவுக்கு மட்டுமே தெரியும். ஊடகங் களில் வெளிவரும் செய்திகளையும் தகவல்களையும் வைத்துக் கொண்டு அதனடிப்படையில் இவ்விஜயத்தின் உள் நோக்கத்தை வரையறை செய்து விட முடியாது.

இன்னும் சொல்லப் போனால் பல அதிருப் திகளுடனும் தான் இந்தியா அவதானித்து வருகின்றது என்பது ரகசியமான ஒன்றல்ல.

சந்திரிகாவின் நிலையும் இதுவே தான்

வெளிப்படையாக இருதரப்புமே சமாதான முயற்சிகளுக்கு தமது பூரணமான ஒத்துழைப்பு இருப்பதாக அடிக்கடி தொடர் அறிக்கைகளை விடுத்து வந்தாலும் கூட, இருதரப்பினரதும் அணுகுமுறைகளும், கண்ணோட்டமும், அதிலிருந்து வேறுபட்ட வையாகவே உள்ளது. இதனை அரசியல் அவதானிகள் உன்னிப்பாகவே கவனித்து வருகின்றார்கள்.

தற்போது மேற் கொள்ளப்பட்டு வரும் சமாதான நடவடிக்கை நகர்வுகளின் பலத்தையும் பலவீனத்தையும் இந்தியத் தலைவர்களுடன் சிறிலங காவின் சனாதிபதி ஆராய்ந்தார் என்று ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும்இது ஒரு வெறும் கருத்துப் பரிமாறல்களுடன் கூடிய மேம்போக்கான ஆய்வாக இருக்க முடியாது என அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

பன்முக நோக்கிலான இந்தச்சந்திப் புகளின் பின்னணியில் பலமான - மறைமுகமான - உள்நோக்கங்கள் இருப்ப தாக கருதும் அரசியல் நோக்கர்கள், சிறிலங்காவின் தேசிய அரசியல் போக்கில் அடுத்தகட்டமாக தான் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து இந்தியத் தலைவர்களுக்கு விளக்கமளிக் கவும், தனது எதிர்கால அரசியல் அபிலாஷைகளுக்கு இந்தியாவின் பரிபூரண ஆதரவைக் கோரவும், இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான நகர்வுகளில் இந்தியாவின் அபிலாஷைகள் புறக்கணிக்கப்பட மாட்டாது என்பதற்கு உத்தரவாதமளிக்கவும், சனாதிபதி இந்த விஜயத்தை பயன்படுத்தியுள்ளார் என்ற ஆய்வாளர்களின். மதிப்பீட்டை நிராகரித்து விட முடியாது.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான நோர்வேயின் அனுசரணையுடன் கூடிய சமாதான முயற்சிகளின் நகர்வுப் போக்கினைஆரம்பகால முதலே, வெளிப் படையாகக் காட்டிக் கொள்ளமுடியாத சந்தேகத்துடனும், மிகுந்த எச்சரிக்கையுடனும்



இலங்கையின் இனப்பிரச்சினை உட்படஏனைய உள்விவகாரங்களில் ஏனைய அந்நிய சக்திகள் தலையீடு செய்வதை இந்தியா எந்தக் கட்டத்திலும் மனப்பூர்வமாக விரும்பியதில்லை.

இத்தகைய தலையீடுகள் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்திய ஆதிக்க வலுவைப் பாதிக்கும் என்பதுடன் இந்தியா வின் புவிசார் அரசியல் அபிலாஷைகளுக்கு நெருக்கடியை உருவாக்கியும் விடும் என்ப தில் அது மிகவும் எச்சரிக்கையுடனிருக்கிறது ஆனால் இலங்கையின் இனவிவகாரம் உட்பட பல்வேறு பிரச்சினைகளிலும், கடந்த காலங்களில் இந்தியத் தலையீடுகளுக்கு கிடைத்த வெளிப்படையானதும் மறை முகமானதுமான இராஜதந்திரப் பின்னடை வுகளும், இராணுவ உத்தி முறைத் தோல்வியும் அதனை இலங்கை தொடர்பான விடயங்களில் அண்மைக்கா லங்களில் ஒரு தூரத்து அவதானியாகவே ஒட்டா மலும், வெட்டாமலும் இரு க்க வைத்து வந்துள்ளது.

இருந்தபோதிலும் இலங்கை மீதான தனது பிடியை இந்தியா ஒரு போதுமே நழுவவிடத் தயா ராக இல்லை. அதே போன்று இலங்கையின் எந்தவொரு ஆட்சியாளரும், அது ரணிலாக இருந்தாலும் சரி, சந்திரிகாவாக இருந்தாலும் சரி, தற்போது ஜே.வி.பியாக இருந்தாலும் சரி இந்தியாவுடன் முரண்பட்டுக்கொண்டு தமது அரசியல் அபிலாஷைகளை எட்டிவிட முடியாது என்பதில் எச்சரிக்கையாகவே இயங்கிவருகின்றனர்.

இதன் வெளிப்பாடான தொடர் நிகழ்வுகளை நாம் தெளிவாகவே அவதா னிக்கக் கூடியதாகவே உள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தையின் ஒவ்வொரு கட்டநகர்வின் முடிவிலும் அரச தரப்பு பிரதிநிதிகள் பீரிஸ், மொறகொடஎன மாறிமாறி டெல்லி தலைவர்களின் தரிச னத்திற்கு சென்று விடுகிறார்கள், பேச்சு வார்த்தைகளின் பெறுபேறுகள் குறித்து விளக்கமளிக்கிறார்கள், ஆலோசனை களையும் அறிவுறுத்தல்களையும் பெறுகிறார்கள், சமாதான முயற்சிகளுக்கு தொடர்ந்தும் இந்தியா ஆதரவு வழங்க உறுதி என்று கூறிக்கொண்டே திரும்பி வருகிறார்கள்.

அதனையடுத்து சில நாட்களில் சந்திரிகாவின் பிரதி நிதியாக அவரது வெளியுறவுகளுக்கான ஆலோசகர் டெல்லிக்கு விரைவார். என்னமோ பேசுவார், எப்படி எப்படி யெல்லாமோ அங்கிருந்து அறிக்கைவிடுவார். பின்னர் திரும்புவார்

இங்குவந்ததும் அவரது குரலும், தொனியும் கருத்தும் மாறியிருக்கும் அரசின் சமாதான முயற்சிகளைக் கடுமையாக விமர்சிப்பதாகவும், அல்லது கண்டிப்பதாகவும் சிலவேளைகளில் எச்சரிப்பதாகவும் கூட அமையும்.

அவரின் இந்திய விஜயத்திற்கும், இத்தகைய கருத்து வெளிப்பாடுகளுக்கும் ஏதோவோர் தொடர்பு இருப்பதாகவே தெரியும்.

ஒரு காலத்தில் இந்திய - இலங்கை, ராஜீவ் ஜே.ஆர் உடன்பாட்டை மூர்க்கத்தனமாக எதிர்த்து, இந்திய விஸ்தரிப்புவாத கொள்கை பற்றி எச்சரித்து, இந்திய உற்பத்திகளை பகிஸ்கரிக்குமாறு மக்களை அச்சுறுத்தி கட்டளையிட்டு, பொதுவுடமைத் தேசியவாதக் கொக்கரிப்பை மேற்கொண்டவர்களான ஜே.வி.பியினர் கூட இப்போது இந்தியாவின் நலன் பேணும் கட்சியினராகிவிட்டனர்.

இதனை அவர்களின் அரசியல் சுயதன்மை வங்குரோத்து நிலைக்குப் போய்விட்டதன் வெளிப்பாடாகவே கருத முடிந்தாலும் இந்தியாவின் அரசியல் அபிலாஷை என்ற மாயப் பொறிக்குள் அவர்களும் விழுந்து விட்டார்கள் என்பதையும் அது வெளிப் படுத்தவே செய்துள்ளது.

(15ம் பக்கம் பார்க்க....)

# வன்னியை கட்டியெழுப்புவது

நிலாந்தன்

கடந்த மாதக்கடைசி நாளன்று மல்லாவிக்குப்போயிருந்தேன்.

இலையுதிர் காலம் வேப்பஞ் சருகுகளை கிறவல் சாலைகளின் மீது தூவி விட்டுச்சென்றிருந்தது.

கடும் வெயில்;

அனேகமான சாலைகள் காய்ந்து வெறிச்சோடிக்கிடந்தன.

அன்றையநாளில் ஒரு நகைக்கடை மூடப்படுவதாகவும், மல்லாவி ஆஸ்பத்திரியில் இயங்கி வந்த எம்.எஸ்.எவ். தனது சேவைகளை முடித்துக்கொண்டு வெளியேறுவதாகவும் பட்டினவாசிகள் சொன்னார்கள்.

"எல்லாரும் போகிறார்கள். நகரில் இருந்து சிறிது ஒதுக்காக இயங்கிவந்த ஒரு தொலைத்தொடர்பு நிலையம் மட்டும் நகரின் மையத்துக்கு வந்திருக்கிறது. மற்றும்படி எல்லாருமே போகிறார்கள்.".... என்று ஒரு கடைக்காரர் சொன்னார்.

இன்னுமொருவர் சொன்னார் - அண்மையில் நகரின் மையத்தில் இருக்கும் சிவன் கோயிலில் திருவிழாக்கள் நடந்ததாம். மிகக் குறைந்தளவு பக்தர்களே கலந்து கொண்ட திருவிழாக்களின் முடிவில் தேர்த்திருவிழாவின் போது எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக குறைந்தளவு பக்தர்களே கலந்து கொண்டார்களாம். இது குறித்து உரையாற்றிய கோயிற்பூசகர்; மல்லாவியில் உள்ள மொத்த சனத்தொகையை சுட்டிக்காட்டி அதில் மிகச்சொற்பமானவர்களே தேருக்கு வந்திருக்கிறார்கள்.... என்று கவலைப்பட்டாராம்.

இத்தகவல்களைச்சொன்ன மல்லாவி வாசி மேலுமொன்றைச் சொன்னார். ரிவிரச கொண்டு வந்த வீக்கமெல்லாம் வற்றிய பிறகு வந்த தேர்த்திருவிழா இது. முன்னைய சுமார் ஆறு ஆண்டு கால பக்தர்களின் தொகையுடன் ஒப்பிடுகையில் இது மிகச்சொற்பமானதாகத் தோன்றுகிறது. அதுவும் அசாதாரணமாக வீங்கிய சனத்தொகைக்கு ஏற்ப கோயிலைப் பெருப்பித்து உற்சவங்களையும் பெரிய அளவில் செய்து விட்டு, இப்பொழுது சமாதானம் கொண்டு வந்த இடப்பெயர்வோடு சனங்களெல்லாம் வடிந்து விட்ட ஒரு நிலையில், முன்னைய ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் வீழ்ச்சி மிகப்பெரிதாத் தோன்றுகிறது என்று.

அதாவது பிரச்சினை ஒப்பீடுதான் என்று.

கிளிநொச்சி தவிர வன்னியில் உள்ள அனேகமான எல்லாச்சிறு பட்டினங்களுக்கும் இது பொருந்தும்.

முன்னைய ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் இச்சிறு பட்டினங்கள் திடீரென்று காய்ந்து வறண்டு வெறிசாகிப்போய்விட்டது போல ஒரு தோற்றம்.

கிளிநொச்சியின் எழுச்சிக்கு அவை கொடுத்த விலையா இதெல்லாம்?

இல்லை. அப்படிச்சொல்ல முடியாது.

கிளிநொச்சியின் எழுச்சி எனப்படுவது அதன் நேரடியான அர்த்தத்தில் ஸ்கந்தபுரத்தின் வீழ்ச்சியே.

ஏனெனில் யுத்த காலங்களில் கிளிநொச்சியில் இருந்து இடம் பெயர்ந்து சனங்கள் பெரும்பாலும் அருகில் இருந்த ஸ்கந்தபுரத்திலேயே சென்று குடியேறினார்கள். கிளிநொச்சி மீட்கப்பட்டதும் அவர்கள் அங்கிருந்து ஊர்திரும்பிவிட்டார்கள்.

மற்றும்படி கிளிநொச்சியின் எழுச்சியால் வன்னியின் ஏனைய சிறுபட்டினங்கள் பலியாகின. அல்லது தேய்ந்து போயின என்று கூறிவிடமுடியாது.

உண்மை நிலை என்னவெனில் -ரிவிரச இடப்பெயர்வுக்கு முன்பும் அவை ஒப்பீட்டளவில் வளர்சி குன்றிய சனச்செறிவு குறைந்த சிறுபட்டினங்களாக அல்லது பேரூர்களாகவே காணப்பட்டன.

ரிவிரச கொண்டு வந்த திடீர் வீக்கம் அசாதாரணமானது. அது ஒரு இயல்பான வளர்ச்சியே யல்ல. இப்பொழுது அது வற்றிவிட்டது. அவ்வளவுதான்.

உதாரணமாக மல்லாவி சமாதானத்திற்கு முன்பு வரை சில ஆண்டுகளாக ஒரு ஐ.என்.ஜி.ஓ. நகர மாக இருந்து வந்தது. ஒரு சிறு பட்டினத்தில் உலகில் உள்ள பெரும்பாலான ஐ.என்.ஜி.ஓ.க்கள் செறிவாக காணப்பட்டமை என்பது மிகவும் அபூர்வமான ஒரு தோற்றப்பாடே.




ஒரு அவதானி சொன்னார்... ''மல்லாவியில் தான் சமாதானம் தொடங்கியது. முதலில் ஹெலிகொப்ரர் இறங்கியதும் முதலில் சொல்கெய்ம் வந்ததும் மல்லாவியில்தான். ஆனால் சமாதானத்தின் பலன்கள் மிகவும் பிந்தி வருவதும் மல்லாவிக்குத் தான் போலிருக்கிறது...." என்று.

மல்லாவியும் அது போன்ற சிறு பட்டினங்களும் இன்று திடீரென்று வறண்டு காட்சியளிப்பது அங்கெல்லாம் சமாதானம் வரப்பிந்தி விட்டதோ என்று ஒரு தோற்றத்தைத் தரப்பாக்கிறது.

ஆனால் உண்மைநிலை என்னவெனில் சமாதானம் அதன் சரியான அர்த்தத்தில் கிளிநொச்சிக்கும் கூட வந்து சேரவில்லை என்பதே.

புலிகளின் நிர்வாக மையங்கள் கிளிநொச்சியில் குவிக்கப்பட்டிருப்பதாலும், சமாதானப் பேச்சுவார்த்தைகளின் ராஜதந்திர நகரமாக அது காணப்படுவதாலும் செயற்கையான, மிகவும் அசாதாரணமான ஒரு கவர்ச்சி கிளிநொச்சிக்கு வந்திருக்கிறது என்பதுக்கும் அப்பால் இப்பொழுதும் கிளிநொச்சி சத்ஜெயவின் அழிவுகளில் இருந்தும் வலிகளில் இருந்தும் முழுவதுமாக மீண்டெழுந்துவிடவில்லை.



அதற்கு வேண்டிய முழுஅளவிலான நிவாரணமோ நஷ்டஈடோ அந்த சனங்களுக்கு தரப்படவில்லை.

தமது சொந்தப்பிரயாசையின் பேறாக திரட்டிய காசை வைத்து வீடுகளைத்திருத்துவது என்றாலும் கூட இன்னும் சில போகங்களுக்கு வயல் செய்தால் தான் அதற்குரிய ஆகக் குறைந்தபட்ச காசையாவது திரட் டலாம். அல்லது யாராவது வெளி நாட்டிலிருந்து காசு அனுப்ப வேண்டும்.

மற்றும்படி திரும்பத்திரும்பத் திருத்தப்படும் கண்டி நெடுஞ்சாலையின் மினுக்கத்தையும் பளபளப்பையும் வைத்துக்கொண்டு கிளிநொச்சியை மதிப்பிடமுடியாது.

கடந்த மாதம் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் பரிசளிப்பு விழா நடந்தது. அதில் கலந்து கொண்டு பேசிய கிளிநொச்சி அரச அதிபர் ஒரு விசயத்தைச்சொன்னார்- இங்கு வந்து சேவை செய்ய எஞ்சினியர், எக்கௌண்டன் போன்ற உயர் அதிகாரிகள் தயங்குகிறார்கள் என்றும், ஏனென்று கேட்டால் தமது பிள்ளைகளைப் படிப்பிக்க உரிய எல்லா வளங்களையும் உடைய ஒரு பாடசாலை இல்லை என்ற காரணத்தைக்கூறுகிறார்களாம்.... அப்படிப்பட்ட ஒரு உயர்தரத்திலான பாடசாலையை கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தை அரச அதிபர் அங்கே வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அதாவது ஒரு நடுத்தர வர்க்கத்தின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யவல்ல ஒரு பாடசாலையின் தேவைபற்றி அரசஅதிபர் கூறியுள்ளார்.

இதை இன்னொரு விதமாகவும் பார்க்கலாம்- அப்படி ஒரு பாடசாலைக்குரிய தேவை இதுவரையிலும் இங்கே உணரப்பட்டிருக்கவில்லை. அதாவது ஒரு பலமான நடுத்தரவர்க்கம் இங்கே இன்னமும் முழுஅளவில் எழுச்சி பெறவில்லை என்பதே.

அப்படி ஒரு நடுத்தரவர்க்கம் எழுச்சி பெற்றிராத ஒரு வெற்றிடத்திலேயே கிளிநொச்சி தலைநகரமாக, ராஜதந்திர நகரமாகக்கட்டியெழுப்பப்படுகிறது. என்பது ஒரு பெரிய முரணே.

வன்னிப்பெருநிலத்தில் ஒப்பீட்டளவில் அத்தகைய ஓரளவுக்கு நகரமயப்பட்ட கல்விப் பாரம்பரியம் ஒன்று முள்ளியவளையில் முன்பு இருந்தது. வித்தியானந்தாக்கல்லூரியை சூழ்ந்து காணப்பட்ட இக்''குட்டி யாழ்ப்பாணம்'' பிந்நாளில் யுத்தத்துட் சிக்கிச் சிதைந்து போய்விட்டது.

இப்பொழுது கிளிநொச்சி.

இது கிளிநொச்சியின் காலம்.

ஆனால் உரிய பொருளாதார கலாசார உளவியல் உட்கட்டுமானங்கள் எதுவுமின்றி, நிலையற்ற சமாதானத்தின் மீது கிளிநொச்சி செயற்கையாகக் கட்டியெழுப்பப்படுகிறது.

சத்ஜெயவுக்கு முன்பெலாம் கிளிநொச்சி அதன் பொருளாதார அர்த்தத்தில் வன்னியில் காணப்பட்ட ஒரு முதன்மைப் பட்டினமாகத் திகழ்ந்தது. ஒரு சந்தை நகரம் என்ற கவர்ச்சி அதற்கிருந்தது. இந்தியாவிலிருந்து பிரபல பாடகர்களை வரவழைத்து பாடவைத்த பெருமையும் அதற்கிருந்தது. அது ஒரு இயல்பான வளர்ச்சி.

ஆனால் இப்பொழுது நிகழ்வதோ அதன் பொருளாதார உளவியல் அர்த்தத்தில் இயல்பற்றது. அசாதாரணமானது.

உண்மையில் கிளிநொச்சியைக் கட்டியெழுப்புவது என்பது முதலில் அதன் உட்கிராமங்களிலிருந்தே தொடங்கப்படவேண்டும். கண்டி வீதியிலிருந்து அல்ல. இது எல்லா வன்னிச் சிறு பட்டினங்களுக்கும் பொருந்தும்.

யாழ்ப்பாணத்தை கட்டியெழுப்புவது என்பது குறிப் பிடத்தக்க அளவுக்கு கண்டி வீதியை புனரமைப்பதில் இருந்து தொடக்கப்பட வேண்டிய ஒன்றுதான்.

ஆனால் வன்னியைக்கட்டியெழுப்புவது என்பது முதலில் வன்னியின் சிறு குளக்குடியிருப்புகளையும் சிறு பட்டினங்களையும் எந்திரமயப்படுத்தி, கைத்தொழில் மயப்படுத்தி, இலத்திரன்மயப்படுத்தி இவற்றின் மூலம் இயன்றளவு நகரமயப்படுத்துவதில் இருந்தே தொடங்கப்பட வேண்டும்.

யுத்தநிறுத்தம் வந்து 15 மாதங்களாகிவிட்டது. ஆனால் இப்பொழுதும் கூட வன்னி, பூகோளக் கிராமத்தின் புறம்போக்கு நிலமாகத்தான் காணப்படுகிறது.

அதன் சமூக பொருளாதார கலாசார வளர்ச்சிகளைப்பொறுத்த வரை, அதன் விருத்தியுறாத உட்கட்டுமான வலைப் பின்னலைப் பொறுத்தவரை வன்னி இப்பொழுதும் தகவல் யுகத்தின் தனித்து விடப்பட்ட தீவுகளில் ஒன்றுதான்.

என்றபடியால் தான் ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் பாடசாலை மாணவர்களை ஏற்றியிறக்க மாட்டு வண்டி கொடுக்கப்பட்டிருக்கிறது.

மேலும், யுத்தநிறுத்தம் வந்தபோது வன்னிக்கு குறைந்தது 60 தொலைபேசி இணைப்புக்களாவது தரப்படும் என்று கூறப்பட்டது.

ஆனால் இது வரையிலும் அந்தளவு தொகை தொலைபேசி இணைப்புக்கள் தரப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

வன்னிக்கென்று தற்காலிகமாக கிளிநொச்சியில் வைக்கப்பட்டிருக்கும் நடமாடும் தொலைத் தொடர்புப் பரிவத்தனை நிலையம் அதற்குரிய வசதிகள் எதுவுமற்றது. என்றும் குறைகூறப்படுகிறது.

கெப்பிட்டிகொலவவிலிருந்த பரிவர்த்தனை நிலையமே கிளிநொச்சி எடுத்துவரப்பட்டதாம் . இதில் மிக அவசியமான எயார் கொண்டிஷன வசதிகள் இல்லை. குறைந்தபட்சம் விசிறிகள் கூட இல்லையாம். இதனால் தொலைபேசி இணைப்புக்கள் அடிக்கடி துண்டிக்கப்படுகிறதாம்.

இத்தனைக்கும் வன்னியில் இருந்து மட்டும் ரெலிக்கொம் நிறுவனத்திற்கு மாதாந்தம் ஏறக்குறைய 50 லட்சமாவது போகிறது என்று கூறப்படுகிறது.

குறைந்தது இதில் வரும் லாபத்தைக்கருதியேனும் அரசாங்கம் முன்பு வாக்களிக்கப்பட்ட தொலைபேசி இணைப்புக்களை தந்திருக்க வேண்டும். ஆனால் அதில் அவர்களுக்கு அக்கறையில்லை.

மெய்யாகவே வன்னிப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது என்றால் உரிய தொலைத்தொடர்பு வலைப்பின்னலும் உட்கட்டு மானமும் உருவாக்கப்பட வேண் டும்.

ஆனால் கடந்த 15 மாத கால யுத்த நிறுத்தம் தென்னிலங்கை வர்த்தக நிறுவனங்களுக்கு சந்தைப்பரப்பை அகட்டிய அளவுக்கு தமிழ்ப்பகுதிகளில் புதிய பெரியளவிலான உற்பத்தி முயற்சிகள் ஏதும் தொடக்கப்படக்கூடிய நிலைமைகளை திறந்து விடவில்லை.

அதாவது, கடந்த 15 மாத கால "சமாதானம்" தமிழர்களை தொடர்ந்தும் நுகர்வோராகத்தான் வைத்திருக்கப் பார்க்கிறது. உற்பத்தியாளர்களாய் அல்ல.

வரும் ஜூனில் யப்பானில் நடக்கவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டோடு நிலைமைகளில் ஏதும் திருப்பங்கள் உண்டாகலாம் என்றொரு எதிர்பார்ப்பு முன்பு இருந்தது. ஆனால் அந்த மாநாட்டுக்கு முன்னோடியாக வொஷிங்டனில நடந்த மாநாட்டில் புலிகள் அழைக்கப்படவில்லை.

இது தொடர்பாகப்புலிகள் காட்டியிருக்கும் காட்டமான எதிர்வினை சில சமயம் டோக்கியோ மாநாட்டில் ஏதாவது தாக்கங்களை ஏற்படுத்தக் கூடும்.

இதற்கிடையே சமாதானத்துக்கான நிதியில் தனக்குரிய பங்கை நோர்வே கடந்தகிழமை உலக வங்கியில் வைப்பிலிட்டுள்ளது. இது வொஷிங்டன மாநாட்டைக்குறித்து ஆத்திர மடைந்திருக்கும் புலிக ளைச் சாந்தப்படுத்தும் நோக்கி லானதாய் இருக்கலாம்.

எதுவுவோ - சமாதானத் துக்கான எதிர்பார்க்கப்பட்ட நிதியின் ஒரு பகுதி அசையத்தொடங்கி விட்டது.

இதன்படி சமாதானமும் அடுத்தடுத்த கட்டங்களுக்கு அசைய வேண்டியிருக்கும். அதாவது வன்னியைக்கட்டியெழுப்புவது பற்றி முன்னெப்பொழுதையும் விட சீரியஸாகவும் பயன்பொருத்தமாகவும் சிந்திக்கவேண்டிய கட்டம் வந்து விட்டது.

ஆனால் வொஷிங்டன மாநாடு பற்றிய புலிகளின் புதிய நிலைப்பாட்டால் டோக்கியோ மாநாடு நிச்சயமின்மைகளுக்குள் சிக்கிவிடும் நிலைமைகள் உருவாகி வருகின்றன.

இதில் புலிகளை அமைதிப்படுத்தும் முயற்சிகளில் அரசாங்கமும் சர்வதேச சமூகமும் சமயோசிதமாகவும் தீர்க்கதரிசனமாகவும் நடந்து கொள்வதில்தான் இனி எல்லாமும் தங்கியிருக்கிறது. •

காட்சியோடு கண்திருப்தி அடைவதில்லை; கேட்பதோடு காது நிறைதவில்லை -ஸாலமன் மன்னர்

# ஈராக்கை தோற்கடித்தது அமெரிக்கா மட்டுமல்ல

# ரஷ்யாவும், சீனாவும், ஜேர்மனியும் தான்

மு. திருநாவுக்கரசு










மார்ச் 20 அன்று ஈராக்கிற்கு எதிராக அமெரிக்காவின் முதலாவது குண்டு வெடிக்க முன்னமே அமெரிக்கா அந்த யுத்தத்தில் அடிப்படை வெற்றியை ஈட்டிவிட்டது.

அது எப்படி?

"பயங்கர" ஆயுதங்களை ஈராக் வைத்திருக்கக்கூடாதென்றும் அவ்வாறு அவற்றை ஈராக் வைத்திருந்தால் இராணுவ நடவடிக்கை மூலம் அவை களையப்பட வேண்டும் என்றும் ஐ.நா. தீர்மானம் நிறைவேற்றியது. ரஷ்யாவும், சீனாவும், ஜேர்மனியும், பிரான்சும் அமெரிக்காவுடன் சேர்ந்து ஆதரித்தன.

ரஷ்யாவோ, சீனாவோ அன்றில் பிரான்சோ ஏதாவது ஒரு நாடு வீட்டோ எனப்படும் வெட்டு வாக்கைப் பிரயோகித்திருந்திருந்தால் ஐ.நா.சபையின் தீர்மானம் நிறைவேறியிருக்க முடியாது.

அதாவது ஈராக்கின் ஆயுதங்களைக்களைய வேண்டும் என்கின்ற தீர்மானம் ஒரு கட்டளைதான். ஆயுதம் இராணுவப் பண்டம் என்பதால் ஆயுதத்தைக்களைய வேண்டும் என்ற கட்டளை ஒரு இராணுவ நடவடிக்கைதான்.

எனவே முதலாவது குண்டு வெடிக்க முன்னமே ரஷ்யா, சீனா, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய இன்னோரன்ன நாடுகள் எல்லாம் அமெரிக்கா, பிரிட்டன் என்பவற்றுடன் சேர்ந்து ஈராக்கை அடிப்படையில் தோற்கடித்துவிட்டன.

ஈராக்கிடம் இருப்பதான "பயங்கர" ஆயுதங்களை விடவும் மிகப் பயங்கரமான ஆயுதங்களை, அதுவும் அளவாலும் தொகையாலும் அதிகளவிலான பயங்கர ஆயுதங்களை அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ் போன்ற பல நாடுகள் கொண்டிருக்கின்றன. பாகிஸ்தானும், இந்தியாவும் கூட அணுவாயுதங்களை அண்மையிற் தயாரித்துவிட்டன. இஸ்ரேலிடம் கூட இதற்கான அடிப்படைவல்லமைகள் உண்டு.

நிலைமை இப்படி இருக்கையில் ஈராக்கிற்கு எதிராக மட்டும் இந்த ஆயுதக்களைவுத்தீர்மானம் ஐ.நாவில் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தில் நேரடி இராணுவ நடவடிக்கைக்கு வகை செய்யப்பட்டும் இருந்தது.

இவ்வாறான தீர்மானத்தில் பங்கெடுத்த, அதனை எதிர்க்காத ரஷ்யா, சீனா, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஈராக்கிற்கு எதிரான மொத்த யுத்தத்தில் தமக்குப் பங்கில்லை என்றோ அன்றி தமது கரங்கள் இதிற் சுத்தமானவை என்றோ ஒரு போதும் கூற முடியாது.



இவ்வாறு இத்தர்க்கத்தை சுட்டிக் காட்டும் போது அது மறுவளமாகத் தனது சொந்தமக்களை அடக்கி ஒடுக்கிய, சிறுபான்மை இனங்களை நசுக்கிய (குர்திஷ் இன மக்கள், ஸியா முஸ்லிம் பிரிவினர்), ஈரான், குவைத் ஆகிய அயல் நாடுகள் மீது மிலேச்சத்தனமான படையெடுப்புக்களை மேற்கொண்ட எதேச்சதிகாரி சதாம் ஹுசையினை நியாயப்படுத்துவதாக அமையாது. ரஷ்யா, சீனா, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய இந்த நாடுகளெல்லாம் ஈராக்கின் ஆயுதங்களைக்களைய ஏன் அமெரிக்காவின் கரங்களைத் தூக்கிப் பிடித்தன?

இதற்கான ஒரு பதில் முதலிற் தெளிவானது. அதாவது இவர்கள் எல்லோருமே பச்சைக் கொடியின், இஸ்லாத்தின் எதிரிகள். உலக வர்த்தகத்தில் மேற்காசியாவின் (மத்திய கிழக்கின்) புவியியல் அமைவிடமும் இதற்கொரு காரணம்.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அணிக்குள் இருக்கும் ஜேர்மனியும், பிரான்சும் ஈராக்கிற்கு எதிரான தமது தலைவரின் நேரடி இராணுவ நடவடிக்கையை ஏன் அரங்கத்தில் எதிர்த்தனர்?

இதற்கான பதில்களை இனி மேற்தான் கண்டாக வேண்டுமாயினும் ஜேர்மனி, பிரான்ஸ் என்பவற்றுடன் கூடவே வத்திக்கானும் இணைந்து எதிர்ப்புக் காட்டியதால் ஏற்பட்ட ஒரு நல்லவிளைவே இங்கு கவனத்திற் கொள்ளலாம். அதாவது இது ஒரு புதிய சிலுவை யுத்தம் என்ற குரோத உணர்வை இஸ்லாமியரின் நெஞ்சங்களில் இல்லாது செய்துவிட்டது என்பதுதான். ஏன் எதிர்த்தார்கள் என்ற வாதப் பிரதிவாதங்களுக்கு அப்பால் இது ஒரு விளைவு என்பது தான் இங்குள்ள தர்க்க நிலையாகும். இதனை அதே விளைவிற்கூடாக இன்னொரு பக்கம் பார்த்தால் சிலுவை யுத்தம் என்ற எதிருணர்வில் இஸ்லாமியரின் வளரக்கூடிய ஐக்கியத்தை இது தடுக்க உதவியுள்ளதென்றும் கூறலாம்.

ஈராக்கின் ஆயுதங்களைக் களையச் செயல் பூர்வமான கட்டளையை ஐ.நா. சபை மூலம் பிறப்பித்த இந்த நாடுகள் எல்லாம் அமெரிக்காவின் நேரடி இராணுவ நடவடிக்கைக்கு எதிராக வாய்மூல எதிர்ப்புக்களைத்தான் காட்டினார்கள் என்ற கொடூரயதார்த்தம் இங்கு பெரிதும் கருத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்று. இதில் ரஷ்யா, சீனா, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய இந்த நாடுகள் ஒரு போதும் கொள்கைக் கற்பு பேசமுடியாது.

நேட்டோ அணி நாடுகளான ஜேர்மனியும், பிரான்சும் தமது தலைவரின் நேரடி இராணுவ நடவடிக்கையை இறுதியில் ஆட்சேபிக்கத் தொடங்கியமைக்கு ஒரு பொருளாதாரக் காரணி இருப்பது போல் தெரிகின்றது. ஒரு கட்டத்தின் பின்பு யுத்த இலாபத்தின் மிகப் பெரும்பாகம் அமெரிக்காவுக்குச் சென்றடையப்போகின்றது என்பது தெளிவாகிவிட்டது. ஜோர்ஜ் புஷ்ஷின் ஒரு முனைப் பாங்கான முடிவுகள் இவர்களை ஓரளவு ஓரங்கட்டின.

முதலாவது அர்த்தத்தில் இந்த யுத்தமென்பது பீரங்கி பூட்டிய எண்ணெய் கப்பல் என்பதே உண்மை. இரண்டாவது அர்த்தத்தில் உலக வர்த்தகத்திற்கான கடல் வழியைப் பேணுவது.

இந்த எண்ணெய்க் கப்பலில் ஜேர்மனியினதும், பிரான்ஸினதும் பீரங்கிகளைப் பூட்டினாலும் கூட அவை பெருமளவுக்கு அமெரிக்க கப்பல்களே என்ற வகையில் எண்ணெயின் மிகப் பெரும் பாகம் அமெரிக்காவைத்தான் சென்றடையும் என்பதை புஷ்ஷின் ஒரு முனைப் பான தீர்மானங்கள் தெளிவாக்கிவிட்டன.



உலகிலுள்ள எண்ணெய்க் கம்பனிகளில் மிகப்பெருமளவானவை அமெரிக்க கம்பனிகள் தான் எனவே யதார்த்தத்தின் படி எண்ணெயின் பெரும் பாகம் அமெரிக்காவைத்தான் சென்றடைய முடியும். இப்பின்னணியில் புஷ்ஷின் ஒரு முனைப்பான தீர்மானங்கள் இந்த நாடுகள் இரண்டாந்தரத்திற்தான் வைக்கப்படும் என்பதை உறுதிப்படுத்திவிட்டன.

இந்த வெடிப்பை கோட்பாட்டு ரீதியாக விளங்குவது மேலும் காத்திரமானது. வர்க்க ஒற்றுமை, வர்க்கப் போட்டி, வர்க்க முரண்பாடு, வர்க்கப் பகைமை ஆகிய நான்கு நிலைகளை ஆதிக்க வர்க்கம் அடைகின்றது.

முழுப்பூகோளத்தையும் வர்த்தகமயப்படுத்துவதில் அமெரிக்கா, பிரிட்டனுடன் ஜேர்மனி, பிரான்சுக்கும் வர்க்க ஒற்றுமையுண்டு. அவ்வாறு பிடிக்கப்படும் சந்தைகளை அதிகம் தமதாக்கிக் கொள்வதில் இவற்றிற்கிடையே வர்க்கப் போட்டி உண்டு. இந்த வர்க்கப்போட்டியில் யுத்த அனுகூலங்களை புஷ் அதிகம் இறுக்கிப் பிடிக்க முனைந்தபோது அது வர்க்க முரண்பாட்டை மேலே தள்ளிவிட்டது. அதுதான் ஜேர்மனியினதும் பிரான்சினதும் தவிப்பு.

உலகவர்த்தகப் பொருளாதாரத்தில் இறுகிக் கொண்டு வந்த அச்சை யுத்த வெற்றி மூலமான எண்ணெயின் பிரவாகம் வரப்போகும் சில பத்து ஆண்டுகளுக்கு இலகுவாகச் சுழரச் செய்யப்போகின்றது. அதுவும் அமெரிக்காவிற்கு சாதகமான அச்சாகச் சுழரப் போகின்றது. வரப்போகும் சில பத்தாண்டுகளுக்கு இதன் மூலம் அமெரிக்காவின் வர்த்தகப் பொருளாதாரம் அதிகம் ஸ்தாபிதமடைய வாய்ப்பேற்பட்டுவிடும். இது ஜேர்மனியையும், பிரான்சையும் அமெரிக்காவின் குட்டி மாநிலங்களாக்கி விடுமோ என்ற அச்சம் இவைகளிடம் எழவாய்ப்புண்டு.

யுத்தம் உண்மையான அர்த்தத்தில் பீரங்கி பொருத்திய எண்ணெய்க் கப்பல் என்பதே சரியானது. சதாமின் கொடுங்கோண்மை இந்தக் கப்பல்களின் இலகுவான நகர்வதற்குரிய வாய்க் காலை வெட்டியது. வரலாற்றுப் பெருமை மிக்க ஈராக்கிய மக்களோ யுத்தத்தில் பற்றற்று பங்கற்றுப் போயினர். இதற்கெல்லாம் வழிவாய்க்கால் தேடிவிட்ட சதாமோ ஏதோ ஒரு நாட்டின் அரண்மனையில் தனது மேனி மெருகிற்காக கழுதைப் பாலில் இப்போது குளித்துக் கொண்டிருப்பார். ஆனால் ஈராக்கிய எதிர்காலச் சந்ததியினரோ அந்நியரால் சக்கை வேறாய்ப் பிழிந்தெறியப்பட்ட தமது மண்ணில் முத்துக்குளிக்கவேண்டிய துயரத்திற்கு தள்ளப்பட்டுவிட்டனர்.

பஞ்சு நூற்பது உட்பட, எல்லா வேலையும் உன்னதமானது; உழைப்பு, உன்னதமானது -தாமஸ் கார்லைல்

# நறுக்கென...



சிறிலங்காவின் ஆட்சி பீடத்திற்கும் அதிகாரப் பீடத்திற்குமான பனிப்போரின் உச்சக்கட்ட நிகழ்வுகள் அடுத்து வரும் வாரங்களில் ஆரம்பமாகி விடும் போல் இருக்கிறது.

ரணிலின் ஆட்சிக்குள் ஊடுருவி அதன் அதிகாரங்களை ஒவ்வொன்றாகப்பிடுங்கி மீண்டும் தனதாக்கிக்கொள்வதன்மூலம், ஆட்சிக்கு நெருக்கடியை உண்டு பண்ணி, அரசை தாமாகவே பதவி விலக நிர்ப்பந்திக்கும் மூலோபாயத்தையோ, அல்லது அரசின் மீது 'தேசியபாதுகாப்பு' குறித்த குற்றச்சாட்டுக்களையோ முன்வைத்து அதனடிப்படையில்

## ஊடகத்துறையை குறிவைக்கும் சந்திரிகா.... மீண்டும் ஒரு இருண்ட காலத்திற்கான அச்சம்

ஆட்சியைக்கலைத்து இடைக்கால அரசொன்றை நிறுவி அதன்மூலம் தேர்தல் ஒன்றை உடனடியாக எதிர்கொள்ளவேண்டிய ஆபத்தை தவிர்த்துக்கொண்டு ஆட்சிப் பொறுப்பை மீண்டும் தனதாக்கிக் கொள்ளமுயலும் தந்திரோபாயத்தையோ சந்திரிகா கையாள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

ரணில் அரசுக்கு சமாதான செயற்பாடுகளின் அடிப்படையில் கிடைத்துவரும் சர்வதேச அநுசரணையும், அங்கீகாரமும், பெருமளவிலான நிதியுதவிகளுக்கான உத்தரவாதமும், சிக்கல்களுக்கு மத்தியிலும் தொடரும் அமைதிப்பேச்சுவார்த்தைகளும், ஒரு நீண்டகால போக்கில் பொ.ஐ. முன்னணிக்கோ இன்னமும் முழுமையான உடன்பாடுகளுக்கு வராத சந்திரிகா-ஜே.வி.பி. கூட்டணிக்கோ, அல்லது தனியாக சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கோ நல்லதல்ல என்பது! சந்திரிகாவுக்குத் தெரியும்.

சர்வதேசத்திற்கு தன்னை சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரியென இனம் காட்டுவதன் ஆபத்தும், அரசை நிறைவேற்று அதிகார பலத்தை மட்டும் பிரயோகித்து பதவி நீக்கம் செய்வதன் மூலம் ஏற்படக்கூடிய குழப்பங்களும் கூட அவருக்கு தெரியும் என்பதால் தான் ஜே.வி.பி. யினரின் அபிலாஷைகளுக்கேற்ப உடனடியாக தனது அதிகாரபலப் பிரயோகத்தை அரசின் மீது செலுத்தாமல் அதனை நினைவுப் படுத்தியபடி தொடர்ந்தும் எச்சரிக்கை அச்சுறுத்தல்களை விடுத்துவருகிறார் என்பதும் தெளிவு.

எனினும் கூட வெகுசனத் தொடர்பூடகங்கள் மீதான கட்டுப்பாட்டை தனது கைக்குள் வைத்திருக்க வேண்டியதன் சமகால அவசியத்தை அவர் அதிகளவில் உணர்ந்துள்ளார் போல் தெரிகிறது.

ஊடகங்களோ பிரச்சார யுத்தத்தின் அத்தியாவசிய சாதனங்கள். இவை ரணில் அரசின் கைகளின் பிடிக்குள் இருப்பது தனது எதிர்கால அரசியல் நலன்களுக்கு உகந்ததல்ல என்ற அச்சம் சந்திரிகாவுக்கு எழுந்துள்ளது வியப்பில்லை.

இந்த நிலையில் ஊடக அமைச்சை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்வருவதன் மூலம் மீண்டும் ஊடகவியல் சுதந்திரத்தில் பொ.ஐ.முன்னணி ஆட்சிக்கால அழுத்தங்களை மெல்ல மெல்ல ஏற்படுத்த அவர் யோசிப்பதாகவே தெரிகிறது.

சந்திரிகாவின் இந்த நகர்வு, அதாவது ஊடகத்துறையை தனது அதிகார வரம்பிற்குள் கட்டுப்படுத்திக்கொள்ள நினைக்கும் தன்மையானது மீண்டும் ஒரு 'அவசரகால நிலைமை' யின் கீழான இருண்ட காலம் ஒன்றை உருவாக்கும் இலக்குடன் கூடிய முன்னோடிச் செயற்பாடு என்றே கூறலாம்.



**இன்றைக்கு** சிறிலங்காவின் தேசிய நலன் குறித்தும், சிங்கள மக்களின் எதிர் காலம் குறித்தும் மிகவும் பொறுப்புணர்வுடனும் தனது எஜமானியின் அரசியல் எதிர்காலம் குறித்த ஆழ்ந்த அக்கறையுடனும், ஒரு விசுவாசத்திற்குரிய 'அடிமை' ஆலோசகராக- கருங்காலித் தனத்துடன் சிந்திக்கும் ஒரே நபர் 'திருவாளர்' லக்ஷ்மன் கடிர்காமர் தான்.

கடந்த சில வாரங்களாக அவர் விடுத்துவரும் தேசியமற்றும் சர்வதேச மட்டத்திலான அறிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்து வந்தால் அவரது பொம்மலாட்ட கோமாளித்தனத்தின் தன்மையை புரிந்துகொள்ளமுடியும்.

## 'கசக்கும் வெளியுறவுகள்...' கடிர்காமரின் கத்தல்கள்...

சர்வதேச ஆதரவு மற்றும் அங்கீகாரத்துடன் நோர்வே நாட்டின்அநுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் அமைதிப் பேச்சுவார்த்தைகளின் அரசியல் தளமான போர் நிறுத்த உடன்படிக்கையை புலிகளுக்கு சலுகைகளைவழங்க உருவாக்கப்பட்டது என்றும் நோர்வே அரசு விடுதலைப்புலிகளுக்கு சாதகமாக செயற்படுகிறது என்றும் புலம்பியுள்ளார் இந்த முன்னாள் வெளியுறவு அமைச்சர்.

லண்டனில் வைத்தே இந்த அலம்பலைப் புலம்பியுள்ள சந்திரிகாவின் வெளியுறவு மற்றும் அரசியல் ஆலோசகர், இந்த உடன்படிக்கை இலங்கை மக்களையும், இலங்கையையும் கருத்தில் கொள்ளாத விடுதலைப்புலிகளுக்கு மட்டும் சலுகைகளை வழங்கும் ஒரு ஒப்பந்தம் என்று இவ்வுடன்பாட்டை வர்ணித்துள்ளார்.

'இலங்கை அரசையும் உதவி வழங்கும் நாடுகளையும் பயன்படுத்திக்கொண்டு தமது தேவைகளை நிறைவு செய்துகொள்வதுடன் எவ்வித எதிர்ப்புமின்றி அனைத்து நாடுகளுக்கும் விடுதலைப்புலிகள் சென்று சுதந்திரமாக செயற்பட்டுவருகிறார்கள்' என்று அவர் கூறியிருப்பது தான் அவரது 'ஒப்பாரியின் உச்சக்கட்டம்'

முன்னர் அமைச்சுப் பதவியில் இருந்த காலத்தில் அனைத்து வசதிகளையும் அனுபவித்தபடி உலகம் சுற்றும் வாலிபனாக எல்லா நாடுகளிலும் வலம் வந்து விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொண்டு அவர்களை பயங்கரவாதிகளாக நிருபிக்க பகீரதப் பிரயத்தனம் செய்து அதன்மூலம் கிடைத்த சில வெற்றிகளின் மூலம் பௌத்த சிங்கள பேரினவாதிகளின் பேரன்பிற்குரிய'தமிழின விரோதீயாக தன்னை பிரகடனம் செய்து கொண்ட கதிர்காமருக்கு தனது பிரச்சார மகத்துவம்- 'கெட்டிக்காரன் புழுகு எட்டே நாளில் தெரியும்' என்ற வகையில் பிசுபிசுத்துப் போவதைப் பார்த்தால் புலம்பி ஒப்பாரி வைக்கத்தோன்றாதா?.....என்ன?

எல்லாவற்றிக்கும் அப்பால் அமெரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளின் அணுகுமுறைகளையும் இப்போது கடிர்காமர் கசப்புடன் பார்ப்பவராகவும் விமர்சிப்பவராகவும் மாறிவருகிறார்.

என்ன செய்வது

ஒரு காலத்தைய வெளியுறவு அமைச்சருக்கு இப்போது வெளிநாட்டு உறவுகள் கசப்பானதாக மாறத்தொடங்கியுள்ளது...

'சீச்சீ... இந்தப்பழம் சரியில்லை... புளிக்கும்' என்று கூறிய நரியின் இயலாமை குறித்த பாலர் பாடசாலை கதையும் கடிர்காமரை நினைக்கையில் நினைவுக்கு வரவே செய்கிறது.



**சிறிலங்காவின்** அரசியலில் பௌத்தமதபீடங்கள் வகிக்கும் முக்கியத்துவமும், செல்வாக்கும் அளவிடமுடியாத ஒன்றாகும் எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் பௌத்த பீடாதிபதிகளின் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளாது, அல்லது புறக்கணித்துவிட்டு அக்கட்சி ஆட்சியைத்தக்கவைத்திருப்பதென்பது சாத்தியமற்றவிடயமாகும்.

அதேபோல் எதிர்க்கட்சிகளும் அவர்களின் அரசியல் அழுத்தங்களுக்கெல்லாம் தலையசைத்து, அவர்களுடன் கருத்தியல்ஆலோசனைகளுக்கு கட்டுப்பட்டால் மட்டுமே அவர்களால் தொடர்ந்து அரசியலில் நிலைத்திருக்கமுடியும்

## மல்வத்தைபீட நாயக்கரும் மகிந்தராஜபக்ஷவும்

என்பதிலும் ஐயமில்லை.

பௌத்த மத பீடங்களின் மும்மணிகள் என வர்ணிக்கப்படும் (Triple Gems) மல்வத்தை, அஸ்கிரிய, மற்றும் களனி மதபீடங்களின் மகாநாயக்கர்கள் தான் சிறிலங்காவின் பௌத்த சிங்கள பேரினவாத அரசியல் சித்தாந்தங்களின் மூல நாயக்கர்களுமாவர்.

புத்தத்தையும், சங்கத்தையும், தம்மதத்தையும் சரணடையுங்கள் என்று உபதேசித்துக்கொண்டே சிறிலங்காவை யுத்தத்திடம் சரணடைய வைத்த சாதனைக்கு இவர்களின் பங்கு அளப்பரியது.

அண்மையில் இந்த மும்மணிகளுள் ஒருவரான மல்வத்தை பீட மகாநாயக்கரான றம்புக்வெல விபஸ்ஸிதேரர் சொல்லியுள்ள ஒரு கருத்தை இங்கே குறிப்பிட வேண்டியுள்ளது.

அதாவது ஐ.தே.கட்சி மற்றும பொ.ஐ.முன்னணி ஆகியவற்றின் மீது பொது மக்களுக்கு நம்பிக்கையில்லாது போய்விட்டதாகவும், அவர்கள் மாற்று வழியொன்றைக் கேட்கின்றனர் என்று அவர் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.!

அதுவும் யாருக்குச்சொல்லியுள்ளார் என்றால், பௌத்தசிங்கள சமூகத்தின் காவலனென அவர்களால் பட்டம் சூட்டப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவிடம் தான்....

இந்த இரு பெரும் கட்சிகளும் திருப்திகரமாக செயற்படவில்லை.... திருப்தி என்றால் எந்த வகையான திருப்தி என்று கேட்கிறீர்களா?

பண்டாரநாயக்காவின் கொள்கைகளுக்கு அமைவாக நடக்கவில்லையாம்...

எப்படி இருக்கு?


அப்ப அவர்கள் மாற்றுவழி என்றால் எதனைக் கருதுகிறார்களாம்? பண்டாரநாயக்காவின் 'தனிச்சிங்கள'த்துவச்சிந்தனையுடன் கூடிய வழிகாட்டலைத்தானே...

மகிந்த ராஜபக்ஷவிடம் அதனை அவர்கள் வலியுறுத்தக் காரணம்....

அவர் தான் பௌத்தசிங் கள இனத்தின் காவலன்...

பண்டாரநாயக்காவின் வாரிசுகளை விடவும் மகிந்த ராஜபக்ஷ கடும் பேரினவாதியாக இருப்பார் என மல்வத்தபீடம் நம்புகின்றது போலும்....

## மதவடி மயிலர்



**செய்தி:**- வடக்கு கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி தனித்துப் போட்டியிட யோசனை.

**மயிலர்**: கண் கெட்டபிறகு சூரிய வணக்கம் செய்யிற வேலை யெண்டால் இது தான் பாருங்கோ... சிறிமாவோடையும், சந்திரிகாவோடையும் கூட்டுச்சேர்ந்து போடக்கூடாது வேசமெல்லாம் போட்டு ஆடக்கூடாத ஆட்டமெல்லாம் ஆடி தங்களை தனித்து விலாசத்தை துலைச்ச பிறகு சாயம் போன செஞ்சட்டைக்கு சாயமேத்த முயலினம் போலை ஒண்ட வந்த பிடாரி ஊர்ப்பிடாரியைத் துரத்தின கதை போலை, ஜே.வி.பி வந்து கம்யூனிஸ்டுகளைக் கலையப் பண்ணி ஒரு புரட்சி செய்திட்டினம் பாருங்கோ.

**செய்தி:**- வடமராட்சி கடற்பரப்பில் இந்திய மீனவர் தொல்லை அதிகரிப்பு....

**மயிலர்:**- எங்கட மீனவரை அழிக்கிறதெண்டே சிங்களக் கடற்படை உக்கிரம் கொண்டு நிக்குது..... எங்கடை கடல்ல எங்கட சனம் தொழில் செய்ய இறங்கவே பயப்பிடுகுது... இதுக்குள்ள இந்திய மீனவர்... சீன மீனவர் என்று ஆக்கிரமிப்பு வேறு.... பிச்சை எடுக்கிற பெருமானிட்டை பிடுங்கித் திண்னுற அநுமாரா திரியுதுகள்... ஒரு வேளை சிறிலங்கா கடற்படைதான் இதுக்கும் அநுசரணை வழங்குதோ....

**செய்தி:**-இந்தியா சென்றுள்ள சந்திரிகா பிரபல சோதிடர்களைச் சந்திப்பதில் ஆர்வம்,...

**மயிலர்**:சோதனை கடுமையா இருக்குப்போலை சோதிடர்களை நாடிப்பறந்திட்டா... முதல்லை அவரைச்சுத்தியுள்ள கதிர்காமர், அநுரா, விமல்வீரவன்ச, மங்களசமரவீர போன்ற நவக்கிரகங்களை உரிய வீட்டிலை இருத்தி வைச்சா அம்மாவுக்கு நல்ல காலம் வரும்... ஆனால் எல்லாக்கிரகமும் ஒரே கோட்டிலையெல்லே நிக்குது.... எந்தக்கிரக சாந்தியும் சரிவராது பாருங்கோ... உதைவிட காசி ராமேஸ்வரம்... எண்டு போய் கங்கைகளிலை மூழ்கி செய்த பாவங்களைக்கழுவினா நல்லது அம்மணி...

அனைத்தையும் காணும் கண், தன்னைத்தானே காண்பதில்லை -தாவீது மன்னன்

# பன்முகம் =16



# இராணுவ சோதனைச்சாவடிப்புலனாய்வு

**சிறிலங்காவின்** 55ஆவது சுதந்திர நாளன்று (04.02.2003) நான் அவசரமாக வவுனியாவுக்குப் போகவேண்டியிருந்தது. இராணுவத்தினரின் ஓமந்தை சோதனைச் சாவடியில், உடற்சோதனை, பொதிச் சோதனைகளை முடித்துக் கொண்டு இறுதிக்கட்டமாக அடையாள அட்டைபதியும் இடத்தில்-

"என்ன பேரு?"

"எங்க போறீங்க?"

"எங்க இருந்து வாறீங்க?"

என்ற கேள்விகளுக்கு பதில் சொல்லிக்கொண்டு நிற்கின்றேன். பதிவு செய்யும் சிறிலங்காவின் காவல்துறைப் பெண்ணுக்குப் பக்கத்தில் ஒரு நபர் என்னையே பார்த்துக்கொண்டிருந்தார். அப்பெண் பதிவு செய்து முடிந்ததும் அடையாள அட்டையை அவரிடமிருந்து வாங்கிப் பார்த்து அதிலிருந்த எனது பெயரையும் சொந்த ஊர் பெயரையும், படித்து விட்டு ஏதோ மிகவும் பழக்கப்பட்டவர் போன்று "உங்கட ஊரில நான் வேலை செய்திருக்கிறேன். எனக்கு அங்கே எல்லா இடமும் தெரியும். கொஞ்சம் வாங்களேன் கதைப்போம்." என்று கூறி எனது சம்மதத்தைக் கேட்காமலே எனது அடையாள அட்டையுடன் பக்கத்தே இருந்த விசாரணைக் கூட்டுக்குள் அழைத்துச் சென்றார்.

அவர் புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர் என்பது சொல்லாமலே விளங்கியது. விசாரணை ஆரம்பமானது. அவரது கேள்விக்கு நானும் பதில் சொல்லத் தொடங்கினேன். வன்னியில் நான் இருக்கும் கிராமத்தை அறிந்து கொண்ட அவர் "உங்களைப் போல ஆட்களிட்டைத்தான் சரியான விபரம் அறியலாம். ஐயா ஏன் நீங்கள் வன்னியை விட்டு வெளிக்கிடாமல் இருக்கிறீங்க? அங்க வேலை செய்யிறீங்களா?"

"நான் ஒரு வேலையும் செய்யவில்லை. எனது மகள் வாறடிசம்பர் பரீட்சை எடுக்கிறா... அதுக்கிடையில பாடசாலை மாற்ற முடியாது அதுதான் வன்னியில இருக்கிறன். எனது மூத்த பிள்ளைகள் உதவி செய்கிறார்கள்"

"ஆ! மகள் படிக்கிறாவா? இன்றைக்கு சுதந்திரதினம் தானே. அந்தப்பக்கம் எப்படி நடக்குது"

"நான் காலையில 5.30 மணிக்கே புறப்பட்டுவிட்டேன் அதனால என்ன நடக்கிறது என்று என்னால சொல்ல முடியாது. ஆனால்' அப்படி ஒரு கொண்டாட்டம் இன்றைக்கு நடைபெறுகிறது என்ற அடையாளமே இல்லை."

"எப்படி எல்.ரீ.ரீ. யோட மக்கள் ?"

"என்றைக்கும் போல சந்தோசமாகத்தான் இருக்கிறாங்க?"

"புலிகள் வரி எல்லாம் வசூலிக்கிறாங்களே. அது பற்றி மக்கள் என்ன கதைக்கிறாங்க.

"அதில சிலருக்குப் பிரச்சினை என்பதை நான் மறுக்கவில்லை. இன்னொரு பக்கம் நியாயம் இருக்கிறதையும் மறுக்க முடியாது. ஏனென்றால் தமிழ் மக்களுக்கு எதிராக அரசு நடத்திற யுத்தத்திற்கு தமிழ்மக்கள் அளிக்கும் வரியில் இருந்து பாதுகாப்பு நிதி எடுக்க முடியுமானால் தமிழ் மக்களை பாதுகாக்கிறதுக்காக எல்.ரீ.ரீ. செய்யிறயுத்தத்துக்கு, எங்கட பிள்ளைகளான போராளிகளுக்கு வரி என்ற பெயரில் உதவுறதில தவறு எதுவும் இல்லைத்தானே."

"அரசாங்கம் வரி அறவிடுவதற்கும், போராட்டக்குழு வரி அறவிடுவதற்கும் வித்தியாசம் இருக்குதல்லவா"

"நீங்கள் சொல்லுறதை நியாயம் என்று எடுத்துக் கொண்டால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில ஏனைய குழுக்கள் வரி அறவிடவும், கப்பம் பெறவும் அரசு அனுமதித்தது எப்படி நியாயமாகும்?"

வரி பற்றிய கேள்விகளை அத்துடன் நிறுத்திக் கொண்ட அவர். "இப்ப இந்த சமாதானப் பேச்சு வார்த்தை வெற்றி பெறும் என்று நினைக்கின்றீர்களா?"

"வெற்றி பெறவேண்டும் என்பது தான் எல்லாருடைய விருப்பம்"

"இப்போ இந்த சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றி பெற்று வடக்குக் கிழக்கை நிர்வகிக்கும் பொறுப்பை எல்.ரீ.ரீ யிடம் ஒப்படைத்தால் மக்கள் சந்தோசப்படுவார்களா?"

"புலிகள் தற்பொழுது கேட்பது மாநில சுயாட்சிதான். எமது நாட்டுக்கு உகந்த மாநில சுயாட்சி முறை தீர்மானிக்கப்பட்டு, மத்திய ஆட்சியில் தமிழர்களுக்குரிய முழுப்பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டு அதற்கு அமையயாப்புகள் எழுதப் பட்டு அந்த அடிப்படையின் கீழ்த் தான் நாட்டு நிர்வாகம் அமையுமானால் தெற்கிலே வாழுகின்ற சிங்கள மக்கள் அனுபவிக்கின்ற அத்தனை உரிமைகளையும் வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களும் அனுபவிப்பர். அப்படியான ஒரு ஆட்சி முறையைப் புலிகள் பேச்சு வார்த்தை மூலம் கொண்டு வருவார்களாயின் மக்கள் சந்தோசமடைவார்கள்."

மீண்டும் அவரது பேச்சுத் திசைமாறியது "வன்னியில எப்படி மக்கள் சந்தோசமாக இருக்கிறார்களா?"

"பொருளாதாரத்தடை, மருந்துத்தடை, போக்குவரத்துத் தடை குண்டுவீச்சு என்று பல தடைகளும், துன்பங்களும் இருந்தகாலத்தில் அவற்றுக் குள்ளே வாழ்ந்து பழக்கப்பட்ட மக்களுக்கு இந்தப் பேச்சுவார்த்தை காலத்தில் தளர்த்தப்பட்ட தடைகளால் முன்னர் இருந்ததை விட மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்."

இத்தோடு அவர் தனது விசாரணையை முடித்துக் கொண்டு எனது அடையாள அட்டையையும் தந்து விடை கொடுத்தார். அவர் எதிர்பார்த்ததற்கு மேலாக அவருக்கு பதில் கொடுத்துவிட்ட திருப்தி எனக்கு. ஆயினும் சோதனைச் சாவடிக்குள் நுழைந்த போது வெறுமையாக நின்ற வவுனியாவுக்கான பேருந்து பயணிகளால் நிறைந்து விட்டது. அதனால் அடுத்த வண்டியில்தான் போகவேண்டி வந்ததையிட்டு அந்தப் புலனாய்வுக்காரனை மனதில் திட்டிக் கொண்டேன்.

வவுனியாவில் இருந்து சில தினங்களால் மீண்டும் வன்னிக்குப்புறப்பட்டேன். போராளிகள் சிலர் தேவைகருதி வாடகை வண்டி ஒன்றை அமர்த்திக் கொண்டு வந்தனர். அவர்களில் சிலர் பெண் போராளிகள் எல்லோரும் சீருடை அல்லாத சாதாரண உடையில் வந்திருந்தனர். "விரும்பினால் என்னையும் தமது வண்டியில் வரும்படி அழைத்தனர்." நானும் சம்மதித்து வண்டியில் ஏறிக்கொண்டேன்.

போராளிகள் தமது அடையாள அட்டைகளைக் காண்பித்தனர். என்னை சாதாரண பயணிகள் பதிவு செய்யும் இடத்திற்குச் சென்று பதிவு செய்ய கேட்டுக் கொண்டனர்.

அவ்விடத்தில் நின்ற இராணுவ அதிகாரி ஒருவர் "ஐயா நீங்களும் அதில தானா வந்தது" என்று நாம் வந்த வாகனத்தைச் சுட்டிக் காட்டிக் கேட்டார்.

"ஆம்"

"அது எங்க இருந்து வருகுது "கொழும்பில இருந்து என்று நினைக்கிறன்"

"அவர்கள் எல்.ரீ.ரீயா"

"ஓம் எண்டு தான் நினைக்கிறன்"

"நீங்கள் எங்கை இருந்து வாறீங்கள்?"

"வவுனியாவில் இருந்து வண்டியில இடம் இருந்தது ஏற்றிக் கொண்டு வந்தனர்"

"அடையாள அட்டையைப் பதிவு செய்த நான் வாகனம் நின்ற இடத்திற்கு வந்தன். கூடவே என் பின்னால் அந்த அதிகாரியும் வந்தார். மழை தூறிக்கொண்டிருந்தது. சிறிலங்கா காவல்துறைப் பெண் ஒருவர் வாகனத்தில் இருந்த பொதிகளைச் சோதனை செய்து கொண்டிருந்தார்.எங்களோடு வந்த பெண் போராளி "ஒருவர் எங்களை நனைக்கிறீகள்" என்று புறுபுறுத்துக் கொண்டிருந்தார். என் பின்னே வந்த அதிகாரி "நீங்கள் எல்.ரீ.ரீ யா?" என்று அவளிடம் கேட்கவும் "ஓம்" என்றாள். அடுத்த அதிகாரி "எந்த ஊர்?" என்று கேட்கவும்

"யாதும் ஊரே யாவரும் கேளீர்"என்று சற்றுமிடுக்காகவே பதில் கூறினாள்.

அதன் பொருள் அவருக்கு விளங்கவில்லை. "அப்படியென்றால்? என்றவருக்கு எல்லாம் ஊர் தானாம்" என்று யாரோ விளக்கிக் கூறுவது கேட்டது .இதற்குள் நச்சரிப்பு தாங்க முடியாமலோ என்னவோ பொதிகள் சோதனையிட்டவள் வாகனத்தை விட்டு இறங்கி விட்டாள். எமது வாகனம் உறுமிக் கொண்டு புறப்பட்டது.

**நாவண்ணன்**

---

**ஒரு பார்வை**

# யுத்தம் தாய்மார்களின் கதை

இது தனியாக தாய்மார்களின் கதையே. யுத்தமானது ஒரு தாயினது அப்படி இல்லையென்றால் பல தாய்மார்களது கதையெனச் சொல்லப்படுவது எப்படி? பல விதமாக அது நிகழலாம். அதில் ஒன்று இப்படித்தான்....

அமெரிக்க இனத்தைச் சேர்ந்த அனெசிட்டா ஹட்வனுடைய மகன் சேவைசெய்து அமெரிக்க இராணுவத்தில். தனது ஒரேயொரு மகன் ஈராக்கின் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளது பற்றி அவள் தொலைக் காட்சியிலே கண்டாள். ஈராக்கிய இராணுவத்தினால் கைது செய்யப்பட்டுள்ள. அவளது மகன் உட்பட அமெரிக்க படைவீரர்கள் ஈராக்கின் வீதி நீளத்திற்கு கொண்டு செல்லப்படும் விதத்தினை அவள் கண்டாள். அமெரிக்க அரசு சொல்கின்ற விதமாக ஈராக்கிய யுத்த அதிகாரிகள் இந்த யுத்த சிறைக் கைதிகளை இதுவரை கொன்று முடித்திருப்பார்கள்.

ஷிபாஹுசேன் என்பது ஈராக்கிய இனத்தின் தாயொருத்தி. அவளது மகன் கட்டிளம் காளை ஒருவன் யுத்தம் ஆரம்பமாகும் பொழுது அவன் சுகவீன முற்றிருந்தான். பாக்தாத் நகரின் வைத்தி யசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்தான். ஷிபாதனது மகனைப் பார்ப்பதற்காக பாக்தாத் நகருக்குச் சென்று விட்டு ஊருக்குத் திரும்பும் பொழுது அவளது இல்லம் இருந்த இடத்தில் செங்கற்களின் குவியலே மீள் திருந்தன. அமெரிக்க ஆகாயத்தில் இருந்து தொடுத்த தாக்கு தலினால் அவளது இல்லிடம் அழிந்து போயிருந்தது.



பிரித்தானிய இனத்தைச் சேர்ந்த தாயான 'வல்ஹுன்' னுக்கு நிகழ்ந்திருந்ததும் முன்னே சொல்லப்பட்ட அம்மாக்கள் இருவருக்கும் நிகழ்ந்த விதமாகவே விபத்து ஏற்பட்டிருந்தது. 'வல்ஹுன்' னுடைய 18 வயதுடைய மகனான ஸ்ரீவன் தற்பொழுது இருப்பது ஈராக்கின் யுத்தகளத்தில். ஈராக்கில் இருக்கும் வெளிநாட்டுப் படைகளில் ஒரு அங்கத்தவன்தான் ஸ்ரீவன்.

ஈராக்கிய யுத்தத்தில் தாய்மார்களது பிரச்சினையாக இருப்பது இப்படித்தான். ஈராக்கிய, பிரித்தானிய மற்றும் அமெரிக்காவின் இலட்சக்கணக்கான இராணுவ வீரர்கள் இந்த யுத்தத்தில் ஈடுபட்டு ஒருவர் மீது ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். இந்த அனைத்துப் படைவீரர்களும் யாரோ ஒரு தாயினது மகனேயாகும்.

ஒரு நாட் பொழுதின் 24 மணி நேர மும் சர்வதேச தொலைக் காட்சிகளினூடாக காண்பிக்கப்படும் சர்வதேச ஒளிப்படம் தான் இந்த ஈராக்கிய யுத்தம் என்பது. இந்தக் காட்சிகளைக் காணுகின்ற அனைத்து வேளைகளிலும் யுத்த பூமியில் இருக்கும் இராணுவ வீரர்களின் தாய்மார் கூக்குரலிட்டு அழுது புலம்புகின்றார்கள். ஒவ்வொரு வெடிச்சத்தத்தின்போது, அந்த வெடிகளினால் தங்களது மகன் மாரினது உயிர்களுக்கு கேடுகள் ஏற்பட்டு விட்டதோ என்ற சந்தேகம் அந்தத் தாய்மார்களுக்கு ஏற்படுகின்றது.





அமெரிக்கத் தாயாரான அனெசிட்டா ஹட்சன் தனது மகனான ஜோசப் தற்பொழுது கொல்லப்பட்டுவிட்டார் என்பதனை தொலைக்காட்சியின் மூலமே தெரிந்து கொண்டார். மகனைப் பாதுகாக்கும்படி யாரிடமாவது விண்ணப்பிப்பதற்கு தற்பொழுது அவரால் முடியாது. ஏனென்றால் அவன் மடிந்துவிட்டான்.

யுத்தத்தினால் மனிதர்களுக்கு இல்லா மற் போகின்றவைகள் அதிகம். அவை பலவிதமாக வந்து சேர்கின்றன. சில வேளைகளில் உலக யுத்தங்களினாலும் சிலவேளைகளில் பிரிவினைவாதிகளின் சுயரூபங்களினாலும் அவை நிகழ்கின்றன. எப்படி ஏற்பட்டாலும் நிகழ்வது ஒன்றே ஒன்றுதான். அது தாய்மார்களின் கண்ணீர் வெள்ளத்தினை திறந்துவிடுவது தான். அனைவருக்குமே தாயொருத்தி இருக்கின்றாள். அவனுக்கோ அவளுக்கோ மரணம் நிகழ்ந்தால் தாயாரினால் தாங்கிக் கொள்ளமுடியாது. புஷ்ஷினுடைய அம்மாவுக்கும் அப்படித் தான்!

சதாம் ஹுசேனுடைய அம்மாவுக்கும் அப்படித்தான்!!

**வல்வையூரான்**



## தொடர்கதை

### அத்தியாயம்-5

# இடம் பெயர்ந்தவன்

தமிழில்
சு. மகேந்திரன்

தான் வான்கோழியைத் திருடி இருந்தால், தன்னை கடவுள் அடித்துக் கொல்லட்டும் எனவும், அவ்வான்கோழியின் தலையில் புண்ணிருந்ததால், அப்புண்ணுக்கு கறுத்தச் சப்பாத்துப் பொலிஸ் பூசவே தான் எடுத்துச் சென்றதாகவும் கூறினான். மேலும் ஏசுஅறிய இது உண்மை அப்படி இல்லை என்றால் கடவுள் தனக்கு தண்டனை தரட்டும் எனவும் சொன்னான்.

போலிஸ்காரனிடம் எல்லா நீகிரோக்களும் திருடவே செய்வார்கள் என்பதை திருமதி. மக்கின்ரயர் நெடுநேரம் விளக்கினாள். அவள் சல்க்கை வான்கோழியைக் கொண்டு போய் கூட்டில் விட்டுவிட்டு போகச் சொன்னாள். கடைசியில் ரூடோல்ப்பைக் கூப்பிட்டு அவள் பேசியதை போலிஸ் மொழியில் போலிஸ்காரனுக்கும் அவன் பேசியதை ஆங்கிலத்தில் தனக்கும் சொல்ல வைத்தாள். ஆயினும் கௌசக் விறைத்த பார்வையுடன் ஏமாற்றமடைந்து அங்கிருந்து வெளியேறினான்.


திருமதி. சோட்லி கால்நடைக்கான உணவு வெட்டும மெசினில் ஏதாவது பிழைவரும் என்ற நம்பிக்கையுடன் இருந்தாள். ஆனால் அப்படிஎதுவுமே நடைபெறவில்லை கௌசக்கின் செயற்பாடுகள் யாவுமே மிகவும் சரியானவையாகவும் விரை வானவையாகவும் இருந்தன. அவன் குரங்குபோல் உழவியந்திரத்தில் ஏறி, பெரிய ஒரேஞ்நிற புல்வெட்டியை புல் தரைக்குள் இட்டுச்செல்வான்.ஒரு செக்கனில் மந்தைகளுக்கான உணவு வரும் குழாய்கழுக்கூடாக பச்சை நிறத்துடன் கூடிய இலைகள் பீரிட்டுப் பாய்ந்து வண்டியை நிறப்பிக் கொண்டது. அவன் சடுதியாக வண்டியில் உள்ளதைக் கவிழ்த்து விட்டு மறைய சத்தமும் குறைந்தது. பெருமூச்சிடையே திருமதி. மக்கின்ரயர் சந்தோசத்துடன் 'கடைசியில் நம்பிக்கைக் குரிய ஒருவன் கிடைத்துவிட்டான்' எனக் கூறிக் கொண்டிருந்தாள். 'பல வருடங்களாக உதவாக்கரைகள் என்னை ஏமாற்றியே வந்திருக்கிறார்கள். வறிய உபயோகமற்ற வெள்ளைக்காரர்கள் ஆனாலும்சரி, நீகிரோக்கள் ஆனாலும்சரி எல்லோருமே உபயோக மற்றவர்கள்.' எனமுணுமுணுத்தாள். அவர்கள் எல்லோரும் எனது சொத்தைவற்றச் செய்து விட்டனர்.

நீங்கள் இங்கு வருவதற்கு முன்னர் என்னிடம் ரீங்பீல்ஸ்கள், கொலிஸ்கள், ஜெரல்ஸ்கள், பேர்க்கின்ஸ்கள், பின்கிள்ஸ்கள், கெரின்ஸ்கள் எல்லோரும் இருந்தவர்கள் தான். அவர்கள் எவருமே இங்கிருந்து போகும் போது தமக்குரிமையில்லாத எவற்றையாவது, தம்முடன் கொண்டு செல்லாமல் விட்டதேயில்லை. ஒருவர்கூட இல்லை இது கடவுளுக்கும் தெரியும். திருமதி. சோட்லி திருமதி. மக்கின்ரயர் கூறியதையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். தன்னை வைத்துக் கொண்டு உபயோக மற்றவர்கள் பற்றி அவள் கூறியதால், தாங்களதில் அடங்கமாட்டார்கள் என திருமதி.சோட்லி எண்ணினாள். இருவரும் உபயோகமற்ற தன்மையை அங்கீகரிப்பவர்கள் அல்ல திருமதி. மக்கின்ரயர் அவள் மட்டுமாகவே பேசுவதை திருமதி. சோட்லி இதற்கு முன் பலதடவைகள் கேட்டிருக்கிறாள். வயல்களைக் கோபத்துடன் பார்த்தபடி நான் இந்த இடத்தை 30 வருடங்களாக நிர்வகித்து வருகிறேன். ஏதோ ஒரு மாதிரியாக இது ஓடுகிறது. மனிதர்கள் நான்பணத்தில் புறள்வதாக நினைக்கிறார்கள். நான்வரிகளை கட்ட வேண்டும். திருத்த வேலைகளுக்கும் சாப்பாட்டுக்குமான செலவுகளை செலுத்தியாக வேண்டும். இவைகளின் சுமைகளெல்லாம் ஒன்றுசேர்ந்தது போல் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு கைகளை முழங்கைகள் மேல் மாற்றிவைத்து, இறுகக் கட்டியபடி அவள் எழுந்து நின்றாள். நான் கஷ்ரப்பட்டு இவைகளையெல்லாம் செய்ய, இங்கே எல்லோரும் போகும் போது ஏதாவது ஒன்றை அகற்றிக் கொண்டு போய் விடுகின்றனர். எல்லா நீகிரோக்களும் யாராவது பணக்காரனாக இருந்தால் அவனிடமிருந்து எதையாவது திருடலாம் என நினைக்கிறார்கள். நீகிரோக்கள் வேலையில் இருந்து விலகுவதில்லை. இருந்து கொண்டே திருடுகின்றனர். உபயோகமற்ற வெள்ளைக்காரர்களோ தம்மைக் கூலிக்கமர்த்திக் கொண்டவர்களும், தம்மைப்போல் வறியவர்களாகி விடவேண்டும் என்றே விரும்புகின்றனர். எனக்குக் கிடைத்ததெல்லாம் காலில் அசுத்தப் பட்டது போன்ற ஒரு நிலையே. நீங்கள் விரும்பியபோது எங்களை அழைக்கிறீர்கள். பின் உங்கள் விருப்பத்துக்குத் துரத்துகிறீர்கள்." என திருமதி. சோட்லி நினைத்துக் கொண்டாள். ஆனால் நினைப்பதெல்லாவற்றையுமே ஒருபோதும் அவள் வெளியே கொட்டி விடுவதில்லை. அவள் திருமதி மக்கின்ரயர் கூறுவதை எல்லாம் கூறி முடிக்கட்டும் என வாளாதிருந்தாள். அன்று வழமை போல் அது ஓயவில்லை 'தான் கடைசியில் காப்பாற்றப்பட்டு விட்டேன்' என திருமதி. மக்கின்ரயர் கூறினாள் ஒருவனின் துன்பத்தில் தான் மற்றவனின் இலாபம் அமைகிறது. அங்கிருந்து மறைந்து கொண்டிருந்த இடம் பெயர்ந்தவனின் உருவத்தைச் சுட்டிக் காட்டி 'அந்த மனிதன் வேலை செய்ய வேண்டியநிலையில் உள்ளான். வேலையும் செய்கிறான்' என்றாள். திருமதி மக்கின்ரயா. திருமதி. சோட்லியின் பக்கம் தனது சுருங்கிய ஆனால் பிரகாசமான முகத்தைத் திருப்பி 'அந்த மனிதனே எனக்காக வந்த மீட்பவன்' என்றாள்.

திருமதி. சோட்லி தனக்கு முன்னிருந்த புல்தரைமலை எல்லாவற்றையும் ஊடறுத்து மறுபக்கம் துழைத்து செல்வது போன்று பார்த்தாள். 'மீட்சி பிசாசிடமிருந்து வந்திருக்கிறது" என ஐயுறுகிறேன் என்று மெதுவாகவும் வேறுபட்ட குரலிலும் சொன்னாள்.

இடம் பெயர்ந்தவர் வந்த பின்பு பல விசயங்களை மீளவும் சிந்திக்க வேண்டியதேவை அவளுக்கு ஏற்பட்டிருந்தது. 'சிலேட்ஜ்விக் அனிமோடிக்கு என்ன கூறினாள் என்பது எனக்குத் தெரியும்.' என்றாள் திருமதி. சோட்லி அதைக்கவனத்தில் கொண்டு என்ன அதுஎனக் கேட்காமல் சசாபிரஸ் மரத்திலிருந்து ஒரு சிறு கிளையைப்பிடுங்கி அதனை மெல்லியபடி திருமதி. மக்கின்ரயர் இருக்க; '70 டொலர் மாதச்சம்பளத்துடன் அவர்கள் நால்வரும் தாக்குப் பிடிக்க மாட்டார்கள்' என திருமதி. சோட்லி கூறினாள். அவள் பேசிய தோரணை முழுவதையும் கொட்டித் தீர்க்க மாட்டேன் என்பது போலிருந்தது. 'அவனுக்கு உதவி செய்வதால் இலாபம் இருக்கிறது. அவனால் எனக்கு காசு மிஞ்சுகிறது' என திருமதி. மக்கின்ரயர் கூறினாள். இப்படிக் கூறுவது சன்சியால் காசுஎதுவும் மிச்சப் படவில்லை எனக் கூறுவதற்கு சமனானதே. சான்சி காலை நாலு மணிக்கு எழுந்து பால்கறந்து விடுகிறான் வேநீர் காலத்து வெக்கையிலும், குளிர்காலத்துக் காற்றிலும் அதைச் செய்கிறான். கடந்த இரண்டு வருடங்களாக இது நடக்கிறது. அவர்களே திருமதி. மக்கின்ரயரிடம் அதிககாலம் வேலை செய்தவர்கள். திருமதி. மக்கின்ரயர் தனக்கு காசு எதுவுமே மிச்சப்படவில்லை எனக் கூறும் குத்தல்ப் பேச்சுக்களே அவர்கள் கண்ட மிச்சம்.

தொடரும்...



# தாலாட்டுப் பாடல்கள்

வல்வை. ந-அனந்தராஜ்

''மார்பில் அணிவதற்கு உனைப்போல வைரமணிகள் உண்டோ''என்ற அடிகளில் அழகும் ஒளியும் தரும் வைரத்தை விட தாயின் நெஞ்சில் கிடக்கும் குழந்தையின் அழகு அவளுக்கு ஒளியூட்டு என்று பாடியுள்ளமை ஒரு தாய்க்கு, குழந்தையின் முக்கியத்துவம் எடுத்துக் காட்டப்படுகின்றது.

ஒரு பெண், திருமணம் முடித்தும் பிள்ளைப் பேறு இல்லாவிட்டால், அவளை மலடி என்றும், இருளி என்றும் சமூகம் தூற்றி ஒதுக்கி வைக்கும். இது யாழ்ப்பாணத்தில் ஓர் சமூகத்தில் காணப்படும் ஒரு பிற்போக்குத் தனமான மரபாக விளங்குகின்றது. அந்த மன உழைச்சல் தனக்கும் வந்து விடக்கூடாதே என்ற ஆதங்கத்தில் தன்னையே உருக்கி தவமிருந்து பெற்றெடுத்த பிள்ளை மீது பாடப்பட்ட பின் வரும் தாலாட்டுப் பாடல் ஒன்று தாயின் மன உணர்வை வெளிக்காட்டுவதாக உள்ளது.

யாழ்ப்பாணத்தில் வழக்கில் உள்ள இப்பாடலை, "வட இலங்கையர் போற்றும் நாட்டார் பாடல்கள்" என்ற தனது நூலில் வட்டுக்கோட்டை மு.இராமலிங்கம் எடுத்து விளக்கியுள்ளார்.

**மலடி மலடி யென்று மாநிலத்தோர் ஏசாமல்**
**மலடிக்கொரு குழந்தை மாய வனார் தந்த பிச்சை**
**இருளி இருளியென்று இந் நிலத்தோர் ஏசாமல்**
**இருளிக் கொரு குழந்தை ஈஸ்வரனார் தந்த பிச்சை**
**பிள்ளை இல்லையென்று**
**பெரும் தவங்கள் செய்தேனே மைந்தன் இல்லையென**
**மாதவங்கள் செய்தேனே**
**வெந்த மாத்தின்றால் விரதம் அழியுமென்று**
**பச்சைமாத் தின்று பகவானைத் தொழுது**
**வெள்ளிக்கிழமை விரத மகத்துவத்தால்**
**பிள்ளைக்கலி தீர்க்கப் பிறந்த நவரசமே!**

(இருளி- பூப்படையாத பெண்)

இதேபோன்று மன்னார் மாவட்டத்தில் சில கிராமங்களில் பாடப்பட்டு வரும் தாலாட்டில் ஒரு பெண் தனது பேரனை முத்தாக உவமித்து அந்த முத்துப் பிறக்கும் இடத்தையும் அதன் தரத்தையும் பின்வரும் பாடலினூடாக வர்ணிக்கின்றாள்.

"சாதிப் பெருங் கடலில்
சங்கீன்ற முத்தல்லோ



முத்தான முத்தோ
முது கடலில் ஆணிமுத்தோ
சங்கீன்ற முத்தோ
சமுத்திரத்தின் சாதிமுத்தோ"

இத்தாலாட்டுப் பாடல் அடிகளினூடாக தன் பேரப் பிள்ளையை, உயர்தர முத்தாக உவமித்த வேளையில் தான் வாழும் பிரதேசத்தின் பெருமைகளையும் எடுத்துக் கூறுவதாகவும் அமைந்துள்ளது.

உலகத்தில் மிகச் சிறந்த முத்துக்கள் கிடைக்கும் கடல்களாக மன்னார்க் குடாவும், பாரசீக வளை குடாவுமே குறிப்பிடப்படுகின்றன. முத்துக்கள் பழுப்பு நிறமாக இருந்தால் அவற்றின் பெறுமதியும், விலையும் குறைவானது. ஆனால் மன்னார்க் குடாக்கடலில் பெறப்படும் முத்துக்களோ பிரகாசமான வெள்ளை நிறத்துடன் ஒளி வீசுபவையாகவும், உயர் மதிப்புடையவையாகவும் இருக்கும். அதனால் அத்தகைய உயர்ந்த தரத்தையுடைய மன்னார்க் கடலின் முத்தை, தன் பேரனுக்கு உவமையாகக் கூறிப் பெருமை பேசுகின்றாள்.

இவ்வாறான தாலாட்டுப் பாடல்களை இசையுடனும் ஓசை நயத்துடனும் பாடும் பொழுது, குழந்தையின் உள்ளத்தில் புத்துணர்ச்சி பெறுவதுடன், தாயின் இனிமையான ஓசை நயத்தில் குழந்தை அமைதியாகத் தூங்குகின்றது.

தாயின் இனிய தாலாட்டுப்பாடலின் ஊடாக ஒரு குழந்தையின் உடல், உள விருத்தி ஏற்படுவதுடன் புதிய சொற்களஞ்சியத்தை (VOCABULARY) அறிந்து கொள்வதற்கும், வெவ்வேறு வகையான ஒலி வேறுபாடு களை உணர்ந்து அதற்கேற்பபுலன் உணர்வுகளை வெளிபடுத்துவதற்கும் இத்தகைய பாடல்களே உறுதுணையாக இருக்கின்றன.

யாழ்ப்பாண வழக்கில் "சிலேடையாகப்பாடும் மரபு" தாலாட்டுப் பாடலில் ஆங்காங்கே விரவிக்காணப்படுவதைப் பின்வரும் பாடலினூடாகக் காணலாம்.

வம்பு வரத்தல்ல
வரத்து மாடு ஈன்றதல்ல
பட்டியிலே நின்ற
பருங்கொம்பன் ஈன்ற கன்று.

தொடரும்....

எண்ணம் பேச்சாகவும் பேச்சு வாய்மையாகவும் அமையும் கட்டம் இளமை —ஸர் வால்ட்டர் ஸ்காட்



**சிறுகதை**

# என்னைப் போலயோ

''பவானி'' கெதியா கொண்டு வா பூசை தொடங்கப் போகுது'' பவானியை நோக்கி உரக்க குரல் கொடுத்தான் கரன். "பொறு பொறு இப்ப முடிஞ்சிடும் என்று அவனுக்கு பதிலளித்தவாறே பழைய தகரத்தட்டில் கவிழ்த்து வைத்திருந்த சிரட்டையை இன்னொரு சிரட்டையால் விரைவாகத் தட்டினால் பவானி. கரனின் குரல் மீண்டும் ஒலிக்கவும் தட்டுவது போதும் என்று நினைத்தவளாய் சிரட்டையை கீழே வைத்துவிட்டு கவிழ்த்து வைத்திருந்த சிரட்டையை மெதுமெதுவாக மேலே தூக்குகிறாள். அவள் கண்களில் மகிழ்ச்சியின் பிரவாகம் "அட ஒரு கொஞ்சம் கூட பிசிறில்லாமல் என்ன அழகான மண் பொங்கல். ஈரமான மண்ணை சிரட்டையில் நிரப்பி அடித்து தான் செய்த மண் பொங்கலை தனது தோழிக்கு கூப்பிட்டு காட்டினாள் பவானி. "சரசு இஞ்சை பார் நான் கொண்டு போய் சாமிக்கு கிட்ட வைக்கப் போறன் என்ன வடிவா வந்திருக்குது பார்'', "ஏ நானும் மோதகம் செஞ்சு முடிச்சிட்டன்'' மண்ணில் தான் செய்த உருண்டைகளை சரசுவும் எடுத்துக் கொண்டாள். இருவரும் சற்றுத் தூரத்தில் உள்ள வேப்பமரத்தின் கீழே கல்வடிவில் அமைந்திருந்த அந்த பேரிடப்படாத சாமிக்கு முன்பு தாங்கள் கொண்டு வந்த பண்டங்களை வைத்தனர். அதை சற்றுத்தொலைவில் இருந்து பார்த்துக்கொண்டிருந்த கலாதான் செய்து கொண்டிருந்த வடைகளையும் கொண்டு வந்து சாமிக்கு முன் வைத்து விட்டு ''நானும் முடிச்சிட்டன்'' என்றாள். கரன் தான் பூசாரி. எல்லாரையும் விரட்டி விரட்டி வேலை வாங்கிக்கொண்டிருந்தான். "சேகர் பூ எடுத்துக் கொண்டு வா. பரணி நீ சங்கையும், மணியையும் எடுத்துக் கொண்டு வா என்று கட்டளை இட்ட படியே அந்த கல்லுச்சாமிக்கு தண்ணீர் ஊற்றி அபிஷேகம் செய்து கொண்டிருந்தான். சேகர் பூப்பறிக்க ஓடினான். பரணி விளிம்புடைந்த சங்கையும் உடைந்த தண்டவாளத் துண்டு ஒன்றையும் எடுத்து வைத்துக் கொண்டு நின்றான். மற்றவர்கள் பயபக்தியுடன் நடப்பதைப் பார்த்துக் கொண்டு நின்றனர். அவர்கள் எல்லோருமே ஒரு அகதி முகாமில் வசிக்கும் வறுமைக் கோட்டிற்கு கீழ்பட்ட குழந்தைகள். வறுமை அவர்கள் மகிழ்ச்சியான உலகில் ஏற்படுத்திய பாதிப்பு மிக குறைவு என்றே சொல்ல வேண்டும். பெரியவர்களின் பணக் கஷ்டம், நெருக்கடி அவர்களுக்கு புரிய நியாயமில்லைத்தானே. சாப்பாடு வேளைக்கு கூப்பிட்டு சாப்பிட கொடுத்தால் சாப்பிடுவார்கள் இல்லையேல் தங்கள் பசியை விளையாட்டில் மறந்து விடுவார்கள். சின்னச் சோறுகறி சமைததல, சாமி பூசை என்று தங்கள் விளையாட்டை மாற்றிக்கொண்டு இருப்பார்கள். சாமி பூசை அவர்களிற்கு பிடித்தமான ஒன்று. மண், இலை குழைகளில் தமக்கு பிடித்தமான பண்டங்களை பிடித்தமான விதத்தில் சாமிக்கு படைத்து பின்பு எல்லோரும் சாப்பிடுவது போல பாசாங்கு **செய்வார்கள். அதுவே மாங்காய் நாவற்பழக்காலமாக இருந்தால் அவற்றையும் படைத்து தங்களிற்குள் பிரித்து உண்பார்கள்.** அந்தச் சின்னஞ் சிறுசுகளின் வேண்டுதலை சாமி ஏற்றுக் கொண்டு தான் இருக்கிறார் போலும். இல்லையேல் எப்பவும் மகிழ்ச்சியாககளங்கம் அற்றுச் சிரிக்கும் இந்த மனத்தை இவர்கள் எங்ஙனம் பெற்றிருக்க முடியும். ஞானிகளும். முனிவர்களும் இதை வேண்டித்தானே பல்லாண்டு காலம் தவம் கிடக்கிறார்கள்.

"பவானி எடி பவானி வா இஞ்சை'' தாயின் குரல் கேட்டு துணுக்குற்ற பவானி தனது தோழர்களை திரும்பி பார்த்தாள். அவர்களும் செய்து கொண்டிருந்த வேலையை அப்படியே நிறுத்தி விட்டு பவானியின் தாய் கோமதி வந்த திசையைப் பார்த்தனர். "ஏய் கூப்பிடுறது காதில விழேல்லயோ. நான் நாய் மாதிரி கத்திறன் நீ உன்ர பாடு என்ன'' பூஞ்சையான உடல் மேலும், கீழும் மூச்சு வாங்க மகளின் மௌனம் ஆத்திரத்தை மூட்ட கத்தினாள் கோமதி. "வாடி கெதியா கோயிலுக்கு போக வேணும் பூசை தொடங்கிறதுக்கு இடையில''

"அம்மா இன்னும் இஞ்சை பூசை முடியேல்ல முடிஞ் சோண்ணை சாப்பிட்டு வாறன் நீ வீட்ட போ'' மூன்றரை வயது பவானி தனது மழலையில் தாயை கெஞ்சினாள். எங்கே தனது அம்மா தன் விளையாட்டை குழப்பிவிடுவாளோ .என்ற பயம் அப்பட்டமாக அவள் குரலில் தெரிந்தது. மகளின் பதில் மேலும் எரிச்சலை கிழப்ப பதிலேதும் பேசாமல் மகளின் கையை தரதரவென இழுத்துச் சென்றாள் கோமதி. அழுகை விம்மி வெடிக்க கலங்கிய கண்களுடன் தனது தோழர்களை திரும்பி திரும்பி பார்த்தபடி சென்றாள் பவானி. தங்களின் பிரியத்திற்குரிய சிறிய தோழியின் திடீர் பிரிவால் மற்றவர்களது விளையாட்டு சுவாரசியம் மறைந்து விட்டது. எல்லாரும் வாட்டத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

வீட்டிற்கு வந்ததும் பவானி வீரிட்டு அழுதாள். கோமதி அதை சட்டை செய்யாமல் மளமளவென தான் குளித்து விட்டு மகளை குளிப்பாட்ட ஆயத்தமானாள். இப்போது பவானியின் அழுகை ஓய்ந்திருந்தது. கண்களில் மட்டும் ஈரம் படலிட்டிருக்க விக்கிக்கொண்டு இருந்தாள். சிறிய உதடுகள் ஏமாற்றத்தால் துடித்துக் கொண்டிருந்தது. இதைக்கண்டதும் கோமதியின் தாயுள்ளம் என்னவோ செய்தது.

''என்ர பவானிக்குஞ்சு என்ர பவானிக்குட்டி'' என்று மகளை அணைத்தபடியே கூப்பிட்டாள். தனது மௌனத்தால் தாய்க்கு தனது எதிர்ப்பை காட்டினாள் மகள். "பிள்ளைக்கு கச்சான் வேணாமோ'' என்று அவள் தொடரவும் சட்டென கோபத்தை மறந்துவிட்டு ஆம் என்பது போல தலையை ஆட்டினாள். கோம்தி நிம்மதியுடன் சிரித்தாள். பவானி கோபத்தை மறந்து தாயுடன் ஒட்டிக் கொண்டாள்.

பவானி இரண்டு வயதாக இருக்கும் போது அவள் உடல் எங்கும் கடியும் அதன் காரணமாக கொப்புளமும் ஏற்பட்டு இருந்தது. குழந்தை வலி தாழாமல் துடித்துக் கொண்டு இருந்தாள். கோமதி செய்யாத கை வைத்தியம் இல்லை. யார், யாரோ சொன்னார்கள் என்று பேர் தெரிந்த தெரியாத பச்சிலைகளை அரைத்துப் பூசினாள். தன் வசதிக்கு எட்டிய வைத்தியர்களிடம் கொண்டு போய் காட்டினாள். நிரந்தர பலன் இல்லை. கடைசியில் மூன்றுமைல் தொலைவில் இருக்கும் அந்த அம்மன் கோவிலில் நேர்த்திவைத்து காணிக்கை சேர்க்கும்படி யாரோ ஒரு வயதான அம்மாள் சொல்ல அதையும் கோமதி செய்யத் தொடங்கினாள். பச்சிலை மகிமையோ அம்மன் அருளோ குழந்தை படிப்படியாக பூரண சுகம் அடைந்தாள். இன்று அந்த அம்மன் கோவிலில் கும்பாபிஷேகம். தனது காணிக்கையை செலுத்த இதுவே நல்ல நாள் என்ற தீர்மானத்துடன் கோமதி இன்று புறப்பட தீர்மானித்திருந்தாள்.

பவானியை குளிப்பாட்டி துடைத்து மேல் எல்லாம் பவுடர் பூசி பொட்டு வைத்து தலை வாரி விட்டாள். கோமதி பெட்டியில் இருந்த அந்த கத்திரி பூ நிறத்தில் வெள்ளைப் பூ போட்ட பாவாடையையும் வெள்ளைச் சட்டையையும் எடுத்துப் போட்டு விட் டாள். அந்த உடையை மாட்டியதும் பவானியின் முகத்தில் குதூகலம் கும்மாளம் போட்டது. அதைப் போடும் ஒவ்வொரு சமயமும் தன்னை ஒரு குட்டி இளவர்சி போலவே உணருவாள். அவளிடம் உள்ள பொருட்களின் பெறுமதியானதும், அழகானதும் ஆனது அந்த உடைதானே. கோமதி வேலை செய்யப் போகும் வீடு ஒன்றில் யாரோ அதை கொடுத்திருந்தார்கள். பவானி அந்தச் சட்டையை தடவிப் பார்த்தபடி தாயைப் பார்த்து சிரித்தாள். கோமதி மகளை அணைத்து முத்தமிட்டு விட்டு இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டாள் காணிக்கை, பூசைப் பொருட்கள் அடங்கிய பையை மறுகையில் எடுத்துக் கொண்டு கோயிலை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

அவள் மனம் அம்மாளாச்சி என்று வேண்டிக்கொண் டது. கோயிலை அடைந்த போது கோமதி விக்கித்து நின்றாள். போன வருடம் தான் பார்த்த கோயிலா அது என்று. பாதை திறந்ததால் ஊர் நோக்கி படை யெடுத்திருக்கும்

**செம்பருத்தி**

வெளிநாட்டு பக்தர்களின் அருளால் கோயில் அநேக மாற்றத்தை கண்டு இருந்தது. புதிதாக கட்டடம். புதுப் பிக்கப்பட்டகோபுரம், வண்ணப்பூச்சு, அலங்காரம் என்று கோயில் கண்கொள்ளா காட்சியாக இருந்தது. இவ்வாறான ஒரு சூழல் பவானிக்கு புதிது. இது என்ன? அது என்ன? என்று கேட்டபடி வந்தாள். பிரமிப்பு அடங்காத கோமதியும் தன் மகளுக்கு தனக்கு தெரிந்த வகையில் விடைகூறிக் கொண்டு வந்தாள். நாதஸ்வரம், தவில் என்பனவற்றை அப்போதுதான் பார்த்திருந்த பவானி ''அம்மா எனக்கு அப்படி ஊத ஒரு குழல் வேணும் வாங்கித்தாறியா'' என்று ஆவல் பொங்க கேட்டாள். "ஓம்... ஓம் வாங்கித்தாறன் கோயிலுக்கு வந்தால் அங்க இங்க பார்க்க கூடாது சாமியபார்'' என்று மகளிற்கு கண்டிப்புடன் சொன்னாள். தாயின் குரலில் இருந்த கண்டிப்பால் மேலே பேசாமல் சாமியை பார்த்தாள் பவானி. பின்பு சிறிது நேரம் கழித்து "அம்மா... அம்மா இஞ்சை இந்த பழம் தேங்காய் எல்லாம் யாருக்கு'' ''அது அம்மாளுக்கு'' "அப்ப இந்த தட்டில உள்ள துணியள் எல்லாம் யாருக்கு'' அது துணியில்ல அம்மாளுக்கு உடுப்பு கொண்டு வந்திருக்கினம் சிவப்பு, பச்சை, மஞ்சல் என கண்கவர் வண்ணத்தில் அர்ச்சனை தட்டுக்களில் இருந்த பட்டுக்களையும் இதர பொருட்களையும் பவானி வியப்புடன் பார்த்துக்கொண்டு இருந்தாள். ஒவ்வொரு அர்ச்சனை தட்டில் இருந்தும் அதற்குரியவரினது தராதரம் புரிந்தது.


வரவர' கோயிலில் கூட்டம் அதிகரித்தது. காஞ்சிபுரச் சேலைகளில் சரசரப்பு டாலடிக்கும் ஆபரணங்களின் மினுமினுப்பு கோயில் எங்கணும் வியாபித்து இருந்தது. சில குடும்பங்கள் வெளிநாட்டில் இருந்தும் வந்திருந்தனர். பளபளத்த வெள்ளைத் தோல்களும் மினுமினுப்பான அலங்காரங்களும் அவர்களை வேறு பிரித்துக்காட்டிக் கொண்டிருந்தது. "என்ர மகளுக்கு முதல் பிள்ள தங்கி அழிஞ்சு போச்சு பிறகு இரண்டாவது தங்கினவுடன தான் பயத்தில இந்த கோயிலுக்கு நேர்த்தி வச்சனான். பிள்ள சுகமா பிறந்திட்டுது இப்ப மகள் குடும்பத்தோட அவுஸ்திரேலியா வில இருந்து வந்து நிக்கிறா அவவ கொண்டு விச்சே நேர்த்திக்கடன் முடிக்கவேணும் எண்டுதான் குடும்பத்தோட கூட்டிக்கொண்டு வந்தனான்''ஒரு கனத்த சரீரம் உள்ள பெண்மணி தனக்கு பக்கத்தில் இருந்தவளிற்கு சொல்லிக் கொண்டு இருந்தாள். இது போன்று பல கதைகள் ஆங்காங்கே நடந்து கொண்டு இருந்தது.

வயிற்றை பசி கிள்ளியதால் பவானியால் வேடிக்கை பார்க்கவும் முடியவில்லை. பூசை பார்க் கவும் முடியவில்லை தாயின் கையில் இருந்து அப்படியும் இப்படியும் ஆடிய மகளின் முகத்தை திருப்பி "பூசையப் பார் அம்மா'' என்று கோமதி சொன்னாள். அபிஷேகத்தின் போது ஊற்றிய பால் பவானியின் பசியை மேலும் அதிகரித்திருக்கவேணும் "அம்மா... வீட்ட போவம்'' என்றாள் சிணுங்கலுடன். ''ஷ் சத்தம் போடாதே அங்க பார்'' என்று வலுக்கட்டாயமாக மகளை சாமியை நோக்கி திருப்பினாள். ஏனோ தனது வேப்ப மரத்து கல்லுச் சாமியில் ஏற்பட்ட பக்தி பவானிக்கு இங்கு வரவேயில்லை. ஒருவாறு பூசை முடியவும் பவானி சினத்துடன் தாயின் முந்தானையை உலுக்குவது அதிகரித்திருந்தது. "சரி...சரி..வா வீட்ட போவம் என்று மகளை கையில் பிடித்தபடி நடக்கத் தொடங்கினாள். ஆனால் அங்கு இங்கு நகர முடியாதபடி ஒரே கூட்டம். கோமதியும் நன்கு களைத்து விட்டாள். இருப்பினும் குழந்தையை தூக்கி வைத்துக்கொண்டு நடக்கத்தொடங்கினாள்.



ஒருவாறு கோயிலை தாண்டி வாசலிற்கு வரும் போது கோமதியை ஒட்டி வந்து கொண்டிருந்த பெண்ணின் சில்வர் அர்ச்சனை தட்டின் கூரிய விளிம்பு குத்தி பவானியின் பாவாடை சட்டென கிழிந்தது. சத்தம் கேட்டு கோமதி மகளைப் பார்த்தாள். அப்போதுதான் அதை கவனித்த பவானி விம்மி விம்மி அழத் தொடங்கினாள். ''அம்மா என்ர சட்டை'' அவளின் ஒரே ஒரு பெறுமதியான அழகான பொருள் சேதப்பட்டுவிட்டது. ஏற்கனவே களைத்திருந்த குழந்தையை எப்படி சமாதானப்படுத்துவது என்று கோமதிக்கு புரியவில்லை " என்ர செல்லம் அழக்கூடாது அம்மா பிள்ளைக்கு வேற வேண்டித்தாறன்'' அந்தச் சமாதானம் ஒன்றும் பவானியின் காதில் ஏறவில்லை. வரவர அழுகை அதிகரித்தது. கோமதி என்ன செய்வது என்றே தெரியாமல் திணறினாள். அப்போது சுவர்களில் வரையப்பட்டுள்ள அன்னையின் திருவிளையாடல் காட்சிகளை அவள் கண்ணுற்றாள். அவற்றில் ஒன்றில் பாலாம்பிகையாக அன்னை சிரித்துக் கொண்டிருக்கும் ஓவியம் தெரியவே "பவானிக்குட்டி அங்க பார் அந்த சின்ன அம்மாளாச்சிய உன்னை மாதிரியே கிடக்குது பார்த்தியா அவள் சிரிச்சுக் கொண்டு இருக்கிறாள். நீ அழுதா அவள் உன்னை பகிடி பண்ணுவாள்'' என்று கோமதி சொல்லவும் கழுத்தை திருப்பி அந்த பாலாம்பிகை ஓவியத்தை பார்த்த பவானி அதே வேகத்தில் தலையை திருப்பினாள். அழுகையினூடாகவே "அவளிற்குத்தான் எத்தின உடுப்பு கொண்டு வந்து குடுத்தவ என்னட்ட ஒண்டு தானே ....இப்ப... இப்ப பிஞ்சு போச்சு... அழுறதுக்குஅவள் என்னைப் போலயோ?'' என்று மழலையில் முடித்தாள். கோமதிக்கு ஈட்டி கொண்டு தன் இதயத்தை யாரோ குத்தியது போல இருந்தது. இது வரை புரியாத ஏதோ ஒன்று அவளிற்கு புரிந்தது. மகளை இறுக அணைத்துக் கொண்டாள்.

# நூல்நோக்கு



**வன்னிப்** பகுதியிலிருந்து தற்போது அதிகமான படைப்புகள் நூல்களாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. அண்மையில் தாமரைச்செல்வியின் "அழுவதற்கு நேரமில்லை" என்ற இரண்டாவது சிறுகதைத் தொகுதி வெளிவந்திருக்கிறது. ஏற்கனவே "ஒரு மழைக்கால இரவு" என்ற சிறுகதைத் தொகுதி வெளிவந்திருக்கிறது. "அழுவதற்கு நேரமில்லை" என்ற தொகுதி தொண்ணூறுகளின் பிற்பகுதியில் எழுதப்பட்டு வெவ்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகளில் பிரசுரமான பன்னிரண்டு சிறுகதைகளைக் கொண்டுள்ளது.

இந்தச் சிறுகதைகளில் பெரும்பாலானவற்றுக்குப் பொதுவான அடித்தளமாக, பின்னணியாக 'இடப்பெயர்வு' இருக்கிறது. இடப் பெயர்வின் அவலங்கள், நெருக்கடிகள் எல்லாம் யதார்த்த பூர்வமாகவும், நம்பகத் தன்மையுடனும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

போரின் நெருக்கடிகளினுள்ளும், சமூகத்தின் அழுத்தங்களினுள்ளும் சிக்குண்டு சோதனைகளையும், துயரங்களையும் எதிர்கொண்டு எல்லாவற்றினூடேயும் வாழத்தலைப்படும் சாதாரண மனிதர்களைப் பாத்திரங்களாக்கி உலவவிட்டிருக்கிறார். தாமரைச் செல்வி.

தாமரைச்செல்வியும் பரந்தனிலிருந்து குடும்பத்தினருடன் இடம்பெயர்ந்து ஆறுவருடங்கள் கந்தபுரத்தில் வசித்திருக்கிறார். இடப்பெயர்வின் நெருக்கடிகளை, அவலங்களை அனுபவபூர்வமாக அறிந்திருக்கிறார். அதனால் அவரது இடப்பெயர்வு சார்ந்த எழுத்துக்கள், துயர் தோய்ந்த ஒரு காலகட்டத்தின் நேர்மையான பதிவுகளாக, காலதரிசனத்தைப் புலப் படுத்தக் கூடியவையாக, அனுபவ இழையில் பின்னுண்டதாக அமைந்திருக்கின்றன.

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் பொழுது ஒரு சமூக ஆவணப்பண்பு இத்தொகுதியில் பேணப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எல்லாக் கதைகளும் யதார்த்தப் பாங்கில் (Realist mode) அமைந்திருக்கின்றன. எளிமையான, சிக்கலற்ற, நேர்கோட்டுத் தளத் திலமைந்த கதைகள் இவை. யதார்த்தப் பாங்கிற்கு உரியதான எடுத்துக்கூறுகை (Reportage) முறைமையூடாக இடம் பெயர்ந்த மக்களின் நொறுங்குண்ட வாழ்முறை நேர்மையுடன் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறான சித்திரிப்புப் பண்பு சில விமர்சகர்களால் இளக்காரமாக நோக்கப்படும் போக்கு உள்ளது. அதற்குக் காரணம் இப்பண்பு முறையை அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளாததாக இருக்கலாம். உண்மையில் இப்பண்பு முறை படைப்பாளியின் நுட்பமான, லாவகமான புனைவுத்திறனாலும், அழகியல் நிலைப்பட்ட மொழிக்கையாழ்கையாலும், சுவாரஸ்யமான கதை சொல்லல் முறையாலும் அதிக வீச்சுக் கொள்ளக் கூடியது; இயல்பில் காட்சித் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. மாறாக, இப்பண்பு முறை, படைப்பாளியின் மேம்போக்கானகையாள்கையால் வீழ்ச்சியுறக் கூடியதாகவுமிருக்கிறது.




**நூலின் பெயர்: அழுவதற்கு நேரமில்லை.**
**[சிறுகதைத்தொகுதி]**
**எழுதியவர்:தாமரைச்செல்வி.**
**வெளியீடு சுப்ரம் பிரசுராலயம்**
**77,குமரபுரம், பரந்தன்.**
**விலை :ரூ.150/=**

தாமரைச்செல்வி நீண்ட காலமாக இப்பண்பு முறையிலேயே புனைகதைகளைப் படைத்து வருகிறார். இப்பண்பு முறை சில இடங்களில் அவருக்கு வீச்சாகவும் சில இடங்களில் வீழ்ச்சியாகவும் அமைந்திருக்கிறது. அவர் தனது வீழ்ச்சிகளை இனங்கண்டு கொள்வதன் மூலம் வீச்சான புனைவுத்தளத்தில் தொடர்ந்தும் இயங்கமுடியும்.

**அமரதாஸ்**



# விறகுவெட்டி

மரம் விழும் ஓசை,
மூச்சிரைப்புடன் கூடிய வியர்வையில்
விறகு வெட்டி

கூடு கலைந்த குளவிகள் தாக்கின
தாங்கினான் தன்
குழந்தைகளிற்காக

கொத்திய சிராய்கள்
சிறைப்பட்டன
நாலு தடிகளிற்குள்

மதிய உணவிற்காக
மிதித்தான் தன் துருப்பிடித்த
துவிச்சக்கர வண்டியை

வாடிக்கையாளரின் நாட்குறித்தலிற்கு அஞ்சி.
புது இடம் நோக்கி தொடர்ந்தது
ஓட்டம்

சிந்தனையைக் கலைத்தது பின் சில்லு
சுடு வெயிலில் வெறும் பாதங்களுடன்
விறகு வெட்டி

**ஏழாலையூர் அறிவழகி.**

# படித்ததில் பிடித்தது



## தாமத ஞானம்

**நம்** ஊரில்கூட மறந்து போன மலர்கள் மகரந்தச் சேர்க்கை செய்ய ஆரம்பித்திருக்கின்றன.

மத்தியகல்விக் கழகம் மிக மிகத் தாமதமாய்ப் போதி மரத்தடிக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது.

அண்மையில் மத்திய கல்வி அமைச்சர் திருமதி ஷீலா கௌல் தலைமையில் நிறைவேறியிருக்கும் திண்ணியத் தீர்மானங்கள், தாமரைப் பூவில் உறங்கிக் கொண்டிருக்கும் சரஸ்வதியின் முகத்தில் தண்ணீர் தெளிப்பதாக இருக்கின்றன.

அதில் ஒரு தீர்மானம், மூடிக் கிடக்கும் நம் நெற்றிக் கண்ணைக் குண்டூசியால் குத்துவதுபோல் இருந்தாலும், பல தீர்மானங்கள் வராது போல் வந்த மாமழையாகவே மகிழ வைக்கின்றன.

ஆரம்பக் கல்வியில் பத்தாவது வகுப்புவரை யாரையும் ஃபெயில் ஆக்கி விடக்கூடாது என்ற தீர்மானம் இந்த நாட்டின் பாமரஜாதிப் பையன்களுக்கெல்லாம் கிடைத்த பரிசாகும் என்றே கருதுகிறேன்.

ஏனென்றால் தேர்ச்சி பெறாத ஒரே காரணத்திற்காக இந்த நாட்டில் கருகிப்போன அரும்புகள் ஆயிரம் ஆயிரம்!

"பாஸானால் மேலே படி இல்லையென்றால் இருக்கவே இருக்கிறது எருமை மாடு" என்பது தான் கிராமத்துத் தகப்பன்கள் தினம் தினம் சொல்லிக் கொண்டிருக்கும் திருக்குறள்.

ஒரு சரித்திரச் சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது.

அலெக்ஸாண்டிரியாவைக் கைப்பற்றிய ஒரு முஸ்லிம் அரசன் அங்கிருந்த லட்சக் கணக்கான ஏடுகளைக் கொண்ட நூலகத்தை உடனே கொளுத்திவிட உத்தரவிட்டானாம்.

ஏனென்று கேட்டபோது அவன் சொன்னானாம்:

"இங்கிருக்கும் ஏடுகளெல்லாம் குர்ரானுக்கு விரோதமான கருத்துக்களைப் பேசினால், அவை எதற்கு? கொளுத்தி விடுங்கள்."

"ஒரு வேளை இங்கிருக்கும் ஏடுகளெல்லாம் குர்ரானின் கருத்துக்களைப் பேசினால், அவை எதற்கு? குர்ரானே போதும். கொளுத்தி விடுங்கள்."

கிராமத்துத் தகப்பன்கள் கூடப்பல நேரங்களில் அந்த அரசனைப் போலவே முடிவெடுக்கிறார்கள்.

"இனிமேல் நீ பாஸானாலும் படிக்க வேண்டாம்: ஃபெயிலானாலும் படிக்க வேண்டாம்."

இப்படி நிகழ்கால வறுமைவேறு அவன் விரும்பிய கல்வியை வேட்டையாடி விடுகிறது.

தேர்வில் ஒரு மாணவன் தோத்துப் போவதென்பது அவன் மட்டுமே சம்பந்தப்பட்டதன்று. அவன் மட்டுமே சம்மந்தப்படாத ஒரு பாவத்திற்கு அவன் மட்டுமே தண்டனை அனுபவிப்பது என்ன நியாயம்?

நமது கல்வி முறையில் போதிப்பதை விடச் சோதிப்பது அதிகமாக இருக்கிறது.

ஓராண்டு வரைக்கும் கூட 'நமது கல்வி நம் மாணவனுக்கறிவு கொடுக்கவில்லை யென்றால் நாம் நம் கல்வி முறையின் ஆண்மைக்கு ஒரு பரீட்சை வைக்க வேண்டியிருக்கிறது.

இந்தத் தேர்வுமுறை எழுத்தறிவு பெறும் முதல் தலைமுறையின் குழந்தைகளையே கொன்று குவிக்கிறது.

காதல் தோல்விகளும், தேர்வுத்தோல்விகளும் நம் நாட்டின் ஜனத் தொகையைக் கணிசமாகக் குறைத்திருக்கின்றன என்பது கவலைக்குரிய ஓர் உண்மையாகும். எழுத்தறிவே இல்லாத குடும்பத்தில் வறுமையின் இருட்டுக்குள் இருந்து வருகிறவன் எப்படி ஒரே வருஷத்தில் சூரியனாகச் சுடர் விட முடியும்?

நமது சமூகப்பொறுப்பு என்பது அவர்களுக்கு அறிவூட்டுவதுதானே அன்றி அவ நம்பிக்கை ஊட்டுவது அன்று.

"அவர்கள் மூளையில்
விதையைப் போல்
தூவப்படவேண்டிய அறிவு
ஆணியைப் போல்
அறையப்படுகிறது.

இந்த
இள மூங்கில்களை
ஐந்திலேயே வளைக்க
ஆசைப்பட்டார்கள்!
பல மூங்கில்கள்
வளைக்கும் அவசரத்தில்
முறிக்கப்பட்டதால்
விறகுக் கடைகளில்
விற்பனையாயின!"

-என்று என்னைப் போன்றவர்கள் ஆதங்கப்பட்டு அழுத கண்ணீரைத் துடைப்பதற்குக் கல்விக் கழகத்தின் சுட்டு விரலுக்குச் சுறுசுறுப்பு வந்திருக்கிறது: நன்றி.

**வைரமுத்து**

**சோலை மாடாசாமி**



# மண்பேசும்


மண் பேசும் மாந்தர் வாயசைப்பர்,
மண் சொல்லும் நாம் கேட்போம்,
மண் தீர்மானிக்கும் நாம் நிறைவேற்றுவோம்,
மண்ணின் தேவையை நாம் பூர்த்திசெய்வோம்,

மண்ணின் சொற்படி நடப்போம்,
மண்ணின் வழியில் செல்வோம்,
மண்ணின் பாதையை வரலாறென்போம்,
மண்ணின் போக்கைப் பொருளாக்குவோம்,

மண்ணைக் காப்பது எம் கடனே,
மண் பறிபோகின் எம்முயிர் போகும்,
மண் தாய்மொழி பேசும்,
மண் மொழியைத் தீர்மானிக்கும்,

மண்ணே பண்பாடு,
மண்ணே மரபு, வரன்முறை,
மண்ணிற் பெரிது யாதுள?
மண்ணுக்கப்பால் யாதும் இல்லை.

மண் எமது ஆதாரம்,
மண் எம்முயிரின் அடையாளம்
மண் போயின் நாமில்லை
மண்தான் எல்லாம்.



# இளையநாதம்

ஊர் வரண்டு போனது. மக்கள் குமரனிடம் வந்தனர் "மழை எப் போது வரும். வறுமை எங்களை வாட்டுகிறது" என்றனர். குமரன் சர்வ வல்லமையை இழந்தான். ''என்னால் மழையை வரவைக்கவும் இயலாது. எப்போது பெய்யும் என்று சொல்ல வும்முடியாது" என்றான் பரிதாப மாக.

மக்கள் வறுமையை நீக்க வேறுஊர் சென்றனர். வழியில் ஒரு புதியவரைக் கண்டனர். அவ ரிடம் தங்கள் குறைகளைக் கூறி னர். ''உங்கள் குறையை நான் போக்குகிறேன்" என்றார் அந்தப் புதியவர். மக்கள் குறைகளைத் தீர்க்க கடவுளிடம் மழையை வரும் படிவேண்டினார். உடனே மழை பெய்தது. ஊர்மக்கள் புதியவரைப் பாராட்டினர்.

எல்லோரும் புதியவரைப் புகழ அவரைக்காண குமரன் சென் றான்."அட நீயா என்னுடன் குரு குலத்தில் படித்தவன் தானே? உனக்கு எப்படி இந்த ஆற்றல் வந் தது" என்று கேட்டான் கும ரன். "குருநாதர் தந்த எல்லா விதை களிலுமே நீலப் பூ பூத்தது. நான் மட்டுமே நீலப் பூவை குரு நாத ரிடம் கொடுத்தேன். அதற்கு பரிசாக குருநாதர் தந்தது தான் இந்த அபார சக்தி. நீயும் குருவை மதித்து வாழ்ந்திருந்தால் என்னைப் போல் இந்த அபாரசக்தி. யை பெற்றிருப்பாய். "என்றார் அந்த புதியவர். குமரன் தான் குருவை மதித்து வாழ வில்லை என எண்ணி வருந் தினான்.

''இளையவர்களே நீங்களும் உங்கள் குருவை மதித்து வாழ்வீர்க ளானால் உங்களுக்கும் பல நன்மைகள் உண்டாகும்.''

**சு.கௌரீஷன்.**

குருகுலப்பயிற்சி முடித்து மாணவர்கள் விடைபெற்றபோது. ''நான் கொடுக்கும் விதையை உங்கள் இல்லத்தில் நட்டு வளர்த்து வாருங்கள், யாரிடம் வளரும் செடியில் நீலப்பூ பூக்கிறதோ அவருக்கு மழை வரவைக்கும் சக்தியும் மழை

## குருவை மதித்துவாழ்

எப்போது வரும் என்று சொல்லும் சக்தியும் உண்டாகும். ஆனால் ஒண்டு யார் செடியில் நீலப்பூ பூக்கிறதோ அவர் அப்பூவை என்னிடம் கொண்டு வந்து கொடுத்துவிட வேண்டும். என் ஆசி எப்போதும் உங்களுக்கு உண்டு. போய் வாருங்கள்'' என்று கூறி அனுப்பிவைத்தார் குரு.



நான்கு மாணவர்களும் விதையை நட்டு வளர்த்து வந்தார் கள். அதில் குமரனின் விதையிலி ருந்து வளர்ந்து வந்த செடி நீல நிறப்பூ பூத்தது. ''எனக்கு சர்வவல் லமை வந்து விட்டது. இனி எதற்கு நான் குருவிடம் இந்தப் பூவை கொடுக்கவேண்டும்." என எண்ணி னான். குருவை அலட்சியம் செய் தான். தனக்குசர்வ வல்லமை வந்து விட்டது. இதை மக்களுக்கு காட்டவேண்டும் என்ற இறுமாப் போடு ஊர் மக்களைக் கூட்டினான். "மக்களே எனக்கு சர்வ வல்லமை வந்து விட்டது.இதோ சிறிது நேரத்தில் மழை வரும் என்றான். உடனே மழை பெய்தது. மக்களும் குமரனைப் பாராட்டினர். சில காலம் மழையின்றி

## வாரம் ஒரு குறள்



ஒழுக்கம் நிறைந்த மேலோர் சொல்வதைக் கேட்டு நாம் ஒழுகி நடக்கத் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் செய்யும் நல்ல செயல்களைக் கண்டு நாமும் அவற்றைச் செய் யப் பழக வேண்டும். இதனால் எமக்கு நன்மை ஏற்படுமே யொழியத் தீமை ஏற்பட மாட்டாது. ஆகவே நாம் இதனைக் கைக் கொள்ளாது போனால், எவ்வளவு நூல்களைக் கற்றவர்களாக இருப்பினும் கல்லாதவர்களே ஆவோம். இதனை வள்ளுவப் பெருந்தகை எப்படிக் கூறுகிறார் என்பதைப் பாருங்கள்.

**"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்**
**கல்லார் அறிவிலாதார்''**

ஆகவே நாம் கற்றவர்களாக வாழப்பழகுவோம்.

## தமிழீழம் பற்றிய சில தகவல்கள்

1) தமிழீழத்தில் அதிகளவு குளங்களைப் பெயர்களாகக் கொண்ட மாவட்டம் எது?
வவுனியா

2)தமிழீழத்தில் நெல்வளம் அதிகளவு காணப்படும் மாவட்டம் எது?
அம்பாறை

3) தமிழீழத்தில் மழைவீழ்ச்சி கூடிய மாவட்டம் எது?
மட்டக்களப்பு

4) தமிழீழத்தில் சிலிக்கா மணல் அதிகமாகக் காணப்படும் இடம் எது?
நாகர்கோயில் -யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளது.

5) தமிழீழத்தில் இல்மனைற் அதிகளவு காணப்படும் இடம் எது?
புல்மோட்டை

**வேதா- நிருவரன்,**
**ஆண்டு - 5,**
**மு/ சுப்பிரமணியம் வித்தியாலயம்,**

## விஞ்ஞான விளக்கம்

### பாம்புக்குக் கால்களில்லை ஏன்?


பல்லி, ஓணான் போன்ற காலுள்ள விலங்குகளிலிருந்து பாம்புகள் பரிணமித்தவை ஆகும். இப்பொழுதுள்ள பாம்புகளின் மூதாதையினங்களுக்குக் கால் களிருந்தன. பல ஆயிரக் கணக் கான தலை முறைகளாகப் பாம்புகள் தங்கள் கால்களைப் பயன் படுத்தாமலே விட்டிருந்ததால் அவற்றின் வளர்ச்சி சிறிது சிறிதாகக்குன்றி இப்பொழுது அடி யோடு மறைந்துவிட்டன. எனினும், மூதாதையினத்தின் சின்னமாகப் பல பாம்புகளில் கால் எலும்புகள் எச்சமாக (vestiges) காணப்படு கின்றன. மலைப் பாம்புகளில் பின்னங்கால் எலும்புகள் உள்ளன. காலுள்ள விலங்குகளிலிருந்தே இவை பரிணமித்தன என்பதற்கு இது ஒரு முக்கியமான சான்றாகும்.

## பாராட்டுக்கள்



புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் 2004 கலைப் பிரிவில் கல்விகற்கும் இராசநாயகம் ராஜ்குமார் அவர்கள் தமிழீழ தேசியத்தலை வருடைய உருவத்தினை மரத்தில் சிற்பமாக செதுக்கியுள்ளார். இவர் ஓவியங்கள் வரைவதிலும் ஈடுபாடுடை யவர். இவரது முயற்சிக்கு நாமும் ஊக்கமளித்து பாராட்டுவோம்.

## நகைச்சுவை



**ஒருவர்:-** ஏன்டா அவனைப் போட்டு அடிக்கிறாய்.

**மற்றவர்:-** ஒருவருடத்திற்குமுன் இவன் என்னை தேவாங்கு என்று பேசிப்போட்டான்.

**ஒருவர்:-** ஒருவருடத்திற்கு முன் பேசியதற்கு ஏன் இப்ப அடிக்கிறாய்.

**மற்றவர்:-** இன்று தான் நான் தேவாங்கைப் பார்த்தேன்.

**இ. ராஜ்,**

## பொது அறிவு

01. உணவு விவசாய தாபனத்தின் தலைமையகம் அமைந்த இடம்எது?
இத்தாலி

02.ஜேர்மனியையும், டென்மார்க்கையும் பிரிக்கும் கால்வாய் எது?
கீல்கால்வாய்

03. உலக நெல் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?
பிலிப்பைன்சின் தலைநகரான மணிலாவில்

04. துருக்கியின் தலை நகரம் எது?
அங்காரா

05. இங்கிலாந்திற்கும் ஆஜென்ரீனாவிற்கும் இடையே சர்ச்சையை ஏற்படுத்தி யுள்ளதீவு எது?
போக்லந்தீவு

06. பீரிங் நீரிணையின் அகலம் யாது?
90Km

07. 2000ம் ஆண்டு உலக வர்த்தக மாநாடு நடைபெற்ற நகரம் எது?
சியிட்டல்(மேற்கு அமெரிக்கா)

08. உலகின். தற்போதைய மிக வறிய நாடு எது?
ஆப்கானிஸ்தான்.

**க.கஜந்தினி,**
**வவுனியா.**

## குறுக்கெழுத்துப் போட்டி 16

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | 05 | 06 |
| | | 09 | | | |
| 13 | | 15 | 16 | | |
| 19 | | | 22 | | |
| | | | | 29 | |
| 31 | | | | | |

**இடமிருந்து வலம்**
01. வில்லில் இருந்து புறப்படுவது.
05. யானை.
09. கோயில்
13. பந்தயம்.
22. ஓர் நட்சத்திரம் குழம்பி உள்ளது
31. பாட்டு

**மேலிருந்து கீழ்**
01. மன்னன்.
02. விளையாட்டு பொருள் தலைகீழாக உள்ளது.
06. இரக்கம் குழம்பி உள்ளது.
15. அடைக்கலம்.
16. இரத்தம் தலைகீழாக உள்ளது.
29. குதிரை

**குறுக்கெழுத்துப்போட்டி இல.14 இன் விடைகள்**

**இடமிருந்து வலம்**
01. பஞ்சாயத்து.
07. மச்சம்.
13. சாணக்கியம்.
19. தாள்.
22. அவனி.
25. பரிச்சய(ம்)
31. குக்குடம்.

**மேலிருந்து கீழ்**
01. பச்சாதாபம்.
03. சாயம்.
06. துறவற(ம்)

**குறுக்கெழுத்துப்போட்டி இல.14இன் பாராட்டுக்குரியவர்கள்.**

ஸ். மேரிஸ்ரனிலா,
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

ச. தாரணி,
1ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.14 இன் பரிசுக்குரியவர்**
**மலர் கனகசிங்கம்,**
**இல,141, 4ம் குறுக்கு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

இளையவர்களே!
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.16
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

ஒன்றைச் செய்யவும், தனியொருவராக விளங்கவும் வாய்ப்பு அளிப்பது இளமை —தியோடோர் மங்கர்

# சிறுகதை இலக்கிய ஆய்வுரை

கலாநிதி க.சோமாஸ்கந்தன்

இக்கூற்று ஆய்வாளர் மத்தியில் வாதப்பிரதிவாதங்களை கிளப்பியுள்ளது. கதாபாத்திரங்களிலும் பார்க்க அவர்களுடைய உணர்வுக்கும் கருத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்தவர் ஹெமிங்வே. இவரைப் பின்பற்றுவது கடினம் என்ற காரணத்தால் இவரைப் போன்று எழுதுபவர்கள் மிக அரிது.

சிறுகதையின் தளச்சூழலுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அமைவிடத்தை முன்னணிஸ்தானத்திற்கு கொண்டு வருவதில் வெற்றி பெற்ற எழுத்தாளர் அமெரிக்காவின் பிறெட்ஹாட் (BRET HARTE) ஆவார். இவர் தனது கதைமாந்தர்களை பெருவெளி, பாலை நிலம் போன்ற பிரமாண்டமான பிரதேசங்களில் உலாவவிடுவார். அவர்கள் உலாவும் பின்னணியோடு ஒப்பிடும் போது தம்மைப் பெரிதாக நினைக்கும் கதைமாந்தர்கள் உண்மையில் எவ்வளவு சிறியவர்கள் என்று நிரூபிப்பது அவருடைய பாணி. இவருடைய பாணியில் எழுதி வெற்றி பெற்றோர் மிகவும் குறைவு.



குறியீட்டு அடையாளங்களையும் சின்னங்களையும் கதாபாத்திர நிலைக்கு உயர்த்தியவர் அமெரிக்க எழுத்தாளர் நதானியல் ஹோத்தோன் (1804-1864) (NATHANIEL HAWTHORNE) "உருவகக் கதைகள்" என்ற ரகம் தமிழில் உண்டு. இவை ஹோத்தோனின் கதைகளை ஒத்தவை.

ஹோத்தோனின் "பிறவி அடையாளம்'' (THEBIRTH MARK) என்ற சிறுகதை உலக பிரசித்தமானது. ஒரு இளம் சத்திர சிகிச்சை நிபுணரின் அழகே உருவான இளம் மனைவியின் முகத்தில் ஒரு மச்சம். சத்திர சிகிச்சை மருத்துவ முறைப்படி அவர் அந்த மச்சத்தை அகற்றுகிறார். ஆனால் மனைவி உயிர் தப்பவில்லை, மரணம் அடைகிறாள்.

இந்தக் கதையை ஆய்வாளர்கள் பல கோணத்தில் ஆய்வு செய்துள்ளனர். கதைக்கு அவர்களின் பெருபாலானோர் கொடுக்கும் விளக்கம் பின்வருமாறு. மனித உடலும் உள்ளமும் மாசு மறுவற்றதல்ல. தனது உடல் மற்றும் உள்ளத்து மாசுகளை அகற்ற மனிதன் முயற்சி செய்கிறான். முற்றுமுழுதான மாசுமறுவற்ற நிலை இயற்கைக்கு முரணானது, மரணத்துக்குச் சமமானது. மாசு மறுவற்ற நிலையை அடைந்தவர்கள் உயிரோடு இருப்பதில்லை.

படைப்பாளிகளும் ஆய்விலக்கியம் படைப்பதுண்டு. அப்படியானவர்கள் இரு கூறுகளையும் ஒன்றிணைக்கும் பாலமாக இடம் பெறுகின்றனர். சிறுகதை இலக்கியத்தின் மூல கர்த்தாக்களில் ஒருவரான எட்கார் அலன் போ பற்றி பிறிதோர் இடத்தில் குறிப்பிட்டுள்ளோம். தனது சமகாலத்தவரான நதானியல் ஹோத்தோனின் சிறுகதைத் தொகுதி பற்றி 1842இல் போ ஒரு ஆய்வுக்கட்டுரை எழுதினார். படைப்புத் துறையைச் சேர்ந்த ஒருவர் வெளியிட்ட முதலாவது ஆய்வு இலக்கியமாக இது கருதப்படுகின்றது.

சிறுகதையின் அமைவு பற்றி மூன்று அம்சக் கோட்பாட்டை போ தனது கட்டுரை மூலம் வெளிப்படுத்தினார். மனித உணர்ச்சிகளில் ஒன்றை மாத்திரம் ஒரு சிறுகதை சித்திரிக்க வேண்டும். அது வீரமாகவோ, அச்சம், இரக்கம், பயங்கரம், காதல் போன்றதாகவோ இருக்கலாம். ஆனால் ஒன்றுக்கு மேற்பட்டதை கதையின் அடிப்படை உணர்ச்சியாக எடுக்கக் கூடாது என்கிறார் போ. படைப்பாளிகளும் ஆய்வாளர்களும் இதை ஏற்றுக் கொள்கின்றனர்.

அடுத்ததாக அவர் இரண்டாம், மூன்றாம் அம்சங்களாக சொற்சிக்கனத்தையும், கதை இறுக்கமாகப் பின்னப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். கதையில் தொய்வு இருக்கக் கூடாது என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம்.

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த ஆங்கில மொழிக் கவிஞனான தோமஸ்ஸ்ரியோ ன்ஸ் எலியட் (Thomas Stearn s Eliot) எழுதிய இலக்கியத்தில் மரபு. (Tradition in Literature) என்ற ஆய்வுநூல் பல்கலைக் கழகங்கள் பலவற்றில் பாடநூலாகப் பயன்படுத்தப்படுகின்றது. நவீன ஆங்கில கவிதை வடிவத்தின் பிதாமகராக எலியட் போற்றப்படுகின்றார். 1948ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசு (இலக்கியம்) இவருக்கு வழங்கப்பட்டது.

எலியட் எழுதிய ஆய்வு நூலின் மையக்கருத்து, மரபின் வழிவந்ததே நவீன இலக்கியம் என்பதாகும். மரபின் ஒரு கிளையாக நவீன இலக்கியம் தொடர்வதாக எலியட் சுட்டிக்காட்டுகிறார். எந்தவகை புரட்சிகர இலக்கியமாக இருந்தாலும் அதனுடைய வேர் மரபிலக்கியத்தில் தொடர்புபட்டுள்ளது என்பது எலியட் கோட்பாடு.

படைப்பிலக்கியம் மனித வரலாறாகவும் காலத்தின் கண்ணாடியாகவும் அமைகின்றது. ஒரு சமூகத்தின் வரலாற்றை ஆய்ந்து பெற படைப்பிலக்கியம் வகை செய்கின்றது. புதிய எண்ணங்கள், சிந்தனைகள் என்பவற்றை வெளிப்படுத்தும் களமாக படைப்பிலக்கியம் இடம்பெறுகின்றது. கலைஆக்கம் காலத்தைப் பிரதிபலிப்பது. தான் வாழும் சூழலில் இருந்தே கலைஞன் தனது படைப்பை உருவாக்குகிறான். அவன் வாழும் காலம் அவனைப் பாதிக்கின்றது.

தான், தனது சூழல், தனது காலம் ஆகிய மூன்றையும் தனது படைப்பினூடாக ஒரு படைப்பாளி நேர்மையாக வெளிப்படுத்தும் போது அந்த ஆக்கம் வரலாற்றுப் பதிவாக அமைகின்றது. அது தனி மனிதஅனுபவம் என்ற நிலையைக் கடந்து பொது மனிதப் பண்பாக வெளி வருகின்றது. தனிநிலை அனுபவத்தை பொதுநிலை அனுபவமாக மாற்றும் திறன் மிக்கவனே சிறந்த படைப்பாளி ஆகின்றான்.

அவற்றைக் கருத்தில் எடுத்து மேலைத்தேய ஆய்வாளர்கள், "கலை, தனிமனித சுயசரிதை" என்பார்கள். இந்த நோக்கின் எல்லா வகைப் படைப்பிலக்கியமும் மனிதத்தின் பொது ஆவணமாகப் பார்க்கப்படுகின்றது. இருப்பினும் ஒரு இனத்தின் தேசிய அடையாளம் அந்த இனத்தின் படைப்பிலக்கியத்தின் ஊடாகப் புலப்படும் என்பதே உண்மைநிலை.

ஒரு இனத்தின் வரலாற்றினை அறிந்து கொள்ள உதவும் வாய்களுள் படைப்பிலக்கிய ஆய்வியலும் ஒன்று. இவ் ஆய்வு மொழியியல், தொல்பொருளியல், சமூகவியல் போன்ற பல்துறை ஆய்விற்கும் மிகுதுணையாக விளங்குகின்றது. மக்களின் நாகரீகம், பண்பாடு ஆகியவற்றை அறியவும் இவ் ஆய்வு துணை போகின்றது.

"சென்றிடுவீர் எட்டுத் திசைக்கும்- கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்ற அறைகூவலுக்குள் அமைவாக மேற்கின் திறனாய்வுப் பாரம்பரியங்களை தமிழுக்கு கொண்டு வந்தவர் பேராசிரியர் க. கைலாசபதி ஆவார். பேராசிரியருக்கு முன்னர் நன்கு நெறிப்படுத்தப்பட்ட திறனாய்வு நடைமுறைகள் தமிழில் இல்லை.

பேராசிரியர் க.கைலாசபதி. (1933-1982) ஈழத்து எழுத்தாளர் பலரை உருவாக்கியவர், வழிநடத்தியவர். படைப்பிலக்கியம் பற்றி அவர் அறுதியிட்டுக் கூறும் ஆய்வுக் குறிப்புகள் காலத்தால் அழியாதவை. சிறுகதை ஒரு சொற்சித்திரம் என்பதால் சொற்சிக்கனம், சொற்செட்டு பற்றி கவனம் எடுக்கும்படி அவர் வலியுறுத்தினார்.

> **நுண் காட்சித்திறன், சுற்றி வளைக்காமல் பொருளுக்கு வரும் வேகம், விவரங்கள் கூறுவதில் சிக்கனம், எளிமை, அலங்காரம் இல்லாத சொல்லாட்சி, நடைத்திறன் என்பன சிறுகதையின் சிறப்பம்சங்கள் என்று அவர் சுட்டிக் காட்டினார். ஆழ்ந்த தமிழ்ப் புலமையும், நவில்தோறும் நயம் தரும் பழம் தமிழ் சொற்களின் மீள்பாவனையும் தமிழ் சிறுகதைக்கு அணிகலன்களாக அமையும் என்றார்.**

நுண் காட்சித்திறன், சுற்றி வளைக்காமல் பொருளுக்கு வரும் வேகம், விவரங்கள் கூறுவதில் சிக்கனம், எளிமை, அலங்காரம் இல்லாத சொல்லாட்சி, நடைத்திறன் என்பன சிறுகதையின் சிறப்பம்சங்கள் என்று அவர் சுட்டிக் காட்டினார். ஆழ்ந்த தமிழ்ப் புலமையும், நவில்தோறும் நயம் தரும் பழம் தமிழ் சொற்களின் மீள்பாவனையும் தமிழ் சிறுகதைக்கு அணிகலன்களாக அமையும் என்றார்.

உரைநடைச் சிறப்பு சிறுகதையின் உயர்வுக்கு உதவுகின்றது. படைபாளியின் தனிப்பட்ட முத்திரை அவனுடைய உரைநடையில் புலப்பம். ஏனோ தானோ என்று எழுதும் போது கலக்கி அள்ளினால் சாம்பார், கலக்காமல் அள்ளினால் ரசம் என்ற இரண்டும் கெட்டான் நிலை ஏற்படும். முன்னுக்கு வர விரும்பும் ஒவ்வொரு படைப்பாளியும் தனது இயல்புக்குப் பொருத்தமான உரைநடையை உருவாக்கி அதனூடாகத் தனது திறமையை வெளிப்படுத்த வேண்டும்.

சொற்சிக்கனம் பற்றி அண்மையில் கிடைத்த தகவலொன்றை இங்கு தருகிறோம். தமிழகத்தின் முன்னணிப் படைப்பாளியும், அனைத்திந்திய மட்டத்தில் ஒப்பற்ற கணனிப் பொறியியலாளருமாகிய சுஜாதா, மின்னணு வாக்குப் பதிவு எந்திர சாதனத்தை உருவாக்கும் நிபுணர் குழுவுக்குத் தலைமை தாங்கினார்.

இச்சாதனம் உருவாக்கப்பட்ட வெற்றியைப் பாராட்டும் முகமாக வாழ்த்து மடல் அனுப்பப்பட்டது. அதற்கு அவர் "ஈன்ற பொழுதினிற் பெரிதுவக்கும்" என்ற மூன்று குறள்பா சொற்களை மாத்திரம் எழுதிப் பதிலளித்தார்.

படைப்பாளிகள் எப்போதும் பரந்த வாசிப்பை தவறாது கடைப்பிடிக்க வேண்டும். பன்மொழி அறிவும், பிற நாடுகளுக்கு மேற்கொள்ளும் பயணங்களும் படைப்பாளிகளின் அறிவு விருத்திக்குப் பெரிதும் உதவும். இந்த வசதி கிடைக்காவிட்டால் வெளி உலகு பற்றிய பரந்த அறிவைப் பெற பயண நூல்களைப் படிக்க வேண்டும் தமிழில் பயண நூல்கள் மிகவும் குறைவு. தனிநாயகம் அடிகளாரின் "தமிழ் தூது", கலாநிதி ஏ.எம்.ஏ அசீஸ் எழுதிய "தமிழ் யாத்திரை", "மிஸ்ரின் வசியம்", "கிழக்கு ஆபிரிக்கா காட்சிகள்" போன்ற ஒரு சில உள்ளன. இவற்றையாவது படைப்பாளிகள் படித்துப் பயன்பெற வேண்டும்.

நிறைய வாசிக்காமல் சிந்திப்பதும், எழுதுவதும் கடினம். பானையில் இருந்தால் அகப்பையில் வரும். ரசனை என்பது தெளிவான வாசிப்பால் கிடைக்கும் பயன். "படித்தேன்,படித்தேன், படிதேன் கிடைத்தது" என்று தமிழ் ஆர்வலரும் எழுத்தாளருமாகிய கி.ஆ.பே. விஸ்வநாதன் கூறுவார்கள். சிந்தனைத் தெளிவும், எழுதும் ஒழுங்கு முறையும் படைப்பாளியின் இரு கண்களாகும்.

இலக்கியத் திருட்டு, மொழிக்கலப்பு பற்றியச் சிறு குறிப்புக்கள் தருகிறோம். வெளியுலக இலக்கிய நடைமுறைகளை உள்வாங்குதல் வேறு, அப்பட்டமான இலக்கியத் திருட்டு என்பது வேறு. இதை நாம் நன்கு விளங்கிக் கொள்ளல் வேண்டும். இத் தொடர்பில், இருபதாம் நூற் றாண்டின் மிகச் சிறந்த ஆங்கிலச் சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவரான சோமசெற் மோகம் (Somerset Maugham) பற்றியதொரு செய்தி நினைவுக்கு வருகின்றது. இவர் பல நாவல்கள், நாடகங்கள், பயண நூல்கள் போன்றவற்றையும் படைத்தவர். இவருடைய ஆக்கங்கள் திரைப்படமாக்கப்பட்டுள்ளன.

எழுத்துலகில் திடீர் பிரவேசம் செய்ய உத்தேசித்த ஒரு இளைஞர் மோகமின் படைப்புக்கள் பலவற்றில் இருந்து பந்திகள், வரிகள், சம்பவங்கள் பாத்திரங்கள் போன்றவற்றைத் தெரிந் தெடுத்து அவற்றைத் தனியொரு படைப்பாக்கினார். சஞ்சிகை ஒன்றிற்கு நல்ல விலைக்கு அதை விற்றார். ஆக்க உரிமைச் சட்டத்தின் கீழ் இளைஞர் மீது நடவடிக்கை எடுக்கும் படி போகமுக்கு ஆலோசனை கூறப்பட்டது. அவர் அதை ஏற்க மறுத்தார்.

"எனது எழுத்தின் சிறப்பை அந்த இளைஞர் உணர்ந்துள்ளார். அவருடைய செயலை எனக்குத் தரப்பட்ட பாராட்டாகக் கருதுகிறேன்" என்றார். மோகம். எல்லாப் படைப்பாளிகளும் அவரைப்போல் கருணை காட்டுவதில்லை. இலக்கியத் திரட்டுக்காக மேற்குலகில் சட்ட நடவடிக்கைகள் நிறைய எடுக்கப் படுகின்றன, தண்டனைக் பணமும் ஏராளம் அறவிடப்படுகின்றது.

தமிழக சஞ்சிகைகளில் இருந்து பெயர்ந்து எடுத்தவற்றை உருமாற்றம் செய்து, மலிவான புகழ்தேடும் முயற்சி அருவருப்பானது. உலகம் முழுவதிலும், கலை இலக்கியச் சூழலில் இடம் பெறும் மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு எமது பாரம்பரிய மரபுகளுக்கு ஏற்ற விதத்தில் பயன்படுத்த வேண்டும். இது ஆரோக்கியமானது.

தமிழக ஊடகங்களில் தமிழோடு இங்கிலீசு மொழிகலந்த "தமிலீசு" மொழி ஆதிக்கம் செலுத்துகின்றது. தமிழைத் தழிழாக எழுதுபவர்கள் தமிழீழப் படைப்பாளிகளே என்பதையிட்டு நாம் பெருமைப்படலாம். ஏராளமான பிறமொழிச் சொற்களைச் சொரியும்போது தமிழின் தன்மை கெடும். மொழி அடையாளத்தை இழந்த இனம் அழிந்து போகும்.


ஈழத்துப்படைப்பிலக்கியத்தை சமகால தமிழக படைப்பாக்கங்களுடன் ஒப்பு நோக்கிய சுஜாதா, தமிழீழப் படைப்பாளிகளே தமிழ் இலக்கியத்தை வளமூட்டி முன்னெடுத்துச் செல்கிறார்கள் என்கிறார். காலத்தை வெல்லும் படைப்புக்கள் விடுதலை உணர்வும், போர்குணமும் செறிந்த சமுதாயத்திலே உருவாகின்றன.

தமிழீழப் படைப்பாளிகளுக்கு பெரும் பொறுப்பு இருக்கிறது. இந்தியப்படையினர் காலத்து அவலங்களையும், சிங்கள இராணுவம் புரியும் அக்கிரமங்களையும், களமாடும் புலிவீரர் வரலாற்றுச் சிறப்புக்களையும் காலரீதியாக ஆவணப்படுத்தும் கடப்பாடு அவர்களுக்கு உண்டு.

முற்றும்.

நாம் பிறந்த போதே இறக்கத் தொடங்குகிறோம்; முடிவு, தொடக்கத்தை நம்பியது -லத்தீன் பழமொழி

## மக்கள் மத்தியில்



# என்ன சோதனையோ? இது என்ன விதியோ?

**வெளிவாசல் பாலன்**



**பொதுவாக வன்னிச் சந்தைகளில் இப்பொழுது கடல் உணவுகள் கிடைப்பது குறைவு. நல்லனயாவும் கொழும்புக்கும் வேறு ஏற்றுமதிக்கும் போய் விடுகிறது. மிஞ்சியவைதான் எமது சந்தைகளுக்கு வருகின்றன. கடந்தவாரங்களில் சாதாரண சூடைமீனின் விலையே 160/= ரூபா ஒரு கிலோவுக்குப் போனது. ஐந்து கிலோ சூடைமீனின் விலையும் ஒரு மூடைநெல்லின் விலையும் ஒன்று.**

வன்னியில இப்பொழுது மீனின் விலை நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு உயர்ந்திருக்கிறது. எல்லா வன்னிச் சந்தைகளிலும் மீன் வாங்கவரும் வாடிக்கையாளர்கள் முகத்தைச் சுழித்துக் கொண்டு புறுபுறுத்துக்கொண்டும் தான் மீன்வாங்குகிறார்கள். சிலர் வாங்காமலே திரும்புகிறார்கள். சிலருக்கு இந்த விலையில் மீன்வாங்க முடியவில்லை. அவர்களின் பொருளாராத நிலை அப்படி. வருமானத்துக்கேற்றபடி செலவு செய்ய இந்த மீன்விலை ஒத்துப்போகாதிருக்கிறது.

முன்னர் எப்போதும் இல்லாத அளவுக்கு இப்படி இந்தவிலை உயர்வு எப்படி எற்பட்டது என்பதுதான் வாடிக்கையாளர்களின் கேள்வியாக இருக்கின்றது.

சந்தையில் வியாபாரிகளிடம் கேட்டால், "நாங்களென்ன செய்கிறது. மீனுக்குத் தட்டுப்பாடு. எல்லாமீனும் கொழும்புக்குப் போகிறது. அதனால் கூடுதலான விலைகொடுத்துப் போட்டியில் தான் இவற்றை எடுத்து விற்கவேண்டியிருக்கு"

என்கிறார்கள். அவர்கள் சொல்வதை வைத்துப்பார்த்தால், இப்போது கொழும்புச் சந்தைதான் முக்கியமாகிவிட்டது. எங்களுடைய சந்தைகள் கவனிப்பாரற்றுக் கேட்பாரற்று விட்டனவோ என்று எண்ணத்தோன்றுகிறது.

முன்னர் பொருளாதாரத்தடையிருந்த காலத்தில், எரிபொருள் தட்டுப்பாடாகவும் விலை உயர்வாகயிருந்த போது இப்போதிருக்கும் விலையைவிடப் பாதி குறைவாகவே இருந்தது. எரிபொருளின் விலையுயர்வு, கடல்வலய நெருக்கடிகள் எல்லாவற்றினாலும் நெருக்கடியையும் பெருங்கஸ்ரங்களையும் சந்தித்த மீனவர்கள் அப்போது பெற்ற வருமானம் குறைவானதுதான். ஆனால் பாவனையாளர்கள் பாதிக்கப்படாமலிருந்தார்கள்.

இப்போது கடல்நெருக்கடிகள் ஓரளவுக்கேனும் குறைந்திருக்கின்றன. எரிபொருள் விலையும் குறைந்துவிட்டது. உதிரிப்பாகங்கள் தாராளமாக வருகின்றன. கடற்றொழில் உபகரணங்கள் வேண்டியளவுக்கு தாராளமாக உண்டு. ஆனால் மீனின் விலை தான் மிகமிகக் கூடியிருக்கிறது. மீன் மட்டுமல்ல, கடல் உணவு வகைகளான இறால், நண்டு, கணவாய் போன்றவற்றின் விலையும்தான் கூடியிருக்கிறது. எவரும் எதையும் வாங்க முடியாத அளவுக்கு இந்த விலை உயர்வு இருப்பதுதான் இதில் கவனிக்க வேண்டியது.

பொதுவாக வன்னிச்சந்தைகளில் இப்பொழுது கடல் உணவுகள் கிடைப்பது குறைவு. நல்லனயாவும் கொழும்புக்கும் வேறு ஏற்றுமதிக்கும் போய்விடுகிறது. மிஞ்சியவைதான் எமது சந்தைகளுக்கு வருகின்றன. கடந்தவாரங்களில் சாதாரண சூடைமீனின் விலையே 160\= ரூபா ஒரு கிலோவுக்குப்போனது. ஐந்து கிலோ சூடைமீனின் விலையும் ஒரு மூடை நெல்லின் விலையும் ஒன்று.

சில வேளைகளில் நான்கு கிலோ மீனின் விலையைவிடக் குறைவாக இருக்கிறது ஒரு மூடை நெல்லின் விலை. நெருக்கடி காலத்தில் உயிரிழப்புமுதல் நஸ்டத்தையும் சிரமத்தையும் எதிர்கொண்ட மீனவர்கள் இப்போது லாபத்தையும் வசதியையும் பெறவேண்டிய அவசியம் இருக்கலாம். ஆனால் அதேவேளை இங்குள்ள மக்களின் நலனும் பேணப்பட வேண்டுமல்லவா.

நாம் இங்கிருந்து எமது மீனையோ கணவாய், நண்டு, இறால் போன்றவற்றையோ கொழும்புக்கு ஏற்றியனுப்பி விடுகிறோம். பதிலாக பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ரின்மீனைப் பின்பு வாங்குகிறோம். இப்போது இந்த நிலைமைதான் பெரும்பாலும் நடைமுறையில் இருக்கிறது. சந்தையில் நிலவும் விலையேற்றம் மக்களை இந்த நடைமுறைக்குத் தூண்டியிருக்கிறது.

எங்கள்கடலின் உணவை, அதன் ருஷியை, அதன் பெறுமதியை, தரத்தை அறியமுடியாத, பெறமுடியாத ஒரு நிலை உருவாகி வருவதென்பது பெருங் கவலைதரும் விடயமாகும். எங்கள் உணவுடன் இணைந்ததே எங்கள் பண்பாகும். ரின் மீனை வாங்கி நாம் கூழ் சமைக்க முடியுமா? அது மட்டுமல்ல ரின் மீனை வாங்கும் போது அது பிறருக்கான வருவாயைக் கொடுப்பதாகவும் இறக்குமதித்தீர்வைக்கு எங்களுடைய பணத்தைச் செலவழிப்பதாகவுமல்லவா இருக்கிறது? "தன் தலையை விற்று புண்தலையையா வாங்குவது?"

தமிழீழத்தைப் பொறுத்தவரையில் கடற்பரப்பை அதிகமாகக்கொண்டவர்கள் நாம். ஆனால் அன்றாடத்தின் சிறிய தேவைக்கே கடல் உணவு வகைகளுக்காக பெரும் சிரமப்பட வேண்டியிருப்பதென்பது ஒருவகையில் தலைகுனியத்தக்க நிலைதான். சரியாகத் திட்டமிடப்படாததன் விளைவும் இந்த நிலைமையில் உண்டு. இங்குள்ள சனத்தொகைக்கான வீதத்தைக் கணக்கிட்டு இந்த மக்களின் தேவையை எப்படிப் பூர்த்தி செய்வது என்பது இதில் முக்கியமானது.

காட்டு இறைச்சியும் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மீனின் விலையும் அதிகரித்திருப்பதென்பது வன்னிப் பொருளாதாரத்தின் நிலையில் சாதாரண மக்களை வெகுவாகப்பாதிக்கிறது. எப்படி விவசாயப் பொருட்களுக்கு ஒரு விலை நிர்ணயம், ஏற்றுமதி அல்லது வெளிச்செல்கை ஒழுங்குகள் உள்ளனவோ அது போன்று மக்களின் தேவையையும் உற்பத்தியாளர் நலனையும் மனங்கொண்டு ஒரு நீதியான தீர்வு இதற்குக் காணப்படவேண்டும்.

ஏனெனில் - எங்களின் பொருளை நாங்களே வாங்க முடியாத ஒரு நிலை இருப்பதென்பது எவ்வளவு வேதனைக்குரியது என்ற நிலை ஒரு நாளும் ஏற்படக் கூடாதல்லவா.

---

## ஊக்கமாத்திரை

# நம்புங்கள் நாளை உங்களின் நாளே





வாழ்வில முன்னேற வேண்டும் என்பது எல்லோருடைய ஆசையும். ஆசை மட்டும் போதாது. உழைக்க வேண்டும். இந்த உழைப்புக்கு உற்சாகம் தான் அடிப்படை. உங்களை நீங்கள் கேள்வி கேட்டதுண்டா? என்றாவது கேட்டுப் பாத்திருக்கின்றீங்களா? கேள்வி கேட்டதோ இல்லையோ? இனி மேலாவது தொடங்கிவிடுங்கள்.

நான் யார்? எனது இலக்கு என்ன? குழப்பங்கள் வரும் போது எடுக்கின்ற முடிவுகள் சரியானதா? இன்றைய நிலை திருப்தியளிக்கின்றதா? நாம் எட்ட வேண்டிய தூரங்கள் எவ்வளவு? உங்களையே நீங்கள் கேட்டுப்பாருங்கள்.

தனிமையில் நீங்கள் மட்டும் தனித்திருக்கும் சூழலில் உங்களுக்குள் கேள்விகளை தொடுத்துப்பாருங்கள். சுய பரிசீலனையும், சுய விமர்சனையும், உங்களை மேலும், மேலும் ஒரு படி உயர்த்திக் கொண்டே செல்லும்.

முயற்சியும், பயிற்சியும் அனுபவம் தரும் என்பதனை மறந்து விடாதீர்கள். முதல் முயற்சியிலே வெற்றி கிடைக்கவில்லை என்று கவலைப் படுபவர்கள் எம்மில் மிகப்பலர். உங்களுக்குப் பிடிக்காததுறையில் மனம் ஒன்றாமல் செய்கிற முயற்சி தோல்வியைத்தான் தரும். எந்தச்சாதனையும் ஒரு சின்ன முயற்சியில் தான் தொடங்குகிறது. நீங்கள் அடைய நினைக்கின்ற இலக்கிற்கு தொடக்கம் உண்டு.

பல்லாயிரம் மையில் நடப்பவர்கள் கூட முதலில் சின்ன அடி எடுத்து வைத்துத்தான் தொடங்கியிருப்பார்கள்.

அல்லும், பகலும் தெருவில் இருந்து விட்டு அதிஸ்டம் இல்லையெண்டு அலட்டிக் கொள்வது போல் வெறுமனே அலட்டிக்கொள்வதில் பயன் உண்டா? கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். முடிந்ததைச் செய்யத் துவங்குங்கள். சாதனையாளர்களாக யாரும் பிறப்பதில்லை. உருவாக்குகிறார்கள், உருவாக்கப்படுகிறார்கள்.

வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு நிமிடமும் முன்னேற்றத்தைப்பற்றி சிந்தித்துக் கொண்டு இருக்கின்றான். மாற்றமே மனிதனின் வளர்ச்சிக்கு அடையாளம். மாறாதவன் மனிதன் இல்லை. மாற்றங்கள் தான் அவனை உத்வேகப்படுத்துகின்றன. உழைக்கச் சொல்கின்றன.

எழுத்தாளராக வர வேண்டும் என்கின்றவர் எழுதாமலிருந்தால் எப்படி அவர் எழுத்தாளராக உருவாக முடியும். எழுதத்தொடங்க வேண்டும். நாம் அன்றாடம் எதைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கின்றோமோ அதுவாகவே ஆகின்றோம். சுவாமி விவேகானந்தர் முதல் அமெரிக்க உளவியல் அறிஞர், கோப் மேயர், வரை இதைத்தான் செய்திருந்தார்கள்.

நாம் எதைத் தடையாக நினைக்கின்றோமோ அதையே படிக்கல்லாய் மாற்றி வெற்றி பெற்றவர்கள் அநேகர். ஆபிரகாம்லிங்கன் ஏழ்மையைத் தடையாக நினைத்திருந்தால் அமெரிக்க சனாதிபதியாக உருவாகியிருக்க முடியுமா? பெர்டோல்ட் பிரக்ட் என்ற அறிஞர் குறிப்பிட்டிருக்கிறார். நீ வாழ்வது உண்மையெனில் முடியாது என ஒரு போதும் சொல்லாதே. உங்கள் எதிர் காலத்தைப்பற்றி சிந்திக்க இதுதான் நேரம். இளமைப்பருவத்தில் ஆற்றல் பெற்றிருக்கும் போது தான் இது முடியும். வெற்றியும்,தோல்வியும், உயர்வும், தாழ்வும், இன்பமும், துன்பமும், எம்மிடம் தான் இருக்கின்றன. சின்னப்பணியாக இருந்தாலும் முழுஈடுபாட்டோடு செய்துவந்தால் அதுவே நம்மை உயர்த்திக்காட்டும்.

இன்றைய நிலையில்

**பானுமதி**

சின்னப்பணியாகத் தெரிபவை நாளை பெரிய நிலையை எட்டியிருக்கும். எதையும் சாதாரணமாக நினைக்காதீர்கள். சாதாரணங்கள் சாதனைகளாக என்றோ ஒரு நாள் மாறக்கூடும். உங்களிடம் திறமையில்லை என்றில்லை. ஏதோ ஒரு திறமை எல்லோருக்கும் இருக்கும், ஆற்றலும் திறமையும் ஏதோ ஒரு வகையில் நிச்சயம் இருக்கும். உங்களால் வெற்றிக்கொடி உயர்த்தமுடியும். கடந்த காலத்தை நினைத்து வருந்தலாமா? எதிர்காலத்தைப்பற்றி சிந்தியுங்கள். நிச்சயம் வெற்றி பெறுவீர்கள்.

---

☞ ஒரு நாட்டின் இளைஞர்கள், எதிர்கால சந்ததியின் அறங்காவலர்கள். –பெஞ்சமின் டிஸ்ரேலி

# புதுவருடப் பிறப்பும் சமாதானமும்

சிறி. இந்திரகுமார்

வழமையாக துப்பாக்கி வேட்டோசைகளோடு வடக்கு கிழக்கில் பிறக்கும் தமிழ் சிங்கள புத்தாண்டு இம் முறை பட்டாசு ஓசையோடு பிறந் துள்ளது.

ஐ.பீ.சியும், வெரித்தாசும். புதுவருடப்பிறப்பில் தமிழர்களின்




உறவுகளை உறவுப்பாலத்தினூடு இணைத்ததை இம்முறை தமிழர் சிங்கள வர்களுக்கு ஏ - 9 பாதை திறப்பினூடு ஒரு உறவுப் பாலத்தை பரிசளித் துள்ளார்கள்.

எல்லா வகையிலும் இந்த புத்தாண்டு தமிழர்களை விட சிங்கள வர்களுக்கு அதிக நன்மைகளை பெற்றுக் கொடுத்தபடி பிறந் துள்ளது.

அதாவது இதுவரை சிங்களவர்கள் சந்தித்த வருடப் பிறப்புகளிலேயே இந்த வருடப் பிறப்பே அதிக மகிழ்ச்சியை சிங்களவருக்கு அளித்திருக்கும்.

ஏனென்றால் சிங்கள வர்கள் அரசியல்ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அதிக



இலாபங்களை பெற்றுக் கொள்ள முனைந்துள்ளனர்.

இந்த மகிழ்ச்சியை அனுபவிக்கும் சிங்களவர்கள் நிரந்தர மகிழ்சியாக்கிக் கொள்ள இதுவரை என்ன செய்து விட்டார்கள்?

தங்களுக்கு மகிழ்ச்சியை பரிசளித்த தமிழர்களுக்காக சிங்களவர்கள் எதனை தமிழர்களோடு பகிர்ந்து கொண்டார்கள்?

உண்மையில் சொல்லப் போனால் சிங்களவர்கள் இன்னும் பறிக்கும் மனநிலையிலேயே உள்ளார்கள் பதிலாக எதனையும் கொடுக்கும் மனநிலைக்கு வர வில்லை என்பதே யதார்த்தம்.

சிங்களவர்கள் பறிக்கம் மனோநிலையிலேயே இருப்பார்களானால் தமிழர்கள் தவிர்க்க முடியாதபடி எதனையும் இழக்காமல் காப்பாற்ற வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவார்கள்.

இதுவே சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கு மிடையிலான மீண்டும் இனமுரண்பாட்டை தோற்றுவிப்பதாகவும் இருக்கும்.

அண்மையில் வொஷிங்டன் முன்னோடி மாநாட்டில்

போதும் அதற்கு முன்னும் பின்னும் இந்தியாவின் இராமேஸ்வரத்திற்கும் இலங்கையின் தலைமன்னாருக்குமிடையில் நீண்ட பாலம் கட்டுவது தொடர்பாகப் பேசப்பட்டுள்ளது.

சிங்களவர்கள் தமிழர்களுக்கிடையில் ஏற்படுத்தும் இடைவெளிக்கு முதலில் பாலம் கட்டுவது பற்றி சிந்திக்க வேண்டும். அப்போது தான் தலைமன்னாரிற்கும் இராமேஸ்வரத்திற்குமிடையிலான பாலம் வெற்றியளிக்கும்.

எப்படிப்பார்த்தாலும் தமிழர்களோடு பேசிக்கொண்டே சிங்களவர்கள்

தமிழர்கள் இல்லாவிட்டாலும் சிங்களவருக்கு இந்த கேட்கும் சக்தியை தமிழரே வழங்கினார்கள் என்பதே உண்மை.

இங்கே தமிழர் தரப்பும் சிங்களவர் தரப்பும் இணைந்து கேட்க வேண்டிய நிலையில் தணித்து சிங்களவர்கள் மாத்திரம் கேட்பதே சமாதானத்தின் நெருடலாகவுள்ளது. இதனை விளங்கிக் கொள்ள தமிழர்கள் கூறும் "சாமியைச்சாட்டி பூதம் திண்றகதை'' என்கின்ற பழமொழிதான் பொருத்தமாக இருக்கும்.

நடைமுறையதார்த்தம் தமிழர்களிற்கு இவ்வாறு தான் உணர்த்துகின்றது.

சமாதானத்தின் பெயரால் தென்னிலங்கைக்கு அதிக உதவிகள் கிடைக்கத் தொடங்கிவிட்டது.

ரிலேயே நனைவோம் என்றாராம்" இந்த நிலைதான் தமிழரிற்கு இப்போது உள்ளது.

சமாதானத்தின் பெய

**உண்மையான இலக்கை எட்ட வேண்டுமாயின் தமிழர்களின் வாசல்களிற்கு தென்னிலங்கை கட்டில்களையும் மெத்தைகளையும் அனுப்புவதை விடுத்து தமிழர்களிற்கே உரித்தான அந்தஸ்தையும் உரிமையையும் வழங்க வேண்டும்.**

ரால் தமிழர்களிற்கு கூறப்பட்ட உதவுதொகைகளெல்லாம் இப்போது கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையா கவே

தெரிந்து கொண்டும் நோர்வே சமாதானத்திற்கு இடர் வரவுகளை ஏற்படுத்தக்கூடாது. இடர்வரவுகள் ஏற்படாதவாறே

பார்த்துக் கொள்ள வேண்டும்.

சமாதானத்திற்கு இடர்வரவுகளை ஏற்படுத்திக் கொண்டு எந்த ளவிற்கு "முக்கியமான இலக்கை எட்ட முடியும்.

உண்மையான இலக்கை எட்ட வேண்டுமாயின் தமிழர்களின் வாசல்களிற்கு தென்



னிலங்கை கட்டில்களையும் மெத்தைகளையும் அனுப்புவதை விடுத்து தமிழர்களிற்கே உரித்தான அந்தஸ்தையும் உரிமையையும் வழங்க வேண்டும்.

வரலாற்றில் பாடம் கற்க மறந்திருந்தால் சமாதானக் காலத்திலும் தப்பியோடும் படை வீரர்களின் எண்ணிக்கையிலிருந்தாவது கற்க வேண்டும்

இந்த புதிய வருடப் பிறப்புக் காலத்தில் கூட தமிழர்களின் வாழ்க்கைத்தரத்தில் எந்த மாற்றங்களையும் ஏற்படுத்த வில்லை.

இது தமிழர்கள் இன்னும் அதிகம் போராட வேண்டும் என்பதையே காட்டுகின்றது.

தொடரும் சமாதானக் காலத்திலும் சிங்களவர்களின் மனோ நிலையில் மாற்றம் ஏற்படாதவிடத்து தமிழர் தலைமை பொருத்தமான இடத்தில் பொருத்தமான நேரத்தில் தனது உறுதியைக்காட்டும் போது தவிக்க நேரிடுலாம்.

இந்த வருடப்பிறப்பு மட்டுமன்றி எந்த வருடப்பிறப்பும் தமிழர்களுக்கு எதையும் பெற்றுக் கொடுக்குமா என்பது சந்தேகமே.

பதிலாக தமிழர்கள் சிங்களவர்களிடமிருந்து எடுத்துக் கொண்டால் மாத்திரமே சாத்தியம்.

வங்கிகள் கூட வருடப் பிறப்பில் சேமிப்பிடப்படும் தொகைக்கு பதிலாக குத்துவிளக்கை பரிசளிக்கின்றன.

இலங்கையின் சமாதானத்திற்காக அதிகதுன்பங்களை சேமிக்கும் தமிழரிற்கு எதனை சிங்களவர்கள் பரிசளிக்கப் போகிறார்கள்?

சமாதானத்தின் நன்மைகளை பதுக்கிக் கொள்ள அல்லது அனுபவித்துக் கொள்ள முனைகிறார்கள்.

சிங்களவர்கள் தமிழர்களோடு சமாதானத்தின் நன்மைகளை கூட பகிர்ந்து கொள்ள தயங்குகிறார்கள். இந்த தயக்கம் அல்லது விருப்பமின்மையே சமாதானத்தின் இடர்வரவாகவும் இருக்கிறது

இந்த நிலையில் சமாதானத்தின் நன்மைகளை பகிர்ந்து கொள்ள தயங்கும் சிங்களவர்கள் தமிழர்களின் உரிமைகளை எப்படிப் பகிர்ந்து

ஆனால் சமாதானத்தின் ஒரு தரப்பான தமிழர்களின் கிராமங்களிற்கு இப்பவும் தென்னிலங்கை வியாபாரிகளின் கழிவுப் பொருட்கள் தான் வந்து போகின்றன.

ஒரு வகையில் சிங்களவர் தமிழர்களை தென்னிலங்கை வர்த்தகர்களின் குப்பைக் கூடைகளாக மாற்ற முனைகிறார்கள்.

இதற்கூடாகவும் சிங்களவர்கள் பல மில்லியன் ரூபாய்க்களை ஈட்டிக் கொள்ளுகின்றார்கள்.

உள்ளது.

ஆனால் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த நோர்வே அரசு முப்பது லட்சம் டொலர்களை செலவிட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

ஆனால் தமிழர்களிற்கோஉண்மையான சமாதானமும் வரவில்லை உண்மையான இயல்பு நிலையும் வரவில்லை எல்லாம் வரும் என்ற நிலையே கூறப்படுகிறது.

எல்லாம் வந்தால் தான் தமிழர்களிற்கு நம்பிக்கை போகிற போக்கில் இவை வராமலும் போகலாம்.

தமிழர்கள் பார்த்திருக்கவே தமிழர்களிற்கு ஏற்பட்ட இழப்பீடுகள் பற்றியும் உதவிகள் பற்றியும் எவர் எவரெல்லாமோ பேசுகிறார்கள்.

இது ஒரு வகையில் 1987 களில் ஏற்படுத்தப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்த காலத்தை ஞாபகப்படுத்துகின்றது.

அப்போதும் இப்படித்தான் தமிழர் தரப்பை புறந்தள்ளிவிட்டு இந்தியாவும் இலங்கையும் பேசிக் கொண்டன.

ஆரம்பத்தில் தந்திரோபாயத்தில் வெற்றிகிட்டிய போதும் மூலோபாயத்தில் தோல்வியை தழுவிய நிலைக்கு தள்ளப்பட்டது.

ஏனோ வரலாற்றில் சில சம்பவங்கள் மீளவும் தோற்றுவிக்கப்படுகின்றது. அவை வரலாற்றில் கற்ற பாடங்களிலிருந்து தெளிவடைந்ததாகத் தெரிய வில்லை.

இப்போது நோர்வேயும் இலங்கை அரசோடு சேர்ந்து வொஷிங்டன்மாநாட்டை பொருத்தமான வேறு ஒரு இடத்தில் நடத்த முனையாததால் தமிழர்களிற்கு ஒரு தவறைப் புரிந்து விட்டது.

**சிங்களவர்கள் தமிழர்களுக்கிடையில் ஏற்படுத்தும் இடைவெளிக்கு முதலில் பாலம் கட்டுவது பற்றி சிந்திக்க வேண்டும். அப்போது தான் தலைமன்னாரிற்கும் இராமேஸ்வரத்திற்குமிடையிலான பாலம் வெற்றியளிக்கும்.**

கொள்ளப்போகிறார்கள்.

சமாதானத்தின் பெயரால் வொஷிங்டனில் இலங்கை அரசு ஒன்றுதசம்முன்று பில்லியன் டொலர் உதவி கோருகின்றது.

அதில் நானூற்று ஐம்பத்து ஒன்பது மில்லியன் டொலர் மட்டும் வடக்குகிழக்கு புனரமைப்பிற்கு ஒதக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைவிட இரண்டு மில்லியன் இளைஞர்களிற்கு வேலைவாய்ப்பு வழங்குவது தொடர்பாகவும் சமாதான உபரி வருவாய்க்கும் வழிகோலப்பட்டுள்ளது.

இத்தோடு வருடாந்தம் நூறு கோடி டொலர் மூன்றாண்டுகளிற்கு தொடர்ச்சியாக வழங்கப்படவேண்டும் எனவும் முன் மொழியப்பட்டுள்ளது.

இவையெல்லாவற்றையும் எப்படி தமிழர்கள் விலங்கிக் கொள்வது சிங்களவர்கள் கேட்கும் உதவியை வழங்குவது



ஆனால் தமிழர்களின் நிலை எப்படியிருக்கிறது எனப்பார்த்தால்.

அண்மையில் பெய்த மழையின் போது ஒருவர் கூறினாராம் "வீட்டிற்குள் சென்று கூரையிலுள்ள அழுக்கோடு சேர்ந்து மழையில் நனைவதை விட வெளியில் நல்ல தண்ணீ

குரூரமான உணர்ச்சிகள் கொண்ட மனிதர்க்குக் குத்தலான கண்கள் இருக்கும் - நத்தேனியர் ஹாத்தார்ன்

# பூபதியின் நினைவில்தான் தேசியத் தாய்

## தேசியத்தாய்

கடலும் அழகும் நிறைந்த மண்ணாம்
காய்கறி நெல்லும் விளையும் மண்ணாய்
அன்னை பிறந்தாள் அம்மண்ணில்
தமிழீழம் எல்லாம் தன் இல்லமென
தாயாய் வாழ்ந்தாள் அம்மண்ணில்

தாயகப் பிள்ளை தன் பிள்ளை
அயலவன் வந்து அடிமை கொள்ள
அகிம்சை வழியில் போர் தொடுத்தாள்
வீரத்தாயாய் வீறுகொண்டு
முப்பது நாட்கள் போர் தொடுத்து

வீரத்தாயாய் வித்தானாய்
அயல் அகிம்சை நாடோ
தலை குனிய
தமிழினம் எல்லாம் துயரம் கொள்ள
தேசத் தாயாய் நீ ஆனாய்.

பல ஆயிரம் நாட்கள் சென்றாலும்
அன்னை உம்மை மறப்போமோ
தமிழ்த் தேசம் எல்லாம்
உன் பிள்ளையம்மா
எப்படி மறப்போம் உனைத்தாயே

தேசியத் தாயே உம் நாமம்
இத் தேசமே கூறிடும் எந்நாளும்.
மட்டு நகரின் மாணிக்கமே
தமிழ் மக்கள் நெஞ்சின் சுடர் ஒளியே

-ஐங்கரன்

காற்றும் ஒருகணம் அசையாதிருக்க
என் கண்களும் ஒருகணம் உறங்காதிருக்க
வைகறைப் பொழுதும் விடியாதிருக்க
அந்த மலராத நாட்களில் கூட - அன்னை பூபதி
மரணத்தை தழுவியிருந்தால் - ஒரு கணம் நான்
அமைதியாயிருந்திருப்பேன்.

என் பேனையில் மைகள் உறங்காதிருந்தால்
அந்த பேப்பரில் செய்திகளை பார்க்காதிருந்தால்
அந்த பாரத தேசம் மோசம் செய்யாதிருந்தால்
எங்கள் பாசமிகு அன்னையை பார்த்துக்
கொண்டேயிருப்பேன்.

ஆயிரம் ஆண்டுகள் அசுர வேகத்தில் ஓடினாலும்
அந்த ஆராச்சியாளர்கள் அணு அணுவாய்
சிந்தித்தாலும்
தர்மத்தின் வாயிலில் நின்று கொண்டு
அந்த பார் போற்றும் தியாகி தாயை போற்றி
மகிழ்வேன்.

பூபதிதாயின் எழுச்சி நினைவில்
எங்களின் அகிம்சைப் போர் வளர்ந்த நிலையில்
அந்த பாரத பாவிகள், ஆட்கொல்லி விசமாய்
அன்னையின் தியாகத்தை எதிர்க்கவந்தது
எப்படி நியாயமாகும்?
அன்னையின் வேள்விகள் நியாயமானது
அதனை அளிக்க நினைத்ததுதான்
கொடூரம் கொடூரம் கொடூரம்.

–கே.எஸ். மணியம்

## அன்னை பூபதி

அன்புத் தாயே பூபதி
அகிம்சைத் தாயே பூபதி
விடுதலை வேண்டி வித்தான தாயே
விடியும் திசை அதோ
நாட்டின் நல் விடிவிற்காய்
நாம் கொடுத்த பலிகள் எத்தனை -
இல்லை
அவன் எடுத்த பலிகள்
தேசம் விடிகிறது. தேகம்
சிலிர்க்கிறது
தேடிப் பெறும் சுதந்திரம்
சண்டை பிடித்து சரித்திரம் படைத்து
- இன்று
சமாதானம் அழைக்குதம்மா.
தாயே நம் தலைவன் இருக்கின்றான்
தலை சாய்ந்து தூங்கம்மா.

என்.சுஜாதா




## அணையா விளக்கு அன்னை பூபதி

அன்னை பூபதி!
அகிலமே ஆர்வமுடன் அறிந்து
கொண்ட
அகிம்சைப் போராளி!
ஆகாரமின்றிய சத்தியப் போரில்
ஆருயிரை ஆகுதியாக்கிய-முதல்
தமிழ்ப் பெண் போராளி!
அமைதிகாக்கவந்த படையினர்
அன்னை மண்ணிலே மூட்டிய
அட்டூளியத் தீயை அணைக்க
அகிம்சைத் தீ மூட்டி
அதனில் நெருப்பாயெரிந்தவள்!
தமிழீழம் காப்போமென்று
தமிழ் மண்ணில் தரையிறங்கி
தமிழர்களை மிதித்த போது
நீதி கேட்டுப்
பொங்கியெழுந்தவள்!
தமிழ் மண் மீட்கப் போராடிய
தமிழ்ப் புலிகளுக்கு
தார்மீக ஆதரவு தந்தவள்!
புலிகள் வேறு தமிழர் வேறென்று
புதுடில்லி சொன்ன போது
தமிழ் எல்லாம் புலியென்றே
தரணியறிய வைத்தவள்!
நீராகாரம் கூட அருந்தாமல்
நினைவிழந்து போன போதும்
தமிழ் மண்ணையே நினைத்தவள்!
தமிழுக்கே உயிரையீந்து
தமிழ் மண்ணிலே வித்தாகி
தமிழ்த் தலைவனே வணங்கிட
தமிழ்த் தாயானவள்!
நீலக் கடலோரம்
நிறைவாய் வாழ்ந்திடும்
அன்னையே!
அகிலமுள்ளவரை வாழ்ந்திடுவாய்
நீயே!

வே.தவராசா

## பார்த்துக்கொள் அன்னையே

தியாகத்தின் தீபமே
ஈழத்தின் வேதமே
அகிம்சையின் அரியணையில்
அமர்ந்திட்ட அன்னையே – உன்னை
பார்போற்றும் வேளையில் – ஈழத்தில்
மலர்ந்திடும் காலையில் – நாம்
சாற்றிடும் மாலையில் – ஈழம்
வென்றிடும் நாளையில் – என்றும்
உன் நினைவிருக்கும்
தாயே.....
உயிர் வற்றி உலர்ந்தது
உன் உடல்
தீ பற்றி எரியுதெம்
நெஞ்சக் கடல்
உன் தியாகத்தின் ஈரம்
எம்வெற்றிக்கு உரம்
அன்னையே....
உன்னைப் போலவே
உன் பாதச்சுவடுகளும் – இன்னும்
பசுமையாகவே உள்ளது
பற்றிக்கொள்ள தயாராய்
எம் கரங்கள்
பார்த்துக் கொள் அன்னையே
ஆயிரம் ஆயிரமாய்
அலையென எழுந்து
மலைகளும் கடந்து – பகை
தலைகளைக் கொய்து
வென்றிடுவோம் ஈழம் – உனை
நினைந்திடுவோம் நாளும்.

சி. கிஸ்ணா

# 15ம் ஆண்டு நினைவில்...

# நேர்நோக்கு

## மாற்ற மெதுவுமில்லை

வன்னியில் மாணவர்கள் கணிதபாடத்திலும் ஆங்கில பாடத்திலும் பின்தங்கியவர்களாக இருப்பதை அண்மையில் வெளியாகிய க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள் சுட்டிக்காட்டுகின்றன. இதற்கு இங்கு நிலவும் மோசமான ஆசிரியர் பற்றாக்குறையே காரணம் என கல்விப் பணிப்பாளர் தெரிவித்திருக்கிறார்

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பொதுவாகவும் வன்னியிலும் கிழக்கில் சில பகுதிகளிலும் குறிப்பாகவும் ஆசிரியர் பற்றாக்குறை கடந்த பல வருடங்களாக நிலவி வருகின்றமை வெளிப்படையான ஒன்று. இது குறித்து கல்வி அதிகாரிகளும் கல்விச் சமூகமும் தீவிரகவலை கொண்டு அதனை ஓரளவேனும் நிவர்த்திக்கும் வகையிலேயே தொண்டர் ஆசிரியர்களை நியமித்தனர்.

கொடூரமான யுத்தம், பொருளாதாரத்தடை என்பவற்றின் மத்தியிலும் கல்வித்தரம் குன்றி விடக்கூடாது என்பதில் உறுதியான நிலைப்பாட்டை இவர்கள் எடுத்திருந்தமையின் விளைவாக இவ்வாறு சேவை உள்ளம் கொண்ட இளையவர்களை நியமித்து நிலைமையைச் சீர் செய்து வந்தனர்.

இவ்வாறு தொண்டர் ஆசிரியர்களாகக்கடமையாற்றி வந்தவர்களும் பாடசாலைகளில் நிலவிய வளப்பற்றாக்குறை ஒருபுறம். தமது சொந்தப் பொருளாதாரப் பிரச்சினை மறுபுறமாக இருந்த போதும்-பத்து வருடங்கள் கூட- மிகக்குறைந்த ஊதியத்துடன் பணியாற்றிவந்தனர்.

ஆனால் தமிழ் மாணவர்களின் கல்வி குறித்து சிறிது கூடச் சிந்திக்காத ஆட்சியாளர்கள் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தென்பகுதிப் பாடசாலைகளில் மேலதிக ஆளணியைப் பராமரித்து வந்த ஆட்சியாளர்கள் வடக்கு - கிழக்கிலுள்ள மாணவர்களுக்கு ஆசிரியர்களை நியமிப்பதற்கு நிதிப்பற்றாக் குறையை காரணம் காட்டி மறுத்து வந்தனர். யுத்தத்துக்கு பெரும் நிதியை செலவிட்டு வந்த ஆட்சியாளர்கள் தமிழ் மாணவர்களின் கல்விக்கு நிதி ஒதுக்க மனமில்லாதிருந்தனர்.

எவ்வாறாயினும் கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக தமிழ் கல்விச் சமூகம் எடுத்த தீவிர முயற்சி தமிழ் மாணவர்களின் கல்வியைப் பேணிவந்தது. இதற்குப் பின்னால் பல அர்ப்பணிப்புக்கள் இருந்துள்ளன.

இப்பொழுது நிலவும் சூழ்நிலையில் இப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். கணித பாடமும் ஆங்கில பாடமும் மாணவர்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதற்கு விளக்கம் எதுவும் கொடுக்கத் தேவையில்லை ஆனால் அப்பாடங்களுக்கே ஆசிரியர் பற்றாக்குறையிருப்பது அம் மாணவர்களின் கல்வி குறித்து இன்னமும் கூட அரசாங்கம் கவலை கொள்ளவில்லை என்பதையே வெளிப்படுத்துகிறது.

ஆனால் இப்பொழுது தமக்கு நிரந்தர நியமனம் கோரி தொண்டராசிரியர்கள் நடத்திய போராட்டம் குறித்து ஆராய்ந்த சிறிலங்கா பிரதமர் 1000 ஆசிரியர்களை நியமிக்க இணங்கியிருக்கிறாராம். ஆனால் தென்பகுதியிலுள்ள தொண்டராசிரியர்கள் இதற்கெதிராகப் போராடுவார்களோ என யோசித்து வருகிறாராம்.

பசிப்பவனுக்கு உணவு கொடுத்தால் செமியாக்குணத் தால் வாந்தியெடுப்பவன் என்ன சொல்லுவானோ என அவர் கவலைப் படுகிறார்.

இது சிறிலங்கா ஆட்சியாளர்களின் 55 வருடகால "சுதந்திர" அரசியலையும் புலப்படுத்துகிறது. அதாவது உரிமை மறுக்கப்பட்ட தமிழ் மக்களின் உரிமையை வழங்குவதற்கு ஆட்சி அதிகாரம் கொண்டுள்ள சிங்கள மக்கள் எதிர்ப்பார்கள் என்று கூறித் தான் கடந்தகால ஆட்சியாளர்கள் தமிழர்களின் உரிமையை மறுத்து வந்தார்கள். அதே பாரம்பரியத்தையே தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் பின்பற்றுவாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

காலம் காலமாகத்தமிழ் மாணவர்களின் கல்வியை வெட்டி வீழ்த்தும் பல முயற்சிகள் சிங்கள ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. மொழிவாரித் தரப்படுத்தல் முதல் கற்றல் உபகரணங்களுக்குத் தடை விதித்தல் வரை இந்த நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

இப்பொழுது மிகக் குறைந்த நிரந்தர ஆசிரியர்களைக் கொண்ட இப்பிரதேசங்களில் இந்தக் குறையை நிவர்த்தி செய்த தொண்டராசிரியர்கள் குறித்து நல்ல முடிவெடுக்க சிறிலங்காப் பிரதமர் தயங்குவது ஆச்சரியப் படத்தக்க ஒரு விடயமாகும்.

**வேலவன்**

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி..)

இன்று சந்திரிகா - ஜே.வி.பியின் கூட்டணிக்கான உறவு நெருக்கத்தை இந்தப் பின்னணியில் பார்ப்பதும் முக்கியமானதாகும்

இவர்களின் அரசியல் இணக்கப்பாட்டு நெருக்கத்திற்கு ஒரு புறசக்தியின் அறிவுறுத்தலுடன் கூடிய அழுத்தம் இருப்பதாக சிங்கள ஊடகவியலாளர்கள் குறிப்பிட்டிருப்பதையும்சிந்திக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் சந்திரிகாவின் இந்திய விஜயம் பற்றி யோசிப்பது நல்லது. இந்த விஜயம் தனிப்பட்ட சந்திரிகாவின் விஜயம் அல்ல. கதிர்காமர், பாலபட்ட பெண்டி, உட்பட அவரது பரிவாரங்களையும் உள்ளடக்கிய விஜயமாகும்.

இந்த விஜயத்தின் போது அவர் ஜெயலலிதா, சோனியா குஜ்ரால், வாஜ்பாய், அப்துல்கலாம் , யஷ்வந்த் சிங்ஹா, அத்வானி மற்றும் அந்தப் பிரச்சினைகக்குரிய உயர் பாதுகாப்புவலய மீள் குடியேற்ற ஆலோசகர் நம்பியார் வரை அனைவரையும் சந்தித் துள்ளர்.

இதன் போது வடக்கு கிழக்கில் புலிகள் தனியரசை உருவாக்கிவிட்டனர் என்று இந்து பத்திரிகைக்குப் பேட்டியும் கொடுத்துள்ளார். ரணில் அரசு புலிகளுக்கு அவர்கள் கேப்பதையெல்லாம் கொடுத்துவருகிறது என்றுள்ளார். இலங்கை இனப்பிரச்சினையில் இப்போது எந்த நாடு ஆர்வம் காட்டி அநுசரணை செய்தாலும் இறுதி ஆர்வம் காட்டக்கூடிய நாடாக இந்தியாவே இருக்கும் என்றுள்ளார். ஒருமைப்பட்ட இலங் கைக்கு தீர்வு அமைய வேண்டு மென்பதில் இந்தியா உறுதியாக இருக்கிறது என்றும் தெரிவித் துள்ளார்.தனது அரசு முன்னர் முன்வைத்த சமஷ்டி அரசியலமைப்பை இந்தியா ஆதரிக்கிறது என்று உறுதி கூறியுமுள்ளார். தனக்கு இன்னமும் புலிகளின் மரண அச்சுறுத்தல் இருப்பதாகவும் புலம்பியுள்ளார். ரணில் அரசை மக்கள் தனக்களித்த கடமைப்பொறுப்பின் அடிப்படையில் கலைக்க வேண்டிய நிலைஏற்படலாம் என முன்னெச்சரிக்கை விடுத்தும் உள்ளார்.

இந்தியாவில் வைத்து கூறப்பட்ட சந்திரிகாவின் இந்த வார்த்தைகளின் பின்னணியில் ஏதோ ஒரு மறைகரத்தின் ஆதரவு அழுத்தம் இருப்பதை எவரும் புரிந்து கொள்வது சுலபமானதே....

சந்திரிகா இந்த இந்திய விஜயமும், இத்தகைய கருத்தியல் வெளிப்பாடும் யார்யாருக்கோ, என்னென்ன செய்திகளை யெல்லாம் சொல்லவே செய்கின்றன...

எமது மக்கள் சந்திரிகாவின் 'வரலாற்றை பரம்பரையின் அடிமட்டத்திலிருந்தே புரிந்து கொண்டவர்கள் அதே போல தான் இந்தியாவையும்....

அனுபவபாடங்கள் அவர்களே எப்பொழுதும் விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் வைத்தே இருக்கும்...

எச்சரிக்கையாக இருக்க வேண்டியவர்கள் சமாதான ஆர்வலர்கள், அநுசரணையாளர்கள், ஏற்பாட்டாளர்கள் மற்றும் அவர்களின் பக்கத் துணையாகவும், பின்னணியிலும் இயங்கும் சமாதான 'கிரியா ஊக்கி'களான சர்வதேச சமூகத்தவர்கள் தான்.

ஏனெனில் சமாதான முயற்சிகளுக்கு பின்னடைவோ தோல்வியோ ஏற்படுமானால் அது அவர்களின் அமைதி விருப்புக்கு மட்டுமல்ல, ராஜதந்திர முயற்சி களுக்கும் கிடைத்த பின்னடை வாகவும் தோல்வியாகவுமே இருக்கும்....


## புதிய வெளியீடு

யாழ். ஆசிரியர் வேலுப்பிள்ளை அன்பழகன் அவர்களது தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை வழிகாட்டி புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டது. பாடம் சார்ந்த உதவிக் குறிப்புகள், பயிற்சி வினாக்கள், விடைகள் உள்ளடங்கியது. வன்னியில் சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

**வன்னியில் எமது முகவர்:-**

(01) பிள்ளையார் புத்தகசாலை, கண்டி வீதி, கிளிநொச்சி. (சி -7849) (02) அறிவெளி புத்தகசாலை, புதுக்குடியிருப்பு.


## படத்திற்கு மெருகூட்டுங்கள் –14



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள் –14

........................................

........................................

........................................

........................................

பெயர் : ........................................

முகவரி : ........................................

........................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்- 13



செ. வேழினி,
சந்தையடி, வட்டக்கச்சி,
கிளிநொச்சி.

### பரிசுக்குரிய வரிகள

**போரின் சுமையில் பங்கேற்றேன் - ஏனெனில்
என் தோழிற் சுமை குறையுமென்று
இப்போ போரின் சுமைகுறைந்தும்
என் தோழிற் சுமைகுறைய வில்லை இன்னும்.**

### பாராட்டுக்குரிய வரிகள்

போரோய்ந்த போதும்
பொதிசுமக்கும் வேருக்கு
ஊர்திரும்பும் வேளையிலே
தோள்கொடுக்க யாருமில்லை!!

சி. சோபிதா,
மே/பா குகன்ஸ்ரோஸ்,
கட்டைக்காடு, புளியம்பொக்கனை.

உடலினை வறுமையின் சுமைகள் அழுத்த
உள்ளத்தை எதிர்காலக் கனவுகள் நெருட
பொதி சுமக்கும் மனித மாடல்ல இவன்
தாயகத்தின் விடியலை நனவாக்கும் சுமைதாங்கி.

திருமதி. வ. சிவஞானம்,
230 - சில்வா வீதி,
வட்டக்கச்சி.

காலங்கள் மாறியென்ன - இங்கு
நவீனங்கள் தோன்றியென்ன
என் தோழ்கள் சுமக்கின்ற சுமைதானே
குடும்பச் சோற்றுக்கு வழிகோலும் தடங்கள்.

த. ஜெமிந்தினி,
கட்டுவன் மேற்கு,
தெல்லிப்பளை - யாழ்ப்பாணம்.

உயர்கல்வி மறுப்பு அரசவேலை பறிப்பு!
பிறந்தமண் சென்றுவாழ படைகள் தடுப்பு!
இவற்றுடன் முதுகிலே குடும்பப் பொறுப்பு - ஆயினும்
கலங்காதே விடியலின் பொழுதினுள் துயரம் முடியும்!

க.வாசுகி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

நாட்டில் உனக்கிட்ட பெயர் - மானிடனே
நாட்டாமை என்பதனால்.
வீட்டின் வறுமை நிலை போக்க - நாளும்
பொழுதும் நீ மூட்டை அடிக்கிறாயோ?

து.கிரி,
வன்னி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப[illegible]லயகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.

குறைந்த விலையில், தரமான பொருள்கள், ஒரேகூரையின் கீழ்!

முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட

# "அன்னை நாகா" புட்சிட்டி

பண்டிகைக்கு, தினசரி தேவைகளுக்கு
எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்.

- காய்கறி வகைகள்
- உள்நாட்டு, வெளிநாட்டு பழவகைகள்
- மீன் வகைகள்
- இறைச்சி வகைகள்
- ஐஸ்கிறீம் வகைகள்
- பால்மா வகைகள்
- பழப்பானங்கள்
- சிகை அலங்காரப்பொருள்கள்
- வாசனைப்பொருள்கள் [சென்ற் வகைகள்]
- மளிகைப்பொருள்கள்
- வீட்டுப்பாவனைப்பொருள்கள்
- தங்க ஆபரணங்கள்
- மருந்து வகைகள்
- மேலும் பல.....

புதுவருட விலைக்கழிவுகள் ,சலுகைகள்
ஒன்றை வாங்கி மற்றொன்றை இலவசமாக
பெற்றுக்கொள்ளுங்கள்.

விரையுங்கள்!
இச்சலுகை கையிருப்பிலுள்ளவரை மட்டும்.

175, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
✆ 021-2225515, 021-2225223





Annai Nagaa Food City

(சி-7928)



புத்தாண்டில் புதியதோர் சேவை

1980 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை புகைப்படம் என்றால்
உங்கள் மனதில் இனிக்கும் பெயர்

# போட்டோ சண்கோ
# PHOTO SHANKO

வடமாகாணத்தில் புகைப்படத்துறையில் முதன் முதல் கால் பதித்த "போட்டோ சண்கோ"நிறுவனத்தினர் இரண்டு தசாப்தங்கள் மக்கள் சேவை தாண்டிய நிலையில் புதிய நகர்வாக நவீன உலகின் தேவை நாடி ஆரம்பித்துள்ள புத்தாண்டுச் சிறப்புச் சேவை.

தொழில்நுட்பம் நிறைந்த, துல்லியமான புகைப்படங்களை உங்கள் கையில் தவழவிடவும், சில மணித்துளிகளில் உங்களை உங்கள் கையில் புகைப்படமாக்கி பெற்றுக்கொள்ளவும் நீங்கள் நாடி, ஓடி வரவேண்டிய ஒரே நிறுவனம்

## டியிற்றல் கலர் லாப்
## DIGITAL COLOUR LAB

Exclusive Photo and Digital Printing



எமது அங்கீகாரம் பெற்ற முகவர்கள்:

ராஜன் குயிக் போட்டோ - அச்சுவேலி
ஜெகா ஸ்ரூடியோ - ஆனைக்கோட்டை
சிவா ஸ்ரூடியோ - பண்டத்தரிப்பு
தர்ஜிதன் வர்த்தக நிலையம்- தெல்லிப்பழை
சோதி புகைப்படக் கலையகம்- மல்லாகம்
சிற்றி பாமசி - யாழ்ப்பாணம்
பொறின் போட்டோ - ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

## போட்டோ சண்கோ டியிற்றல் கலர் லாப்
## PHOTO SHANKO Digital Colour Lab

இல-204,கண்டி வீதி,
வவுனியா.
✆ 024-21130



கிளை: இல-84, காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.
✆0777-110261

(சி-8073)


இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 18 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.